புது எழுத்து

மொழிபெயர்ப்பு இணைப்பு

14

ஆசிரியர் மனோன்மணி

அஞ்சலி

நகுப் மெஹ்பூஸ்



உஸ்தாத் பிஸ்மில்லா கான்

உஸ்தாத்தின் கடைசி நேர்காணல்

(புதன்கிழமை ஆகஸ்டு 23, 2006)
தமிழில் சாந்தி சாதனா.

பதினான்கு வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த அவரது மனைவியின் மரணம் ஷெனாய் மாமேதையான பிஸ்மில்லாகானை தேற்றமுடியாத மீளாத்துயரில் ஆழ்த்தியது. ஆனால் அவர் அத்துயரத்தை 'ஷெனாயை' தனது 'மனைவியாக' (பேகம்) ஏற்பதில் மாற்றிக் கொண்டார்.

'பாரதரத்னா'வான உஸ்தாத் பிஸ்மில்லாகான் தனது ஷெனாயை தனது படுக்கையில் தலையணைக்கு அடியில் வைத்துக் கொண்டார். அது அவரைக் கவர்ந்தது. 'அது அவருக்கு இசையையும் ராகங்களையும் பற்றி நினைக்கும் சக்தியை அளித்தது' என்று கூறுகின்றனர், அவரது மரணத்திற்கு முன்பான முந்தைய தினத்தன்று மாமேதையின் கடைசி நேர்காணலை கண்ட தம்பதிகளான நீனா ஜா மற்றும் சிவ்நாத் ஜா. மறக்கப்பட்ட கலைஞர்களின் நலனுக்காக அர்ப்பணித்து கொண்ட பிரதிநிதியாக 'பிஸ்மில்லாவை' ஜா

தம்பதி கண்டனர். ஆகஸ்டு 18-19 அன்று பதினாறு மணிநேரம் உஸ்தாத்துடன் தங்கி அவரது உடல்நலம் மற்றும் பல விஷயங்கள் பற்றி கேட்டறிந்தனர், 'இந்தியா கேட்டில்' வாசிக்கும் அவரது நிறைவேறாத ஆசை உட்பட.

'நான் இன்னும் பயிற்சி செய்த வண்ணம் இருக்கிறேன்— புதிய ராகத்தை உருவாக்க, ராக ப்ரவாகத்தை இந்தியா கேட்டில் ஏற்படுத்த' என்று கூறினார் ஜா தம்பதியிடம், கோவில் நகரமான வாரணாசியின் 'ஹெறரிட்டேஜ் மருத்துவமனை' அறை எண். 101ல் படுக்கையில் படுத்த வண்ணம்.

ஆகஸ்டு 9 ஆம் தேதி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஜா தம்பதியால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. மிகவும் தளர்ச்சியாகவும், உடல் நலமற்ற ஷெனாய் மாமேதை இந்த நீண்ட நேர்காணலின் போது அழுதார், தூங்கினார், பழைய நினைவுகளில் ஆழ்ந்தார். இழந்த எண்ணங்கள் மற்றும் அவரது கனவுகளைப் பற்றி பேசினார். குறிப்பாக மெல்லிசை அரசியான லதா மங்கேஷ்கரை மரணத்திற்கு முன்பாக சந்திக்க விரும்பினார். 'அவர் (லதா) எனது இளைய சகோதரி போன்றவர். அவரது குரலில் அற்புத சக்தி இருக்கிறது. நான் அவரை சந்திக்க வேண்டும்' என்று கூறினார்.

அவருக்குப் பிரியமான பாடகர் பற்றி கேட்கும் போது பிஸ்மில்லாகான் கூறினார், எனக்கு 'பேகம் அக்தரைப்' பிடிக்கும். ஆனால் லதாவுக்கு நிகர் லதாதான். இன்றைக்கும் அவரிடத்தை யாராலும் நிரப்ப முடியாது. சிலரிடம் மட்டுமே அவரது குரலின் அதிசயம் இருக்கும். இது சம்பந்தமாக இருபது வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார். "நாங்கள் (நானும் எனது மனைவியும்) தூங்கிக் கொண்டிருந்தோம். நள்ளிரவு.

எங்கோயோ, யாரோ பேகமின் இசைத்தட்டை ஒலிக்கச் செய்து இருந்தனர். 'தீவானா பனா தீ ... நான் திடீரென்று எழுந்தேன். பாடலை அனுபவித்த வண்ணம் இருந்தேன். எனது மனைவியை எழுப்பினேன். (காஃபி குஸ்ஸா ஹோ கயி) அவளுக்கு மிகவும் கோபம் வந்து விட்டது. நள்ளிரவில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? (ஆதி ராத் மே க்யா ஹோ ரஹா ஹை?). 'இது என் அறிவிற்கு அப்பால் உள்ளது. நரகத்திற்கு போ' என்று நான் அவளிடம் கூறினேன். அத்தகைய கடுஞ்சொல்லை அவரது மனைவியிடம் உபயோகித்த அவர் கூறினார், 'ஆமாம் அவள் என் மனைவி' நான் மிகவும் அவளை நேசிக்கிறேன்.' அடுத்த நாள் எனக்குத் தெரிய வந்தது. நள்ளிரவில் நான் கேட்டது இசைத்தட்டு அல்ல, ஆனால் பேகம் அக்தரே பாடிக் கொண்டிருந்தார் என்று. அந்த இரவை என்னால் மறக்க முடியாது. விஸ்வநாதர் ஆலயம் மற்றும் மங்களாதேவி ஆலயம் இரண்டிற்கும் அவரால் போக இயலாதது பிஸ்மில்லாகானை மிகவும் வருத்தமடையச் செய்தது.

அவருடைய குடும்பத்தினரைப் பற்றி கூறும்போது சொன்னார், 'பெரிய மகனான மெஹ்தாப் ஹுசைன் ஷெனாயை நன்றாக வாசிப்பவன். அவரைப் பொறுத்தவரை நய்யாரும் நன்றாக வாசிப்பவன். ஆனால் அதிக பிரியத்துடன் அவர் பேத்தி கேகாஷானைப் பற்றி கூறினார். "அவள் நல்ல பெண். எனக்காக என்னை கவனிப்பதில் மிகவும் கவனம் எடுத்துக் கொள்வாள்." ஏன் அவர் பனாரஸை விட்டு வெளியேற விரும்பவில்லை என்ற கேள்விக்கு பிஸ்மில்லாகான் பதிலளித்தார்.

"கடவுளே ... (யா அல்லா) நீங்கள் உங்களது தாயை விட்டுவிட்டு இருப்பீர்களா? நான் பனாரஸை விரும்புகிறேன். விஸ்வநாதர் ஆலயத்தை விரும்புகிறேன். எனது மகன்கள் மற்றும் மகள்கள், அவர்களின் குழந்தைகள் என

அனைவரையும் விரும்புகிறேன். நான் மிகவும் பெரிய குடும்பத்தை உடையவன். அவர்களின் முன்பாக இறக்க விரும்புகிறேன். உண்மையில் உஸ்தாத் கவனித்து வந்த குடும்பம் 66 உறுப்பினர்களைக் கொண்டது. உணர்வுப் பூர்வமாகக் கூறினால், அவர் "பிஸ்மில்லா ஓட்டல்"நடத்தியது போன்றது என்கிறார் அவரது மகன்களில் ஒருவர்.

அவருக்கு பிறகு அவரது ஷெனாய் என்னவாகும் என்ற கேள்விக்கு மாமேதை கூறுகிறார். என் மகன்கள் மெஹ்தாப் மிகவும் நன்றாக வாசிக்கிறான். நய்யாரும் நன்றாக வாசிக்கிறான். ஆனால் அவர்கள் இசையிலும், பயிற்சியிலும் இன்னும் கவனம் செலுத்த வேண்டும். மத சார்பற்ற சிறந்த மனிதரான இவர் நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் கூறும் இவரது செய்தி - "ஹிந்து, முஸ்லீம், சீக்கியர்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் பரம்பொருளின் படைப்பு.

நமது சமுதாய அமைப்பு அவர்களை பல்வேறு ஜாதியினராகவும், வர்ணத்தவராகவும் பிரித்துள்ளது. காலம் மாறிக் கொண்டிருக்கிறது. மக்களுக்கு நாம் அனைவரும் இறைவனின் படைப்பு என்று உணர்கிறார்களோ அப்பொழுது அமைதியும் அன்பும் நிலவும். எதிர்பார்த்திருங்கள்."

("சமய் பதல் ரஹா ஹை ஜிஸ் தின் லோகோங் கோ யே பாத் சம்ஜ் மே ஆ ஜாயேகி ஹமாரா பைதாஷ் ஏக் ஹை தபி ஷாந்தி அவுர் ப்ரேம் ஆயேகா .... இந்தசார் கரோ")

எமிலிடிக்கன்ஸ்

கடவுளின் எடை

ஞானம் - வானை விட விரிந்தது
ஏனெனில் - அருகருகே பக்கத்தில் வைத்தால்
ஒன்று மற்றது அகப்படுத்திவிடும்
எளிதாக - உன்னையும் சேர்த்து

ஞானம் கடலைவிட ஆழமானது -
ஏனெனில் - அவற்றைப் பிடித்தால் நீலத்திலிருந்து நீலம்
ஒன்று மற்றது உறிஞ்சிக் கொள்ளும் -
கடல் பஞ்சு போல - வாளிகள் - செய்வதென -

ஞானம் கடவுளின் எடைதான் -
ஏனெனில் - அவற்றை எடைபோட்டால் - எடைக்கு எடை -
அவை மாறலாம் - அவை அவ்வாறு செய்தால் -
சொல் ஒலியிலிருந்து மாறுவதென -

தமிழில் **என். எம். பதி**

வயநாடு : மரகதக் கிண்ணத்தில் வழியும் துயரம்.

டி.சி. ஜேக்கப்

தமிழில் அஜிதா

1947-க்குப் பிந்தைய நவகாலனியச் சகாப்தத்தில் வயநாடு நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான பெரும் வன்முறை வெடிப்பை பதிவு செய்தது. 1970-களின் தொடக்கத்தில் இம்மாவட்டம் நக்சல்பாரிகளின் தளமாக பிரசித்தி பெற்றிருந்தது. 1960 - 70 களில் மேற்கு வங்காளத்தில் வெடித்தெழுந்த நக்சல்பாரி இயக்கம் இந்தியா முழுவதும் பரவியது. வயநாடும் அவற்றுள் ஒன்று!

1960-களின் இறுதியில் குடியேறிகள், வணிகர்கள் மற்றும் பெருந்தோட்டக்காரரர்கள் ஆகிய அனைவரும் சேர்ந்து இப்பகுதியின் தன்மையை மாற்றியமைத்து இங்குள்ள ஆதிகுடிகளை விளிம்பிற்கு தள்ளினர். 1940-களில் சீனத்தின் மரபுக்கு ஏற்ற வகையில் நடந்தேறிய மாவோவியப் புரட்சியின் தாக்கத்தால் 1960-களில் இங்கு எழுந்த விவசாயிகளின் கிளர்ச்சி. உண்மையில் சேகுவேரிய சாகசப் புரட்சிக் கோட்பாட்டையே பின்பற்றியது. புரட்சிப் போக்கின் முதல் பொறியாக வயநாட்டின் புல்பள்ளி காவல் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. புல்பள்ளி ஆதிவாசிகளின் பகுதி. உண்மையில் ஆதிவாசிகளால் வடிவமைக்கப்பட்டு இத்தாக்குதல் நடத்தப்படவில்லை. எனினும் அவர்கள் ஈவிரக்கமற்ற வகையில் கண்மூடித்தனமாக ஒருவர் மீதமில்லாமல் காவல்துறையால் தாக்கப்பட்டனர். புரட்சிக்கான நுட்ப ரீதியாக இதைப் பார்க்கப் போனால் காவல் நிலையங்களின் மீது தாக்குதல் நடத்தியதும், ஒரு சில காவலர்களைக் கொன்று ஆயுதங்களைக் கைப்பற்றியதும் தோல்விகளாகவே கொள்ள முடியும். ஆனால் வயநாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த அரசின் அடக்குமுறையை ஊடுருவித் தகர்க்கும் இடதுசாரிப் போராளிகளின் புதிய அரசியல் சகாப்தத்தை அது தொடங்கி வைத்தது என்பதில் வெற்றியடைந்தது.

இந்தச் சமயத்தில்தான் இடதுசாரிப் பேராளிகள் நாடு முழுவதும் - குறிப்பாக மேற்கு வங்காளத்தில் - தனிநபர் அழித்தொழிப்புவாதத்தை முன்வைத்தனர். அதாவது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற நடத்தும் ஆயுதப் போராட்டத்தை சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்ல வர்க்க எதிரிகளை அழித்தொழிப்பது, பெரும் நகர்ப்புறங்களைச் சுற்றிலும் உள்ள கிராமப்புறங்களை விடுவிப்பது, மற்றும் அரசுக்கெதிரான இத்தன்மையிலான மக்கள்போரை தொடர்ந்து நடத்திடுவது ஆகியவையே சிறந்த திசைவழியெனக் கருதினர். அனைத்திந்திய அளவில் வங்கத்தின் சாருமஜூம்தார் இக்கருத்தியலின் முன்னோடியாக இருந்தார். இச்சமூக அமைப்பை அரைக்காலனிய - அரை நிலப்பிரபுத்துவ தன்மையிலானது என வரையறுத்த அவர்,

தனிநபர் அழித்தொழிப்புடன் கூடிய போர்பாதை என்பது மக்கள்போரை வடிவமைக்கும் தந்திர உத்தி என முன்மொழிந்தார். கோட்பாட்டளவில் கிராமப்புறங்களை மையப்படுத்திய ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் அது வெகுவிரைவிலேயே கல்கத்தாவை மையமாகக் கொண்ட நகர்ப்புற ஆயுதப் போராட்டமாகவும் உருவானது.

வயநாட்டில் இடதுசாரிப் பாராளுமன்றவாதிகளிடம் இருந்து விலகி வந்த அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட வர்க்கீஸ் கைது செய்யப்பட்டு பின்பு மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டார். இதுபோன்ற நிகழ்வுகள் வயநாட்டை புரட்சிகர இடதுசாரிகளின் மறுபெயராக்கியது. அரைக்காலனிய - அரைநிலப்பிரபுத்துவ நாட்டில் கொரில்லா போர்க்குழு மண்டலங்களை ஏற்படுவதற்கு அடிப்படையாக ஒன்றாக நக்சல்பாரிகள் கருதுவது அதன் தனித்தன்மை பொருந்திய நிலப்பகுதிகளைத்தான். வயநாடு அதற்கு ஏற்றதாக இருந்தது. அரசு அங்கு ஏற்படும் மாற்றங்களைத் தீவிரமாகக் கண்காணித்ததோடு சாலைகளை அமைப்பது மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற கட்டுமானப் பணிகளையும் மேற்கொண்டது. உண்மையில் நக்சல்பாரிகளின் செயல்பாடுகள் வயநாட்டை அணுகக்கூடிய மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய நிலையை மிகவும் எளிதாக்கியது.

காவல்நிலையத்தின் மீதான முந்தைய தாக்குதல்களும், அதற்குப் பின்னர் நடைபெற்ற நிலப்பிரபுத்துவ சக்திகள் மற்றும் காவல்துறை உளவாளிகள் ஆகியோர் மீதான தாக்குதல்களும் பொதுவில் நக்சல்பாரிகளின் நடவடிக்கை எனச் சொல்லப்பட்டாலும் அவை வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் வேறுபாடு கொண்டவையாக இருந்தன. காவல் நிலையத்தின் மீதான முந்தைய தாக்குதல்கள் இயல்பான நகர்ப்புறக் கொரில்லாக்களின் நடவடிக்கையாக இருந்தது. அதே வேளையில் பிந்தைய தாக்குதல்கள் இயல்பான நகர்ப்புறக் கொரில்லாக்களின் நடவடிக்கையாக இருந்தது. அதே வேளையில் பிந்தைய தாக்குதல்கள் கிராமப்புற இயல்பு மற்றும் தேவையான அளவு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஆகியவற்றைக் கொண்டிருந்ததோடு அரசுபடைகளோடு நேரடியாக மோதாத தாக்குதல்கள் ஆகும். வர்க்கீஸ் ஒரு மாவோவியப் புரட்சியாளர். அதே வேளையில் காவல் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்திய தலைவர்கள் சாகசக் கோட்பாட்டாளர்கள். இதன் மூலம் விவசாய/ஆதிவாசி இயக்கத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு தெள்ளத்தெளிவாகிறது. மேலும் கிராமப்புற விவசாயப் போராளிகள் அரசு எதிர் நடவடிக்கைகளை அப்படியே பின்பற்றவும் இல்லை. அவர்கள் வடிவம் மற்றும் உள்ளடக்கம் ஆகிய இரண்டையும் தங்கள் வர்க்கக் கூட்டினுள்ளும் பொருத்திப் பார்த்தனர். சமூகத்தில் கடுமையாக ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் ஆதிவாசிகளின் விடுதலையை இலக்காகக் கொண்டே வர்க்கீஸ் செயல்பட்டார். அதனால்தான் இன்றும் அவர் ஆதிவாசிகள் தங்கள் தலைவர்களை அழைக்கப் பயன்படுத்தும்

மரியாதைக்குரிய சொல்லான "பெருமான்" எனும் பெயரால் நினைவு கூறப்படுகிறார்.

அவரது அணுகுமுறையிலுள்ள சாதக - பாதகங்கள் விவாதிக்கப்பட வேண்டியவையே! ஆனால் ஆதிவாசிகளின் உணர்ச்சிக் கூறுகளை வெளிப்படுத்திய விதத்தில் அவர் தவறேதும் இழைக்கவில்லை. இன்றும் கூட எந்த ஒரு ஆதிவாசிப் போராளியின் எதிர்ப்பும் உடனடியாக நக்சல்பாரிகளின் செயல் அல்லது நக்சல்பாரிகளின் தூண்டுதல் என்று உண்மைக்கு மாறாகப் பதிவு செய்யப்படுகிறது. ஆயினும் இது அரசியல் அமைப்புச் சட்டம் அளித்திருக்கின்ற உறுதிசெய்யப்பட்ட குறைந்தபட்ச உரிமைகளை ஆதிவாசி இயக்கங்கள் பெறுவதற்குத் தடையை ஏற்படுத்துகிறது. நக்சலியம் அரசின் அடக்குமுறைக்குத் தோதான ஒரு கருவியாக ஆகியுள்ளது. வயநாட்டில் மட்டுமல்ல, நாடு முழுவதிலும் எங்கெல்லாம் போராளி இயக்கங்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகக் போராடுகிறதோ அங்கெல்லாம் இதைக்காண முடியும்.

வயநாட்டு ஆதிவாசிகளிடையே புதிய அரசியல் விழிப்புணர்ச்சி எழுந்தும், அதற்குக் காரணமான வர்க்கீஸ் இறந்தும் இன்றைக்குச் சற்றேறக்குறைய 30 ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆயினும் கடந்த சில ஆண்டுகளாக அது பல எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் சந்தித்து வருகிறது. அதியகுடியைச் சேர்ந்த (ஆதிவாசிகளுக்குள் உள்ள படியமைப்பு நிலையில் தாழ்ந்த நிலையில் உள்ள குடி) அடிப்படைக் கல்விக்கூடப் பயிலாத சி.கே.ஜானு அதன் முக்கியமான, புகழ்பெற்ற தலைவர் ஆவார். இலக்கண ரீதியாக அதிய என்ற சொல்லுக்கு அடிமை என்று பொருள். ஆதிவாசிகளின் புத்தெழுச்சி அவர்களின் நீண்டநாள் கோரிக்கையான நிலம் குறித்து அவர்களை அணிதிரளச் செய்தது.

வர்க்கீஸினால் தலைமையேற்று நடத்தப்பட்ட ஆதிவாசிகளின் கலகம்தான் கேரளச் சட்டம் 1975-ஐ (நிலம் பெயர்மாற்றத் தடைச்சட்டம் மற்றும் நில மீட்புச் சட்டம்) கொண்டு வரக் காரணமாக அமைந்தது. உயர்நீதிமன்றம் 1993 ஆம் ஆண்டில் இதை நடைமுறைப்படுத்த உத்திரவிட்டிருந்தும் அதற்கு மாறாக இன்றுவரை அது நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது.

1975-இல் இச்சட்டம் கேரள சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. தொடர்ச்சியாக அமைந்த அரசுகள், எந்தவகையிலாவது இச்சட்டத்தை நீக்கிவிட வேண்டுமென்று 1999 முதல் நடவடிக்கைகளை மேற்கொண்டன. சட்டமன்ற அலகுகளைக் கொண்டு அதை பலவீனப்படுத்தின. இவ்வழக்கு தற்போது உச்சநீதி மன்றத்தில் இறுதித் தீர்ப்புக்காக காத்திருக்கிறது. 1990களின் இறுதியாண்டுகளில் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோருவதே வயநாட்டு ஆதிவாசிகளுடையது மட்டுமல்ல மாநிலத்தின் பிறபகுதி ஆதிவாசிகளின் கூக்குரலாகவும் இருந்தது. இச்சட்டத்தின் மிக

முக்கியமான கூறு கைமாற்றித்தரப்பட்ட ஆதிவாசி நிலங்களை மீட்டுத்தரும். 1975-இல் இருந்து கொடி மற்றும் கட்சி வேறுபாடின்றி அனைத்து மைய நீரோட்ட அரசியல் கட்சி அரசுகளின் இரக்கமற்ற கொடிய மனப்போக்குகளை எதிர்கொண்ட பின்னர் ஆதிவாசிகள் மீண்டும் தங்களது நில உரிமைப் போராட்டங்களைத் தொடங்கினர். ஆகஸ்ட், 30, 2001-ஆம் ஆண்டு மாநில தலைமைச் செயலகம் மற்றும் மாநில முதலமைச்சர் வீட்டின் முன் சி.கே. ஜானுவின் தலைமையில் அமைந்த "ஆதிவாசி சரம சமிதி" சத்தியாக்கிரக போராட்டத்தைத் தொடங்கியது. மாநிலத்தின் தலைநகரத்தில் நூற்றுக்கணக்கான ஆதிவாசிப் பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் திரண்டனர். சத்தியாக்கிரகம் நடைபெற்ற இடங்கள் முழுவதும் அகதிகள் முகாம்களாக மாறியது. சாதகமான ஒப்பந்தத்திற்கு வராதவரை அம்முகாம்கள் ஒன்றுகூட கலைக்கப்படாது என எவ்வித அய்யத்திற்கும் இடமின்றி போராட்டத் தலைவர்கள் அறிவித்தனர்.

தொடக்கத்தில் இப்போராட்டத்தை அரசியல் கட்சிகளும், அரசும் கண்டு கொள்ளவில்லை. ஆனால் ஆதிவாசிகள் தங்கள் போராட்டக் களத்தை "ஆதிவாசி கோத்ர மகாசபா" என்ற பதாகையின் கீழ் விரிவாக்கியவுடன் அரசு தன் பிடிவாதத்தைத் தளர்த்தி இறங்கி வந்தது. கட்சிசாரா ஜனநாயக அமைப்புகள், மாநிலம் முழுவதிலும் உள்ள முற்போக்கு மற்றும் மதச்சார்பற்ற அறிவு ஜீவிகள் ஆகியோர் அளித்த ஆதரவும், காட்டிய உறுதியும் காட்டுத் தீயெனப் பரவி அரசை பேச்சு வார்த்தைக்கு இறங்கிவரப் பணித்தது. அந்நேரத்தில் ஆதிவாசிகளின் போராட்டந்தான் அரசுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. இறுதியாக அக்டோபார் 16, 2001-இல் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆதிவாசிகளின் கோரிக்கைகளை கொள்கையளவில் அரசு ஏற்றுக் கொண்டது. அதைத் தொடர்ந்து அகதிகள் முகாம்கள் கலைக்கப்பட்டன. ஆனால் அரசும், குறிப்பாக முதலமைச்சரும் படிப்பறிவற்ற அதியகுடிப் பெண்ணின் தலைமையில் திரண்ட கல்வியறிவற்ற ஆதிவாசிகளினால் தாங்கள் அவமானப்பட்டதை ஒரு போதும் மன்னிக்கத் தயாராக இல்லை என்பதை பின்னர் நடந்தேறிய நிகழ்வுகள் நிரூபித்தன.

அந்த ஒப்பந்தம் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியதாக இருந்தது.

1. ஒரு ஏக்கர் நிலத்திற்கும் கீழ் வைத்துள்ள அனைத்து ஆதிவாசி குடும்பங்களுக்கும் பண்படுத்தப்பட்ட ஐந்து ஏக்கர் நிலம் வழங்குதல்.
2. ஆதிவாசிகள் தன்னிறைவு அடையத் தேவையான முக்கியத் திட்டங்களை டிசம்பர் 2001-ஆம் ஆண்டுக்குள் தீட்டுதல்.
3. அமைச்சரவை முடிவின்படி ஆதிவாசிகளின் பகுதிகளை பட்டியல் 5-இல் சேர்ப்பது மற்றும் மத்திய அரசுடன்

இணைந்து அதற்காகச் செயல்படுவது.

4. உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டு ஒப்பந்தத்தின் அனைத்து விதிகளையும் நடைமுறைப்படுத்திட ஆதிவாசிகள் மிஷன் அமைத்தல்.
5. ஒப்பந்தம் தொடர்பான முடிவு எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளிலும் "சமர சமிதி" பங்கேற்பதற்கு உத்திரவாதம் அளித்தல்.

அகதி முகாம்களை கலைத்திட ஒப்புக்கொண்ட போதிலும், ஒப்பந்தத்தை மீறினால் மீண்டும் போராட்டம் தொடரும் என போராட்டக்குழு அறிவித்தது.

ஆதிவாசிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை அரசு மதிக்கவே இல்லை. மாறாக, அதை நிறைவேற்றாமல் இருக்க பலவித சாக்கு போக்குகளைச் சொல்லி வந்தது. அரசின் கீழ்த்தரமான, வெட்கங்கெட்ட இந்த நடத்தையை ஆதிவாசி கோத்ர மகாசபை ஏற்கத் தயாராக இல்லை. மேலும் அது எங்கெல்லாம் தங்களுக்கான நிலங்கள் இருந்ததோ அதையெல்லாம் கையகப்படுத்திக் கொள்ள முடிவு செய்தது. அதனைத் தொடர்ந்து ஜனவரி - 2003-இல் கிட்டதட்ட 2000-க்கும் அதிகமான ஆதிவாசிகள் ஆதிவாசி கோத்ர மகாசபையின் தலைமையில் திரண்டு வயநாட்டில் உள்ள முத்தங்கா காட்டை கையகப்படுத்தினர். இக்காடு கொடிய வனவிலங்குகளின் சரணாலயமாக அறிவிக்கப்பட்ட போதிலும் அது சர்வதேச சுற்றுலாத் திட்டங்களுக்காக முன்பே ஒதுக்கப்பட்டிருந்தது. ஆதிவாசிகள் தங்கள் மரபுவழி ஆயுதங்களையும், விவசாயக் கருவிகளையும் ஏந்தி கையகப்படுத்திக் கொண்ட இக்காட்டுப் பகுதிக்குள் தங்களுக்கான குடில்களை நிறுவினர். தங்களது பகைவர்களான வனக்காவலர்கள், காவல்துறை தகவலாளிகள் மற்றும் காவல்துறையினர் ஆகியோர் இப்பகுதிக்குள் நுழையாமல் தடுக்க எல்லைக் காவலர்களைப் பணியமர்த்தினர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் உள்ள பட்டியல் 5-இன்படி மத்தங்கா காட்டை ஆதிவாசிகளின் சுயாட்சிப் பகுதியாக ஆதிவாசி கோத்ரா மகாசபை அறிவித்தது. நூற்றுக்கணக்கான சிறப்பு ஆயுத காவல்துறைப் படையை ஒருங்கிணைத்து, திட்டமிட்டு காட்டுத்தனமாக அரசு வன்முறையை ஏவிவிட்ட நாளான 19 பிப்ரவரி 2003 வரையிலும் இப்போராட்டம் நீடித்தது. அரசு இத்தகைய நேரடித் தாக்குதல்களை தொடுப்பதற்கு முன்பு சில சுற்றுச்சூழல் அமைப்புகளின் உதவியோடு ஆதிவாசிகளுக்குத் தொல்லை கொடுத்து அவர்களின் உணர்ச்சியைத் தூண்டியது. இதன் மூலம் உண்மையான தாக்குதலின் போது அவர்கள் சட்டரீதியான உதவிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தியது.

அரசின் இந்த நடவடிக்கை தன்னியல்பிலேயே

விசித்திரத்தன்மை வாய்ந்ததாக இருந்தது. இது வழக்கமான நேருக்கு நேரான தாக்குதலிலும் சேர்த்தியில்லை. அல்லது திட்டமிட்ட அதிகாரபூர்வ நடைமுறையிலான தாக்குதலிலும் சேர்த்தியில்லை. உண்மையில் அது குறிப்பிட்ட சமூகத்தையோ அல்லது குழுக்களையோ எதிரிகளாகச் சித்தரித்து அவர்களுக்கு எதிராக போராட்டம் ஏதும் நடத்தாத, தங்களின் உரிமைகளுக்காக மட்டுமே நீண்டகாலப் போராட்டத்தை நடத்துகின்ற ஆண், பெண் மற்றும் குழந்தைகளின் மீது நன்கு திட்டமிட்டு ஏவிவிடப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலாகும். அரசுக்கு எதிரான போராட்டம் என அதைச் சொல்வது கூட சற்று குறுகலான பொருளில்தானே ஒழிய உண்மையில் அப்படி இல்லை. அவர்களின் கோரிக்கைகள் எல்லாம் அரசிடம் எடுத்து உரைக்கப்பட்டாகிவிட்டது. அரசியல் சாசனப்படி அவர்களின் சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாப்பது அரசின் கடமையாகும். இது திருவனந்தபுரத்தில் அகதிகள் முகாம் அமைத்து போராடிய அவர்களின் முந்தைய போராட்டத்தின் தர்க்க மற்றும் உயிர்ப்பான போராட்டத்தின் விளைபொருளாகும்.

ஆதிவாசிகள் கோத்ர மகாசபையின் தலைமையில் முத்தங்கா காட்டை கையகப்படுத்திய ஆதிவாசிகள் அது குறித்த இரகசிய திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை. தொடக்கத்தில் இருந்தே எல்லாவற்றையும் வெளிப்படையாக அறிவித்தும், விளக்கியும் வந்துள்ளனர். இத்தகைய வெளிப்படையான தன்மைதான் போராடும் மக்களிடையே உள்ள ஆயுதங்களிலேயே ஆற்றல் வாய்ந்ததாகும். ஏனெனில் அரசை அம்பலப்படுத்தவும், பீதியடையச் செய்யவுமான திறனை அதுதான் கொண்டுள்ளது. ஒரு மாதத்திற்கு மேலாகத் தொடர்ந்த "முத்தங்கா கையகப்படுத்தும்" போராட்டம் அரசின் முட்டாள்தனத்தை வெளிப்படுத்தியதோடு, அது ஏற்றுக் கொண்டிருந்த பொறுப்பிற்குத் துரோகமிழைத்ததாகவும் ஆக்கியது. 400-க்கும் அதிகமான சிறப்பு ஆயுதப்படையினர் பணிவிடை செய்த தாய்மார்களைக் கூட விட்டுவைக்காமல் காட்டுத்தனமாக தாக்கியதையும், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதையும் வீரதீரச் செயல் என அரசு பெருமிதம் கொண்டதை நீதிக்குப் புறம்பாக அரசு கட்டிய கதை என்பதை ஆதாரம் எதுவும் இன்றி இதைக் கொண்டே ஒருவர் எளிதாகக் கூறமுடியும்.

வயநாடு மாவட்டத்தின் பிற பகுதிகளில் வசிக்கின்ற ஆதிவாசிப் பகுதிகள் மீதும் காவல்துறையின் அடக்குமுறை நீண்டது. மாநில அரசோ பாசாங்குத்தனத்துடன் தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்க முயன்றது. ஆதிவாசிகள் நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னர், பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பும், அதற்காக ஒரு மாதத்திற்கும் மேலான கால அவகாசமும் இருந்தும் கூட அரசியல் ரீதியான தீர்வைக் கொண்டுவர அரசால் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. சி.கே.ஜானுவும் அவரது முக்கிய தோழர்களும் கைது செய்யப்பட்டு சித்ரவதைக்குட்படுத்தப்பட்டது

பரவலான கண்டனத்திற்கு உள்ளானது. மேலும் மாநிலத்தில் உள்ள ஆதிவாசிக் குடியிருப்புப் பகுதிகள் அனைத்திலும் வேண்டுமென்றே சித்ரவதையும், துன்புறுத்தலும் மேற்கொள்ளப்பட்டது. இதன் முக்கிய நோக்கமே, உரிமைகள் குறித்து விழிப்புணர்வு பெற்று எழுந்துள்ள ஆதிவாசிகளை ஒடுக்குவதும், முன்பு திருவனந்தபுரத்தில் நடைபெற்ற போராட்டத்திற்கு கணக்கு தீர்த்துக் கொள்வதும்தான்!

ஆதிவாசி இயக்கத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒடுக்குமுறை அனைத்து சனநாயக அமைப்புகளிடமிருந்தும் பரவலான கண்டனத்தை எழுப்பியது. இதில் சி.பி.ஐ. (எம்) பிறரோடு தங்களையும் இணைத்துக் கொண்டு ஆதிவாசி கோத்ர மகாசபைக்கும் அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை வைத்தது. அதே நேரத்தில் ஆதிவாசி கோத்ர மகாசபைக் களப்பணியாளர்கள் மீது அளவிற்கு அதிகமான குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்படுவது தொடர்ந்தது. மத்திய புலனாய்வுத் துறையினால் காவல்துறை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் போலித்தனமானவையாகவும், வெறுமனே குற்றவாளிகளைக் காப்பாற்றும் கவசங்களாகவும் ஆயின. இதற்கு மாறாக மக்களின் சார்பில் நன்கு அறிமுகமானவர்களும், மதிப்பிற்குரியவர்களுமான ஓய்வு பெற்ற மூத்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற விசாரணையின் அறிக்கை ஆதிவாசிகளின் உரிமைகளை மீறிய அரசின் நடவடிக்கையை கண்டித்தது.

இங்கு முத்தங்கா போராட்டத்தின் நீண்ட கால நிகரவிளைவுகளைப் பார்ப்பது பொருத்தமானது. இன்றைய காலச் சூழலில் கேரளத்தில் உள்ள ஆதிவாசிகளின் நிலத்திற்கான போராட்டம் பெருமளவு தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இதுவே முத்தங்கா போராட்ட முனையின் முக்கியத்துவத்தை உறுதி செய்கிறது. அது கேரள சமூகத்தின் பெரும்பாலான பிரிவுகளையும் முத்தங்கா குறித்தான நிலைப்பாட்டினை எடுக்க வைத்தது ஒன்றும் பெரிய சாதனையல்ல. இதனால் நிலமற்ற ஆதிவாசிகளுக்கு குறைந்த அளவு நிலத்தை வழங்கும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டது.

ஆதிவாசி நிலப்பிரச்சினை என்பது கேரள விவசாய நிலநிர்வாக நெருக்கடியின் ஒரு பகுதியே ஆகும். உண்மையில் ஆதிவாசிகளை வெளியேற்றி நிலங்களைக் கைப்பற்றிக் கொண்ட குடியேறிகளுக்கும், நிலங்களைப் பறிகொடுத்த ஆதிவாசிகளுக்கும் இடையே பகைமுரண்பாடு இருந்து வந்தது. அரசிடமிருந்து உபரி நிலங்களில் பெரும் பரப்புகள் பெருந்தேயிலைத் தோட்டக்காரர்களின் கைகளில் இருந்தன என்பதையும், அதற்கானதென அவர்கள் வைத்திருந்த நிலஉரிமை ஆவணங்கள் சந்தேகத்திற்கிடமான வகையில் தெளிவற்றவையாக இருந்தன

என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. நிலமற்ற ஆதிவாசிகளுக்கோ அல்லது ஆதிவாசியல்லாத பிறருக்கோ வழங்கத் தேவையான அளவிற்கு பண்பட்ட நிலமும் இருந்தது. பங்கிட்டு அளிப்பதற்குத் தேவையான அளவிற்குப் போதுமான நிலங்கள் கைவசம் இல்லை என்பது வனப்பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பெரிய தேயிலைத் தோட்டக்காரர்களைக் காப்பாற்றச் சொல்லப்படும் பலவீனமான சப்பைக் கட்டுகளாகும். பலன்விளைவிக்கும் வகையில் நேர்மையான மறு நில அளவை ஆய்வுகளை செய்தல் இத்தகைய ஆக்கிரமிப்பாளர்களை அம்பலப்படுத்தும். உதாரணத்திற்கு மூணாறில் உள்ள டாடா டீ எஸ்டேட் பல பத்தாயிரக்கணக்கான ஹெக்டேர் நிலங்களை பிடித்துக் கொண்டு தனது தேயிலைப் பயிரிடும் பரப்பை இரட்டிப்பாக்கிக் கொண்டுள்ளது. மாநிலத்திலேயே மிகப் பெரிய நில உடமையாளன் டாடாதான்! அரசு இக்குழுமங்களின் விருப்பங்களுக்குத் தடங்கல் ஏற்படுத்த விரும்புவதில்லை. வயநாட்டிலும் இது போன்ற பல உதாரணங்களைக் காட்ட இயலும். நிலச்சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட முந்தைய பெருந்தேயிலைத் தோட்ட நிலங்களை எல்லாம் அவைகள் தொழிற்சாலைகள் என்றும், விவசாயம் அல்ல என்ற நொண்டிக் காரணத்தை முன்வைத்தும் விலக்கு பெற்றார்கள். பாதிக்கப்பட்டது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும் ஆதிவாசிகளும்தான்! தற்போதுள்ள முதலாளிகளிடமிருந்து உபரிநிலங்களையும், சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களையும் மீட்டோமானால் கூட, குடியேறிய சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளைத் தொல்லைப்படுத்தாமலேயே நிலமற்றவர்களுக்கு அவற்றை மறுவிநியோகம் செய்து நிலப்பிரச்சினையை எளிதாகத் தீர்த்துவிட முடியும்.

மாநிலத்தின் மக்கள் தொகையில் ஆதிவாசிகளின் எண்ணிக்கை 1%-க்கும் கீழ்தான்! குடியேறிகளின் ஓட்டுவங்கியைப் போல் இது பெரியதல்ல. மிகவும் சொற்பமானது! பெருந்தேயிலைத் தோட்ட முதலாளிகளின் விசயத்தைப் பொறுத்தவரை அவர்களின் பணபலம்தான் ஆட்சியாளர்களுக்கு அமைப்பாக்குவது என்பது உடனடியாகச் சாத்தியமானதும் அல்ல. ஏனெனில் அவர்களும் கூட தலித்துக்களைப் போல் பல்வேறு அரசியல் கட்சிகளாகப் பிரிந்துகிடக்கிறார்கள். சரியாகச் சொன்னால் தற்போதைய சமூக மற்றும் பொருளாதாரச் சமன்பாடு ஆதிவாசிகளுக்கு எளிதாகவே உள்ளது. ஆனால் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட மக்கள் எனும் நிலையில், அவர்களில் பல துணைக்குழுவினர் அழிவைச் சந்தித்துக் கொண்டிருந்தாலும் கூட சமூகநீதி அவர்கள் பக்கம்தான் உள்ளது.

விவசாயிகளின் இயக்கம்

1990-களின் இடைக்காலத்தில் வயநாட்டில் தொடங்கிய விவசாயிகளின் இயக்கம் என்பது சிறு, குறு விவசாயிகள் சந்தைச் சூழலில் சந்தித்த நெருக்கடியின் விளைபொருள் ஆகும். கிறித்தவ

தேவாலயத்தைத் தாங்கு பீடமாகக் கொண்டிருந்த அமைப்பினரும் (INFAM) சிறு, குறு விவசாயிகளின் நிலையை மேம்படுத்தத் தொடர்ச்சியான போர்க் குணமிக்க போராட்டங்களை நடத்திவந்த விவசாயிகள் துயர் துடைப்பு மாமன்றமும் (FRF) அரசியல் கட்சிகளைச் சாராத விவசாய அமைப்புகளின் முன்னோடிகள் ஆவர்.

முன்னணி அமைப்புகளாக அரசியல்கட்சி சாராத INFAM/FRF ஆகிய அமைப்புகள் இருந்தாலும் கூட பெருகிவரும் நெருக்கடிச் சூழலில், பெரும்பாலான அரசியல் கட்சிகள் தங்கள் கட்சிசார்ந்த விவசாய அமைப்புகளை உருவாக்கிக் கொண்டனர். நெருக்கடியின் தொடக்கத்தில் இருந்தே இந்த இரண்டு அமைப்புகளும் களத்தில் இருந்தன. இப்பிரச்சினையை ஒட்டித் தோன்றிய இயக்கங்களோடு ஒத்திசைவாகவும் செயல்பட்டன. பிரச்சினையின் அடிப்படையில் கூட்டியக்கம் நடத்தப்பட்டது கூட்டமைப்போ பொது முன்னணியோ இருக்கவில்லை. சில நேரங்களில் குறிப்பிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றுபட்ட இயக்கம் ஏற்பட்டாலும் கூட, வயநாட்டு விவசாயிகளின் இயக்கம் அமைப்பு ரீதியாக ஒற்றுமையின்றியே இருந்தது. பிற்காலத்தில் இடதுசாரிப் போராளிக் குழுக்களும் இவ்வரங்கில் நுழைந்ததோடு, கடன்களைத் திரும்பச் செலுத்தாதற்காக வட்டிக்காரர்களால் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களையும், பிற சொத்துக்களையும் அவை மீட்டும் கொடுத்தன.

உண்மையில் நிலப்பறிமுதல் போன்ற கடன் வசூலிப்பு முறை வங்கிகளால் தொடங்கி வைக்கப்பட்டதாகும். கந்து வட்டிக்காரர்களால் அச்சுறுத்தும் உத்தியாகக் கையாளப்பட்ட இந்த நடைமுறை போராளிக் குழுக்கள் அரும்பிடக் காரணமாகியது. கடன்களைக் கட்ட வேண்டிய கட்டாயத்தாலும், விலைவீழ்ச்சியின் போது அதலபாதாள நிலைக்குத் தள்ளப்படுவதாலும் மற்றும் வறட்சியாலும் பெரும் எண்ணிக்கையில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது தங்களுக்குச் செய்யப்படும் நியாயமல்ல எனக் கருதிய விவசாயிகள் இப்பிரச்சினைகளை முன்வைத்துப் போராடினர். அதே வேளையில் FRF போன்ற அமைப்புகள் அரசின் பெரு வளர்ச்சித் திட்டங்கள் மீது ஆழ்ந்த கவனம் செலுத்தியதானது, விவசாய வளையத்திற்கு வெளியில் உள்ள எழுத்தாளர்களையும், அறிவு ஜீவிகளையும் இதற்குள் இழுத்து வந்து இப்போராட்டத்திற்கான பெரும் நியாயத்தை வழங்கியது. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் FRF விவசாயிகளின் ஏழ்மையைக் குறைக்கவும், அதே வேளையில் அரசின் வருமானத்தை உயர்த்தவுமான மாற்று மேம்பாட்டு ஆலோசனைகளை முன்வைக்கவும் செய்தது. அவற்றுள் அருமையான ஒன்றான தென்னை, பனை மரங்களில் இருந்து இனிப்புக் கள்ளை வடிப்பது மற்றும் வடித்த கள்ளை சந்தைப்படுத்துவது ஆகியவற்றின் சாத்தியக் கூறுகள் முயற்சிக்கப்பட்டன.

"நீரா" அல்லது 'புத்துணர்வு இனிப்பு கள்' ஒரு உடலோம்பும்

பானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, சராசரி மலையாளியின் உணவுப் பட்டியலில் ஒரு அம்சமாகவே ஆனது. காலனிமயமாக்கத்துடன் கள்ளும் சாராயமும் வரிவிதிப்பிற்குள் வரும் வணிகச் சரக்காக மாற்றப்பட்டன. 1947-இல் இருந்து சாராய ஒப்பந்ததாரர்களின் பொருளாதார மற்றும் அரசியல் ஆதிக்கம் குறிப்பிடத் தகுந்த அளவு வளர்ச்சி கண்டதுடன் கள்ளுக்கடை உட்பட பிற சாராயக் கடைகளை ஏலம் விடுவதென்பது மாநில அரசுக்கு பெரும் வருவாயை ஈட்டித்தரும் கருவியாகவும் ஆகியது. அதற்குப் பிறகான ஒவ்வொரு வருடத்திலும் சாராயத்தில் இருந்து அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தோடு, சாராய வணிகக் கும்பலின் பொருளாதார, அரசியல் செல்வாக்கும் மிதமிஞ்சி அதிகரித்து வந்தது. மறுபக்கம் தென்னை விவசாயிகள் ஓரங்கட்டப்பட்டதோடு மிகக் குறைந்த அளவே பொருள் ஈட்டவும் முடிந்தது.

விவசாயிகளின் போராட்டத்தின் விளைவாக கர்நாடகாவில் நீராவை வடிப்பதும் விற்பதும் சட்டரீதியான தொழிலாக ஏற்பட்டதைத் தொடர்ந்து கேரளத்திலும் அதைப் பின்பற்ற வேண்டும் என FRF கோரியது. வேடிக்கை என்னவெனில், கள்ளை வடிக்கவும் விற்கவும் உரிமையை கர்நாடகாவில் வென்றெடுத்த பேராசிரியர் நஞ்சுண்டசாமி தலைமையிலான விவசாயிகள் இயக்கம் FRF வைத்த அதே கோரிக்கைகளை முன்வைத்து அங்கும் போராடத் தொடங்கினர். எவ்வாறாயினும் நீராவைக் கர்நாடகாவில் சட்டப்பூர்வமாக்கியது அப்பிரச்சினையின் முழு வெற்றி எனச் சொல்ல முடியாவிட்டாலும் கூட அதைக் குறைத்து மதிப்பிட்டுவிடவும் முடியாது. உண்மையில் தேவைப்படுவது என்னவெனில் மரத்தின் மீதான முழு உரிமைதான்! அதாவது கள்ளின் விலையைக் கூட்டவும், கள்ளில் இருந்து வேறுபட்ட பொருள்களைத் தயாரிக்கவும், அவற்றை கூட்டுறவு அமைப்புகள் மூலமாகவோ அல்லது தனித்தோ சந்தைப்படுத்தவும் முழு உரிமை வேண்டும். வங்கி அமைப்பு ஏற்படுத்திய கடன் தொல்லைகளை எதிர்த்து ஆற்றல் வாய்ந்த வகையில் FRF செயல்பட்டபோதிலும், விலைச் சிதைப்பிற்கு எதிராக ஒரு காத்திரமான எதிர்ப்பு உத்தியை உருவாக்கவோ அல்லது உழவர்களின் உற்பத்திப் பொருட்கள் மீது அவர்களுக்கு உள்ள உரிமையை நிலைநாட்ட ஒரு நம்பகத் தன்மையுடன் கூடிய அணுகுமுறையை பின்பற்றிடவோ அதால் முடியவில்லை. ஆயினும் குறைந்தபட்சம், பிரச்சினைகள் அடிப்படையில் விவசாயக் கூலிகள் மற்றும் ஆதிவாசிகள் போன்ற பிற அடித்தட்டு மக்கள் பிரிவினருடன் ஒன்றுபட்டு நின்று போராடுவதின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளதுதான் FRF போன்ற இயக்கங்களின் நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள நன்மை ஆகும்.

கேரளம் எனும் பெயர் தென்னை மரத்தின் பெயரை வேர்ச்சொல்லாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். 1980-களின் தொடக்கத்தில் கிட்டதட்ட 600-க்கும் மேற்பட்ட பொருள்களை

இத்தென்னை மரத்தில் இருந்து உருவாக்க முடியும் என கேரள விஞ்ஞானிகள் அடையாளம் கண்டிருந்தனர். கேரளாவில் தொடங்கப்பட்ட முதல் தொழிற்சாலையான தேங்காய்நார் கயிறுத் தொழிற்சாலை தென்னையை அடிப்படையாகக் கொண்டது. கடந்த பல தலைமுறைகளாக இப்பொன்மரத்தின் பயன்களை பிரித்தறிந்து பயன்படுத்த முயற்சி எதுவும் மேற்கொள்ளாததால் இம் மரசார்ந்த தொழிற்சாலைகள் தளர்ந்து கிடக்கின்றன. மேலும் கள் தொழில் பெரும் சமூக விரோத சாராயக் கும்பலின் கோரப்பிடியில் சிக்கியுள்ளது. மெக்சிகோவின் பானமாக "டிகுயிலா" தயாரிப்பு முறையைப் போல நன்கு கற்றுக் கொண்டு பின்னர் பிறழாமல் பின்பற்ற வேண்டியதாகவுள்ள கள்ளில் இருந்து பிற பொருள்களைத் தயாரிக்கும் தொழிலை இப்பழங்குடிகளால் எப்படி வெற்றிகரமாகச் செய்ய முடியும்? இன்று மரங்கள் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளன. நோயை ஒழிக்க எவ்வித உருப்படியான ஆய்வு முயற்சியும் இல்லை. தேங்காய் மற்றும் கொப்பரையில் ஏற்பட்டு வரும் தொடர் வீழ்ச்சி தென்னை வளர்ப்போர்க்கு கடும் வருவாய் இழப்பை ஏற்படுத்தி உள்ளது. தேங்காய் விலை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பனை எண்ணெய் போன்ற மலிவான சமையல் எண்ணெயின் விலையைச் சார்ந்தே உள்ளது. இந்த சமையல் எண்ணெயில் தேவையை நிர்ணயிப்பதில் டாடா போன்ற பெரும் தொழிற் குழுமங்களே ஏகபோகம் செலுத்துகின்றன. விவசாயிகள் துயர் துடைப்பு மாமன்றம் மற்றும் ஆதிவாசி கோத்ர மகாசபை ஆகிய இரண்டுமே தற்போது பாராளுமன்றவாதக் குழுக்களாகவும், உள்ளூர் மட்டத்தில் இரண்டுமே உள்ளாட்சி அமைப்புகளில் பங்கு வகிக்கக் கூடியனவாகவும் உள்ளன. செங்கொடிக் குழு போன்ற சில இடதுசாரிப் போராளிக் குழுக்களும் இத்தகைய நிலையிலேயே உள்ளன. இத்தகைய போக்கினால் வயநாடு மற்றும் பிற மலைப்பகுதிகளில் உள்ள ஆதிவாசிகளும் விவசாயிகளும் அதிகாரத்தைப் பெறும் நிலை உருவாக இன்னமும் எத்தனை காலங்கள் ஆகுமோ?

ஆனால் பாலக்காட்டு மாவட்டத்தின் பிளாச்சிமடாவில் உள்ள பெருமட்டி பஞ்சாயத்து முன்னுதாரணமாக உள்ளது. அங்கு ஆதிவாசிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்களோடு இணைந்து நின்று ராட்சத குளிர்பான நிறுவனமான கோகோ கோலாவிற்கு எதிரான தங்களது போராட்டத்தை நிலைத்து நின்று நடத்தி வருகிறார்கள். இப்போராட்டம் தற்போது இந்திய அளவிலும், உலக அளவிலும் கவனம் பெற்று பல மட்டங்களிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. வயநாட்டின் சில பகுதிகளில் என்ன செய்ய வேண்டும் என்பதை இது சுட்டக்கூடும். தற்செயலாக பிளாச்சிமடாப் போராட்டம் நச்சுக்குளிர் பானமான கோகோ கோலாவிற்கு மாற்றாக தென்னை மரம் சார்ந்த பானங்களை முன் வைக்கப் போரார்வம் காட்டி வருவதின் மூலம் கவனத்தை ஈர்த்துள்ளது.

குறிப்பு: நலிந்து வரும் பொருளாதாரத்தினால் கடந்த இரண்டாண்டுகளில் பஞ்சாபில் மட்டும் 600க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். பொருளாதார வீழ்ச்சியின் பிடியில் சிக்கி தற்கொலை செய்து கொண்ட ஆந்திர விவசாயிகளின் பட்டியல் உண்மையிலேயே அந்த அரசை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது. கேரளத்தில் டீ, காபி மற்றும் மிளகு போன்ற பணப்பயிர்களின் மையமாகத் திகழும் மலை மாவட்டமான வயநாட்டில்தான் பெருமளவு தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் வயநாட்டு உழவர்கள் ஒடுக்குமுறைக்கு எதிரான புரட்சிகரமான போராட்ட மரபைக் கொண்டவர்கள். இன்று அவர்கள் உலகவங்கி, பன்னாட்டு நிதிமையம் மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றால் அரங்கேறப்பட்டுக் கொண்டிருக்கும் நவதாராளமயத் தாக்குதலை எதிர்த்து நிற்கிறார்கள். டி.சி. ஜேக்கப்பின் வயநாடு : மரகதக் கிண்ணத்தில் வழியும் துயரம் எனும் நூலிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது. ("Wayanad: Misery in An Emerald Bowl") - T.G. Jacob. நன்றி : Frontier July 16-22, 2006).

மார்த்தா த்ராபா

அர்ஜென்டைனாவின் கலை விமர்சகர், நாவலாசிரியர் மற்றும் கட்டுரையாளர் மார்த்தா த்ராபா. அரசியல் போராளியும்கூட பத்திரிகையாளர் ஒருவரின் மகளாகப் பிறந்து (1930 இல்) பிறந்ததாலோ என்னவோ சிறு வயதிலேயே புத்தகங்களை படித்து, பாராட்டி விமர்சிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். அர்ஜென்டினா, பொலிவியா, கொலம்பியா, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், அமெரிக்கா, உருகுவே மற்றும் வெனிசுலா என்று பல நாடுகளிலும் வாழ்ந்திருப்பவர் த்ராபா. பாரிஸில் படிப்பதைத் தொடரச் சென்ற த்ராபா, படிப்பை முடித்துக் கொண்டு கொலம்பியாவில் உள்ள Bogotu விற்குச் சென்றார். அங்கு கலைகளை வளர்க்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். முடிவில் நேஷனல் யுனிவர்சிட்டியின் கலாச்சார நெறியாளராக ஆனார். 1954இல் கலை விமர்சன சஞ்சிகையான 'Prisma' வைத் தொடங்கினார். லத்தீன் அமெரிக்கக் கலை பற்றிய கலந்துரையாடல்களில் அவ்வப்போது தொலைக்காட்சிகளில் தோன்றினார். பல்கலைக் கழகத்தின் மீதான இராணுவ தாக்குதலை தொடர்ந்து அங்கு வேலை செய்ய மறுத்தார் த்ராபா. ஆனால், அர்ஜென்டைனாவிற்கு நாடு கடத்திவிடுவதான இராணுவத்தின் பயமுறுத்தலுக்குப் பின், அவருடைய நண்பர்களின் உதவியால் தண்டனையிலிருந்து தப்பி அங்கேயே தங்கினார்.

1979இல் அர்ஜென்டினாவிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் அங்கிருந்து அமெரிக்கா சென்றார். அங்கு பல பல்கலைக் கழகங்களில் மிகச் சிறப்பான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். ஆனாலும், 1983இல் (விசா வழங்கப்படாததால்) வலுக்கட்டாயமாக வெளியேற வேண்டியிருந்தது. அவரும் அவர் கணவர் Angel Rama உம் ஒரு விமான விபத்தில், மாட்ரிட்டில், பரிதாபமாக இறந்து போனார்கள்.

Bogota வில், 1963இல் நவீன கலை அருங்காட்சியகத்தை தோற்றுவித்த பெருமை பெற்றவர்.

இரண்டு வகைகளிலும் செல்கிறது இவரது எழுத்து. ஒன்று கலை விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதும், மற்றொன்று ஒரு கதை சொல்லியின் படைப்புகளைத் தருவதும் என்று

அமைகிறது. லத்தீன் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய கலை பற்றிய இவரது சொற்பொழிவுகள் உலகம் முழுவதும் பிரசித்தி பெற்றவை. கலை விமர்சனத்தின் ஒரு முன்னுதாரண நபராக இருந்தவர். கலை, கலைஞர்கள், வரலாறு, சமுதாயம் என்ற பன்முகப் பார்வையுடனும், உட்செறிவுடனும் தனது கலை விமர்சனப் பணியினை செய்தவர். உலக அரங்கில் லத்தீன் அமெரிக்கக் கலையின் சிறப்பினை நிலை நிறுத்தவே வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்

மூன்று மாதங்களில் ஏழு புத்தகங்கள் எழுதும் ஆற்றல் பெற்ற த்ராபா, 1966இலிருந்து லத்தீன் அமெரிக்கப் பெண் எழுத்தாளர்கள் வரிசையில் ஒரு சிறப்பான இடத்தை வகித்தவர். தன்னை ஒரு பெண்ணியவாதி என்று கூறிக்கொள்ளவில்லை என்றாலும் பெண்மைத் தன்மையுடைய எழுத்திற்கு முக்கியத்துவம் தந்து அதையே தனது எழுத்தின் சிறப்பு அம்சமாகக் காணப் பெற்றவர்

மார்த்தா த்ராபா

வெல்வெட் தலையணைகளின் கதை

தமிழில்

ரெங்கநாயகி

கிரீச்சிடும் மரப்படிகளில் மிகுந்த எச்சரிக்கையுடன் மேலேறி, அந்த மேடையின் முன்னால் வந்து, தன் கைகளில் நீட்டியிருந்த அந்த வெல்வெட் தலையணையை விரித்து மேயரிடம் கொடுக்க முன்வரும் வரை நிமியா சான்ஷெஸ் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை.

ஏனோ, ஒரு கணம், தன் மனதை மாற்றிக் கொண்டவள்போலத் தோன்றினாள் அவள். ஒரு அரைவட்டமாய்த் திரும்பி ஞாயிற்றுக்கிழமைக்கான சிறப்பான ஆடை அணிந்து கொண்டு மேடையினை முன்புறம் நெருக்கியடித்துக் கொண்டு இருந்த சுற்றுப்புறத்து மக்களைப் பார்த்தாள். பிறகு, எல்லோரும் பார்க்கக்கூடிய வகையில் அந்தத் தலையணையை உயர்த்தினாள். ஏதோ அது ஒரு புனித அப்பம் என்பது போல எல்லோரும் காணும்படியாக முனைப்புடன் அதைக் காட்டினாள். தேவாலயத்தில் இந்தச் செயல் மக்களிடம், எப்படி குழப்பத்தையும் அமைதியையும் ஏற்படுத்துமோ அதே போல இப்போதும் குழப்பத்தையும் அமைதியையும் உண்டாக்கியது.

தலையையும் கண்களையும் தாழ்த்திக் குனிய வைத்துக் கொள்ளுமளவிற்கு அந்தக் காட்சி தந்த ஒரு பயபக்தியான உணர்வை எதிர்க்கத் துணிவில்லாதவர் யாரோ, ஒரு வேளை, அங்கு இருந்திருக்க வேண்டும். பிறகு, விரித்து நீட்டப்பட்டிருந்த உள்ளங்கைகளில் - அதன் முந்தைய இடத்திற்கு உடனே திரும்பியது அந்தத் தலையணை. ஏதோ வேடிக்கை வித்தை காட்டுவது போன்ற ஒரு இனிமையான அசைவை வெளிப்படுத்தினாள், பிறகு மற்றுமொரு அரைவட்டமடித்து, கடைசியில் அந்தப் பரிசை, அதைப் பெற்றுக் கொள்ளவிருந்தவரிடம் தந்தாள். அந்தக் கறுப்பு வெல்வெட் தலையணையின் நடுப்பகுதியில் காணப்பட்ட சித்திரப் பின்னல் வேலைப்பாட்டில், அடர்த்தியான மேகங்களின் அடுக்கு சூரியனை மறைத்திருந்த போதும், அந்தப் பொன் நட்சத்திரங்கள் ஜொலிக்க முடிந்ததையும், கொலம்பியாவின் மரபுச் சின்னம் தாங்கிய மேலங்கியும், குறுக்காக சிலுவைக்குறி போன்ற மிக உன்னிப்பாக பின்னப்பட்ட கொடிகளையும் அருகிலிருந்து கவனித்த மக்கள் பாராட்டினர். காலத்தின் சுவடு படியாத, முதுமை ஏற்காத, இன்னார் என்று வகைப்படுத்திச் சொல்ல முடியாதவள் நிமியா சான்ஷெஸ். எப்போதும் யாராவது ஒருவர் கவனித்து வணக்கம் சொல்லும்படி ஓரளவுக்கு மட்டுமே கட்புலனாகாதபடி மற்ற அண்டை அயல் பெண்கள் இருப்பார்கள் என்றால், இவள் முழுமையாக அருவமாக இருக்கக்கூடிய அபூர்வமான வரம் பெற்றிருந்தாள். (ஒரு சிலர்தான், எடுத்துக்காட்டாய் ஃபெலிசா போல, ஒரு குறிப்பிட்ட தொலைவில் புலன்களால் காணத்தக்க வகையில் இருந்தனர்: ஆனால், இந்தச் சுற்றுப்புறம் தோன்றியமைந்ததுடன் பொருந்திப் போகும் இந்தக் கணத்தில்தான் ஃபெலிசா உண்மையில் தன் வளர்இளமைப் பருவத்தில் நுழைந்திருந்தாள். மேலும், மிக அதிகமான கேடுகளை விளைவிக்கக்கூடிய பிரசித்தியான அவளது மின்சாரப் பார்வையை இன்னும் அவள் செலுத்தத் துவங்கியிருக்கவில்லை.)

அந்தத் துவக்கவிழாவிற்குப் பிறகு நிமியா சான்ஷெஸின் சித்திரப் பின்னல் வேலைப்பாடுடைய தலையணையை மட்டுமே மக்கள் ஞாபகம் வைத்திருந்தனர் என்பது மட்டும் ஐயத்திற்கிடமின்றி நிச்சயமான ஒன்றாக இருந்தது: அவள், அந்த அற்புதத்தின்

உண்மையான படைப்பாளி, அவர்கள் ஞாபகத்திலிருந்து உடனே அழிக்கப்பட்டாள். இதே அளவில்தான், இரண்டு நாட்கள் கழித்து, நிமியா சான்ஷெஸ் வயது என்ன, அவள் எப்படி இருந்தாள். அல்லது எப்படி உடையணிந்திருந்தாள் என்பதும் யாராலும் ஞாபகத்தில் கொண்டு வரமுடியவில்லை. ஆனால் அவளுடைய தலையணையின் மதிப்பு மட்டும் ஆச்சரியத்திற்குரிய வகையில் வளர்ந்து கொண்டேயிருந்தது. தெரு முனைகளிலெல்லாம் அதைக்குறித்து பெண்கள் ஏக்கப்பெருமூச்சு விட்டனர். அந்தப் பெருமூச்சுகளில் ஆசையும், பொறாமையும் மெல்லியதாய் இழையோடின. விரைவில், அந்த சுற்றுப்புறத்தில் வாழும் பெண்கள் மட்டுமின்றி சில ஆண்களுக்கும் நிமியா சான்ஷெஸ் சித்திரப் பின்னல் வேலைப்பாடு செய்திருந்த தலையணைகளில் ஒன்றை அவரவர் வீடுகளில் வைத்துக் கொள்ளவேண்டும் என்பது அவர்களுடைய சிறப்பான விருப்பங்களில் ஒன்றாக இருந்தது. மற்றவர்களைக் காட்டிலும் துணிச்சலான ஒருவனால் அவள் எங்கு வசிக்கிறாள் என்று அறிந்து கொள்ள முடிந்தது. அவன் உண்மையிலேயே அவள் வீட்டிற்குச் சென்று ஒரு தலையணைக்கு ஆர்டர் செய்திருந்தான். மற்றபடி, அவன் சென்று வந்ததைப்பற்றி பேசும்போது, நிமியா சான்ஷெஸ் பற்றியோ, அவள் யாருடன் வசிக்கிறாள் என்பது போன்ற வேறு எந்தத் தகவலையோ அவனால் விளக்கிக் கூறமுடியவில்லை. மேல் தளத்திலிருந்தோ, குளியலறையிலிருந்தோ அல்லது சமையலறையிலிருந்தோ சத்தம் எதையும் அவன் கேட்கவில்லை என்பதாலும், சாப்பாட்டு அறையில் வேறு எந்த நபரையும் அவன் எதிர் கொள்ளவில்லை என்பதாலும் இந்தச் செய்தியே ஒரு எச்சரிக்கையுணர்வை, பீதியை உண்டாக்கியிருக்க வேண்டும். ஏனெனில், குழந்தைகளுடன் கூடிய குடும்பங்களாக இருப்பவர்களுக்கு மட்டுமே அந்த சுற்றுப்புறத்திலே வீடுகள் ஒதுக்கித்தரப்படும், ஆனால் அந்த சித்திரப்பின்னல் வேலைப்பாடுடைய தலையணையை உருவாக்கியவள் என்பதால் சாதாரணமாக கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள் அவளுக்குப் பொருந்தவில்லை. துணிச்சலாய் அந்தத் தலையணைக்கு ஆர்டர் செய்துவிட்டு வந்திருந்த அந்த நபருக்கு நிமியா சான்ஷெஸ் வீட்டிலிருக்கும் மேஜை, நாற்காலி என தட்டுமுட்டுச் சாமான்களைத் தவிர வேறு எதைப்பற்றியும் சொல்ல எதுவும் இருக்கவில்லை கீழ்த்தளத்தின் இரண்டாவது அறையின் பாதி திறந்திருந்த கதவின் பின்புறமாக ஒரு கணம் பார்க்க நேர்ந்ததில், ஒரேயொரு விதிவிலக்காக, தரையெங்கும் சிதறியிருந்த, கந்தல் துணிகளால் செய்யப்பட்ட எண்ணற்ற பொம்மை மிருகங்கள் தவிர, மற்ற அனைவருடைய வீடுகளிலும் இருப்பதைப் போலவே, அதே மேஜை, நாற்காலிகள், பழைய சிதைந்து போன அடுக்குப் பலகை என்றுதான் அவளும் வைத்திருந்தது போலத் தோன்றியது.

பெருகிக் கொண்டிருந்த ஆர்வம் அனைவரையும் வளைத்துப் போட்டு சிக்க வைத்திருக்க, ஆறு நாட்கள் கழித்து, நிமியா சான்ஷெஸ் அவளுடைய வாடிக்கையாளருக்கு கறுப்பு வெல்வெட் துணியில் பின்னல்வேலைப்பாடு செய்யப்பட்ட புதுத்

தலையணையை அளித்தாள். அவனை தன்னுடைய வீட்டிற்கு வரவழைத்து, அந்த சாப்பாட்டு அறை வழியே நடத்தி உள்ளே அழைத்து, அந்தத் துவக்க விழாவன்று செய்த அதே மாதிரியான அங்க அசைவுகளை திரும்பவும் செய்யத் துவங்கினாள். தனது உள்ளங்கைகளின் குறுக்கே மென்மையாகக் கிடந்த அந்த தலையணையுடன் அவனை நோக்கி வந்தாள், பிறகு, அந்த பின்னல்வேலைப்பாடு தெரியும்படியாக அதன் இரண்டு ஓரங்களையும் உயர்த்திப் பிடித்துக் காட்டினாள். பின், அதை அவனிடம் ஒப்படைத்தாள். பிறகு, சட்டென்று அந்த வாடிக்கையாளருக்கு வாசல் கதவைச் சுட்டிக் காட்டினாள்.

சுற்றுப்புறத்திலிருந்த மற்ற அனைவரும் அந்தத் தலையணையைப் பார்த்தபின், நிமியா சான்ஷெஸ் பணியின் பிரசித்தம் சட்டென்று கூடிப்போனது. இலைகள், அடிமரம், நடுத்தண்டு என்பதுவரை அத்தனை லக்ஷணங்களையும் உடைய ஓர் புதர்க்காட்டின் நடுவே ஒரு ஒட்டகச்சிவிங்கி இருப்பதைக் காட்டியது அந்தப் பின்னல் வேலைப்பாடு. குறிப்பாக, அசாதாரண விஷயம் என்னவென்றால், ஒரு இடத்தில் கூட பச்சை வர்ணமே இல்லாதபடி இலைகள் அத்தனையுமே மிக அழுத்தமான வர்ணங்களில் பின்னப்பட்டிருந்தன; லைலக் மலர் வர்ணம் போல இளஞ்சிவப்பு, ஊதா, மஞ்சள், சிவப்பு மற்றும் ஆரஞ்சு இலைக் கொத்துகள் என்று, இவற்றில் அந்த ஒட்டகச்சிவிங்கி ஆரஞ்சுக்கு மிகச் சரியான நேர்மாறான வர்ணமாக நல்ல வயலட் நிற இலைகளைத் தேர்ந்து பசிக்கு உண்டு கொண்டிருந்தது. இதனைப் பார்க்க அணிவகுத்து வந்த அண்டை அயலாரை பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தான் அந்தப் பின்னல் வேலைப்பாடடைய தலையணையை பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் வந்திருந்த அந்த நபர். மேலும், மூன்றே நாட்களில் பதினான்குக்கும் மேல் புதிய ஆர்டர்கள் வந்து குவிந்தன நிமியா சான்ஷெஸுக்கு.

முதல் அடுக்கில் வந்த தலையணைகள் ஒட்டகச்சிவிங்கி சம்பந்தப்பட்டதாகவே பின்னல் வேலை செய்யப்பட்டு, வியப்பிலாழ்த்தும் ஒரு அசுர வேகத்தில் வந்தன நிமியா சான்ஷெஸிடமிருந்து. திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான பின்னல் வேலை செய்பவளாகத் தன்னை காட்டிக் கொள்வதைத் தவிர்க்க, அந்த ஒட்டகச் சிவிங்கிகளை மிகவும் பொருத்தமற்ற சூழல்களில், பின்புலங்களில் அமைத்திருந்தாள். புதர்க்காட்டில் முதலில் அமைத்துவிட்டபின், அதை ஒரு பெரிய பொன்மயமான சூரியனுடன் சமவெளி ஒன்றில் வைத்தாள். பிறகு, எண்ணிலடங்கா சூரியன்களுக்கிடையிலும், நிலவுகளுக்கிடையிலும் வைத்தவள் கிட்டதட்ட சாத்தியமான அனைத்தும் ஆப்பிரிக்க நிலக் காட்சிகளும் தீர்ந்து விட்டிருந்ததாய் அவள் உணர்ந்த சமயம், நதிகள் மற்றும் நீர்வீழ்ச்சிகளின் நடுவில் அதை வைத்தாள். கடைசியாய் அவள் வசித்து வந்த சுற்றுப்புறத்திலேயே அதை இருத்தினாள். இந்தக் கடைசித் தலையணை அதன் சொந்தக்காரரையும் அதன்

பார்வையாளர்களையும் மிகத் தெளிவாகக் குழப்பியது. எப்போதுமே பக்கவாட்டுத் தோற்றத்தில் காணப்படும் அந்த ஒட்டகச்சிவிங்கியின் மேல் அடுக்கி வைத்தது போன்ற தோற்றத்துடன். அந்த சுற்றுப்புறத்தில் இருக்கும் கட்டிடங்களின் உருவரைகளை நினைவுபடுத்துவது போன்று அமைந்திருந்த வீடுகளுக்கிடையில் ஏதோ சிறைபடுத்தப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்தது போல அமைந்திருந்தது அந்த ஒட்டகச்சிவிங்கி அந்தப் பகுதியிலேயே இல்லாத ஒன்றாக ஜன்னல்களுக்கு வயலட் பூக்களால் திரைகள் போட்டிருந்தாள் நிமியா சான்ஷெஸ், ஆனால், அதை முழுவதுமாக மறைக்க அவளால் முடியவில்லை. ஆப்பிரிக்க நிலக்காட்சிகள், காடுகள் அல்லது சமவெளிகள் என்று அந்தத் தலையணையின் சொந்தக்காரரை கற்பனையிலேயே வேறு ஒரு பொய்மை நிலைக்கு இடம் பெயர்த்து எடுத்துச் செல்லக்கூடிய மாயத்தன்மையை அந்தத் தலையணைகள் கொண்டிருந்ததால். இப்போது, இந்த வாடிக்கையாளர் தான் ஏமாற்றப்பட்டதைப் போல உணர்ந்தார். வீடுகளுக்கிடையில் இருக்கும் ஒட்டகச்சிவிங்கியைக் கொண்டிருந்த தலையணையை அந்த வாடிக்கையாளர் ஒருவித அச்சத்துடன் திருப்பித்தந்தார். மறுநாள் அந்த பின்னல் வேலைப்பாடு செய்பவரிடம் தன்னிலை விளக்கம் அளிக்க அவள் திரும்பி வந்த போது, நிமியா சான்ஷெஸ் உள்ளேதான் இருந்தாள் என்பது தெளிவாகத் தெரிந்தாலும், அந்தக் கதவு ஒருவித மூர்க்கத்துடன் மூடியவாறே இருந்தது. மற்ற வாடிக்கையாளர்கள் கதவைத் தட்டிக் கொண்டேயிருந்தும் அவள் அதை திறக்கவில்லை, என்றாலும், ஒளிக்காமல். வெளிப்படையான ஒரு பகையுணர்வுடன் அவர்களுக்கு முகமன் சொன்னாள்.

பின்வந்த வருடங்களில் நிமியா சான்ஷெஸ் பற்றி மேற்கொண்டு யாரும் எதுவும் கேள்விப்படவில்லை. மேலும், எல்லோரும் அவளை மறந்து போனார்கள். மனநிறைவுடன் இருந்த அந்தத் தலையணைகளின் சொந்தக்காரர்கள் அவற்றை அரிய பொக்கிஷமாக மற்றவர்களுக்குக் காட்டினார்கள். கிட்டதட்ட மோசமான சரிவு நிலைமையிலிருந்து அவர்களை காப்பாற்றிக் கொண்டிருந்தவை அவை மட்டுமே. நாற்காலிகளின் கால்கள் உடைந்தபோதும், கீறல்கள் மற்றும் கறைகள் படிந்தபடி வெள்ளையடிக்கப்பட்ட சுவர்கள் இருந்த போதும், எறும்புகளின் கரிசக்காடிக் கசிவுகள் மேஜைகளை உரித்தெடுத்திருந்த போதும், அந்தத் தலையணைகள் பிரகாசமானவைகளாக அப்படியே இருந்தன. கெட்டியான தங்க வெள்ளி சரிகை நூல்கள் இருட்டிலும் பளபளப்பாக ஒளிர்ந்து மினுங்கிக் கொண்டேயிருந்தன. இதற்கிடையில், அந்த சுற்றுப்புறத்தில் வாழும் மற்ற நபர்களைப் போலவே நிமியா சான்ஷெஸும் வந்து போனாள். ஆனால், நல்லவேளை அவளுடைய அருவநிலைக்கு நன்றி, யாரும் அவளை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. மங்கலான, இருண்ட ஃபெலிசாவின் ஆவி தோற்றத்தைப் பற்றியும், அந்தக் குழந்தை நலக்காப்பகம் பற்றியும் அவதூறு கிளம்பிய சமயம்தான் அவள் பெயர் அடுக்களை வம்பில் மறுபடியும் ஒலித்தது.

அந்த நலக்காப்பக கட்டிடத்தின் உச்சிக்குச் செல்வதற்காக ஜன்னலில் ஏறிக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். அது பகல் வேளையாதலால், ஓய்வு நேரத்தில், இன்னாளைய விலைமகளிர் மனையும் அன்னாளைய நலக்காப்பகமும் ஆன அதை அந்தச் சிறுவனால் தூண்டித்துருவிப் பார்க்க முடிந்தது. திறந்த வாய் மூடாமல், குழப்பத்தினூடேயே மேல் தளத்திற்கும் கீழ்த்தளத்திற்குமாகப் போய் வந்தான். இரண்டாவது தளத்தில் நெருக்கிப் போடப்பட்டிருந்த கட்டில்கள் உள்ள அறைகளைக் குறும்புத்தனமாகப் பார்த்தவன், திகைப்புடன் நின்றான் இந்த இடத்தில். ஒரு சாதாரண, பொதுவான காட்சியையே அந்த நான்கு கட்டில்களும் அவனுக்குக் காட்டின, ஏனெனில் எல்லா வீடுகளிலும் இதேதான் நடந்தன என்று அவனுக்குத் தெரியும். ஆயினும், மிகச்சிறிய பையனாக இருந்ததால், அதைப் புரிந்து கொள்ளும் திறனற்று இருந்தான் அவன். கிழிந்த போர்வைகளாலும், விரிப்புகளாலும் மூடப்பட்டிருந்த கட்டில்களின் மீது, ஏதோ இந்த உலகத்திற்கு சம்பந்தப்படாதவை போல ஒளிர்ந்து கொண்டிருந்த, பின்னல் வேலைப்பாடுடைய கறுப்பு வெல்வெட் தலையணைகள், அடுக்கடுக்காக ஏராளமாக இருந்தன என்பதுதான் அசாதாரணமான ஒன்றாக இருந்தது.

முதலில், ஆர்வக் கோளாறில், தங்க, வெள்ளி உருவரைகள் மற்றும் படிவங்கள் தவிர வேறு எதையும் அவன் பார்க்கவில்லை. பிறகு, அடையாளம் தெரிந்து அவன் அணுகிச் சென்ற உருவங்களைப் பற்றிய கருத்து விளக்கம் மட்டும் அவனிடமிருந்து நழுவிச் சென்றது. எல்லா தர்க்கவாதிகளுக்கும் முரணாக ஊதா மற்றும் பச்சை நிறங்களில் அத்தனை உடல்களும் நிர்வாணமாக இருந்தது அவனுடைய கவனத்தை ஈர்த்தது. பிற்பாடு, தட்டுத் தடுமாறி, அவனுடைய தயக்கமான சொற்களில் சமையலறையில் அவன் தன்னுடைய அம்மாவிடம் விளக்கிக்கூற முயற்சி செய்தான். நல்ல அந்த மஞ்சள் கைகள் தங்களுக்கு நடுவே மிகச் சரியாகப் பிடித்துக் கொண்டு —— வருணித்துக் கொண்டு வந்தவன் இந்த இடத்தில் குழம்பிப் போனான், அவன் தாயாரின் நெரிப்புகளுக்குப் பிறகும் தொடர்ந்து அவனால் சொல்ல முடியவில்லை.

மூச்சுத்திணற வைக்கும் அவனுடைய குழப்பமான பேச்சிலிருந்து அந்த அன்னை அயலார் இரண்டு விஷயங்களை ஊகித்துக் கொண்டனர். ஒன்று, ஏராளமான அளவில் தலையணைகள் இருந்தன என்பதிலிருந்து நிமியா சான்ஷெஸ் ஒரு ஜுர வேகத்தில் அவளுடைய பணியை செய்திருக்கிறாள் என்பது. இரண்டு, அந்த பின்னல் வேலைப்பாட்டினூடே இரகசியமான, அருவருப்பான ஏதோ ஒன்று நுழைந்திருக்கிறது என்பதும். அந்தச் சமவெளிகளில் நதிகளோ, காடுகளோ, ஒட்டகச்சிவிங்கிகளோ இனியும் இல்லை. மாறாக, அவர்களால் உள்ளுணர முடியாத, வெளிப்படையாக, தெளிவாக அவர்களால் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத வேறு ஏதோ ஒன்று இருக்க வேண்டும். மற்றவளைவிட

மிகவும் பக்தி சிரத்தையுள்ள ஒரு பெண் இந்தச் சூழ்நிலையை வெளியே தெரியப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தன் கடுமையான குரலில் வற்புறுத்தினாள். மேலும், திருச்சபையின் மதகுருவை பார்க்கச் சென்றாள் அவள். தன்னுடைய வருகைக்கான காரணத்தை விளக்க ஆரம்பித்த பிறகு அவள் பின் வாங்கவேயில்லை. மதகுரு, கோபத்துடன், சாபம் இடுவது போல, தொடர்பற்ற முறையில் முணுமுணுத்துக் கொண்டு, வீராப்பாய், திருக்கோயிலின் புனிதப்பொருட்கள், அங்கிகள் இவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கும் திருப்பூட்டறையை நோக்கி நடந்தார்.

எப்படியும் அவர் அதை யூகித்திருக்க வேண்டும். ஏறக்குறைய விடிந்திருந்த பொழுதில், அந்தத் திருக்கோயிலின் புனிதப் பொருட்களை காப்பவரான மணியக்காரர், நிமியா சான்ஷெஸின் வீட்டுக் கதவைத் தட்டியதை அந்தப்பகுதி மக்கள் பார்த்தார்கள். உள்ளே நுழைந்தவர் சற்றுநேரம் அங்கே இருந்தார். அதற்குப் பின் அவரிடம் என்ன கேட்டிருந்தாலும் பிரயோசனப்பட்டிருக்காது. ஏனெனில், இந்த நடப்பு உலகத்துடனான அவரது சம்பந்தம் மிகவும் சொற்பம். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, மீண்டும் ஒருமுறை, நிமியா சான்ஷெஸின் வீட்டை கண்காணிக்கும் செயலை தங்களுடைய பொழுதுபோக்காக ஆக்கிக்கொண்டார்கள். அவள் மூன்று நாட்கள் தெருவில் தன் முகத்தைக் கூடக் காட்டவில்லை என்பதை கவனித்தார்கள். நான்காம்நாள், அவளுக்கே உரிய தனித்துவமான பாணியில், செய்தித்தாளில் சுற்றப்பட்ட, சந்தேகமில்லை, ஒரு தலையணையைக் கொண்டிருந்த ஒரு பெரிய மூட்டையை எடுத்துக் கொண்டு வெளியேறியதை கவனித்தார்கள். அதைச் சுற்றி, மூடி எடுத்துச் சென்றதுதான் ஆச்சரியமான, அசாதாரண விஷயமாக இருந்தது. அவளுடைய வாடிக்கையாளர்களில் ஒருத்தியான அண்டை வீட்டுப் பெண் அவளை நிறுத்தி, அந்தத் தலையணையை தனக்குக் காட்ட முடியுமா என்று பணிவான குரலில் கேட்க, நிமியா சான்ஷெஸ் வெறுமனே அவளை உறுத்துப் பார்த்துவிட்டு, நேரே தேவாலயம் நோக்கித் தொடர்ந்தாள்.

மதகுரு இருக்குமிடமான அந்த இருட்டான குகைக்குள் சென்றவள் ஒரு சில மணித்துளிகளுக்கு மேல் தங்காமல் அங்கிருந்து வெளியேறினாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

வழக்கமான நேரத்தில் பிரார்த்தனைக்காக மக்கள் கூடினர். பெண்கள், அவர்களுக்கு இடையிடையே நிறைய, சிறிய குழந்தைகள், ஒரு சில வயதானவர்கள் நுழைவாயிலில் அமர்ந்திருந்தனர். நீண்ட நேரமாயிற்று, மதகுரு காட்சி தரவில்லை. பகலாயிற்று, பெண்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு என்னமோ ஏதோ என்று தோள்களை குலுக்கிக் கொண்டனர். ஒருவித அச்சத்துடன், கடைசியில் இரண்டு பேர் எழுந்தனர். மதகுருவின் இருப்பிடத்திற்கும் திருப்பூட்டறைக்கும் இட்டுச்செல்லும் அந்த

இருட்டான நடைபாதையைக் கடந்து சென்று, கதவைத் தட்டினார்கள். நீண்ட நேரம் தட்டினார்கள், பதில் கிடைக்காமல் இறுதியில், லேசாக அந்தக் கதவு திறந்தது. அகலத் திறந்த கண்களுடன், எச்சில் ஒழுகவிட்டுக் கொண்டு, விளங்கிக் கொள்ள முடியாதபடி ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருக்கும் திருக்கோயில் மணியக்காரர் தோன்றினார். பிறகு, அந்தக் கதவை மூடி, உள்ளே அவர் தாழ்ப்பாள் போடுவதை கேட்கும் வரை அவரை விளங்கிக் கொள்வது அசாத்தியமாய் இருந்தது. ஏதேதோ விளக்கங்களுடன் பயத்துடனேயே மக்கள் வெளியே திரும்பிச் சென்றனர்.

பதினைந்து நாட்களுக்கு அந்த மதகுரு பற்றிய எதுவும் புலப்படவில்லை. இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளுக்குப் பிறகு, அந்தத் திருக்கோயிலின் பிரசங்க மேடை மீது அவர் ஏறிய போது, ஏதோ கல்லறைக்குள் ஒரு காலை வைத்திருந்துவிட்டு வந்ததைப் போலத் தோன்றினார். நரக பீதியை மக்களிடம் நீக்கி நிறுத்தியிருந்த தெய்வீக அருட்கடாட்சத்தின் தன்மையை, பிரயோசனமில்லாதபடி, கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து போகச் செய்திருந்த அது, இறுதிக்கால முதுமையின் தளர்ச்சி போல, ஒரு சிதைவு திடீரென அவரை மீறிச் சென்று அவரை ஆட்கொண்டிருந்தது. அதன் பின், சிறிது காலத்திலேயே அவர் இறந்தார். அவர் ஆவி பிரியச் செய்திருந்தது எது என்பது யாருக்கும் தெளிவாகப் புரியவில்லை என்றாலும், அது, எவராலும், எப்போதும் பார்க்க முடியாத - நிமியா சான்செஸின் கறுப்பு வெல்வெட் தலையணையுடன் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்று மட்டும் எல்லோரும் கருதினர்.

('The Tale of the Velvel Pillows' by Marta Traba.
Translated into English by Jean ne Vaugha.)

ஒரு தேவஅணங்கின் நினைவுகள்

பத்மா சச்தேவ்

தமிழில்

சா. தேவதாஸ்.

டோக்ரி மொழியின் முதலாவது கவிஞரான பத்மா சச்தேவ் (பி.1940-) புகழ்பெற்ற உருது எழுத்தாளரான இஸ்மத் சுக்தாய் குறித்த தன் நினைவுகளை, நீண்ட கால நட்பின் அடிப்படையில், பதிவு செய்திருக்கிறார். இக்குறிப்புகளில் சாகித்ய அக்காதெமி பரிசும் பத்மஸ்ரீ விருதும் பெற்றுள்ள பத்மா, இந்தியிலும் இரு நூல்கள் எழுதியுள்ளார். வானொலி நிலையப் பணியாளராக விளங்கிய அவர், சிறந்த உரைநடை எழுத்தாளரும் கூட

Indian Literature - May- June 2006 - இதழிலிருந்து ...

மும்பையை ஒரு 'குட்டி இந்தியா' என்றழைப்பது மிகைப்படுத்தலாயிருக்காது. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இங்கு வரும் மக்கள், அங்கே தங்கி, தமக்கென்ற ஒரு நகரினை மறுபடைப்பு செய்து கொள்கிறார்கள். உத்தாபிரதேசத்திலிருந்து வரும் பையாக்களின் இனிய சைக்கிள் மணி, விடிவதற்கு முன்னமேயே பாலின் வருகையை அறிவிக்கின்றது. சௌபாத்தியிலும் ஜுஹுவிலும் பசும் இளநீர்க்காய்கள் நீண்ட அரிவாள்களால் வெட்டி நாசூக்காகத் தரப்படுகின்றன. சிதாராதேவியின் சொந்த ஊரான பனாரஸைச் சேர்ந்த பீடாவியாபாரிகள், இமாசலபிரதேசத்தைச் சேர்ந்த ஜோதிடர் - மருத்துவர்கள் லக்னோ, அலிகார், பண்டிட் சிவ் குமார் சர்மா, உஸ்தாத் அல்லாரகா கான், தம்மொழியை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருக்கும் சிந்திகள், குஜராத்தியர், பார்ஸிகள், இந்துக்கள் முஸல்மான்கள், ஜோதியின் சீக்கியர் என எல்லோரும் மும்பையைத் தமதென்று கருதுகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் இந்நகரின் எங்கோ ஓரிடத்தில் தமக்கென வெளியை ஏற்படுத்திக் கொண்டு, அதேவேளையில் தம் பழைய வாழ்க்கை முறையினையும் மரபினையும் உயிர்ப்புடன் பாதுகாத்துக் கொண்டுள்ளனர். நகரின் ஒரு மூலையில் எழுத்தாளர்களுக்கென விளக்கொன்று எரிகின்றது - அங்கே அவர்கள் தவறாது கூடி, கடந்த காலத்தினை உயிர்ப்பிக்கின்றனர். இஸ்மத் சுக்தாய் இக்கூட்டத்தின் மைய அச்சாக இருந்தார். 'இருந்தார்' என்று உச்சரிப்பது கூரிய கத்தியால் இருதயத்தைக் குத்துவது போன்றதாகும். இத்தகு ஆளுமைகள் ஒருபோதும் மடிந்து போவதில்லை. அவர்கள் ஆயுள் பரியந்தம் நம்முடனே தங்கி விடுகின்றனர்.

ராஜ்பேடி அண்ணன் குரு மற்றும் புகழ்பெற்ற புகைப்படக் கலைஞரான மிட்டெர் பேடியும், அண்ணன் மாரே. டாக்டர் தரம்வீர் பாரதி, கமலேஸ்வர், மோகன் ராகேஷ், சரத் ஜோதி, கிரிதாரி வைத் (அ) இஸ்மத் அக்கா என யாராயிருந்தாலும் மும்பையில் பல எழுத்தாளர்களுக்கு இரண்டாவது இல்லமாக இருந்தது ராஜ்பேடியின் இல்லமே. அக்காவின் அடுக்குமாடிக் குடியிருப்பு, ராஜ் பேடியின் வீட்டுக்கு அருகாமையில் Marine Drive இன் A Rood (Induscourt-) இன் முதல்தளத்தில் இருந்தது. ராஜம் அக்கா பாசத்துடன் உஜ்லா என்று அழைத்த அவரது மனைவி உஜ்வாலாவும் எப்போதும் தம் இல்லக் கதவை நண்பர்களுக்காகத் திறந்து வைத்திருந்தனர். நாங்கள் மும்பைக்குப் புதிதென்றபோதிலும் தன் மகளின் திருமணத்திற்காக

ராஜ்பேடி எங்களை அழைத்தார் - அது டாக்டர் பாரதிக்காக இருக்கக்கூடும். மும்பையின் திருமண கொண்டாட்டங்கள், வீட்டினை விடவும் ஓட்டல்களில்தான் ஏற்பாடு செய்யப்படும். ஓட்டல்கள் எல்லா வேலைகளையும் கவனித்துக் கொள்ளும். ஒருவர் நிகழ்வில் கலந்துகொண்டு, மணப்பெண்ணுடன் திரும்ப வேண்டும், அவ்வளவுதான். ஆனால் ராஜ்பேடி தன் இல்லத்தில் ஏற்பாடு செய்தார். புஷ்பா பாரதியின் வற்புறுத்தலால் வேர்த்து விறுவிறுக்க நான் டோலக்கை வாசித்தேன். பேடி சாஹிப் பெரிதும் சந்தோஷப்பட்டார். தன் மகளின் திருமண வைபவத்திற்கு டோலக்குடன் கூடிய திருமணப்பாடல்கள் இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை. டோலக் அதன் உச்சத்தில் அதிர்ந்தபோது, விளக்குகள் அணைந்து விட்டன - பம்பாயில் அது அரிதானது, அம்மின்னல் கானங்களின் இருளில் இரு விஷயங்கள் துலங்கித் தெரிந்தன - அக்காவின் தலையிலிருந்த நரை முடிக் கிரீடம் மற்றும் தனது மூக்குத்திக் கல், விளக்குகள் எரியத் தொடங்கியதும் ஒவ்வொருவர் முகத்திலும் என்னால் புன்னகையினைக் காண முடிந்ததை ஒவ்வொருவரும் கவனித்திருக்க வேண்டும். எங்கள் முதல் சந்திப்பு இத்தகைய வெளிச்சத்தில் நடந்தது. அன்பு, நேசம், பாசம் நிறைந்த புன்னகையை அவர் வெளிப்படுத்தினார். 'நீண்ட நாட்களாக எங்கே போயிருந்தாய்?' என்று விருந்தின்போது வினவினார். 'இங்கேதான் இருந்தேன்' என்றேன், நாங்கள் தோழிகளானோம். அதிலிருந்து, எங்கே நாங்கள் சந்தித்தாலும், ஆண்டுக்கணக்கில் நாங்கள் ஒருவரையொருவர் அறிந்தவர்கள் என, எங்கள் விழிகளில் அசைந்த அன்பிலிருந்து தோன்றிற்று. தன் ஆயுள் முழுவதும் தன்னுடனிருந்த ஒரு தோழியிடம் பேசுவது போல் என்னுடன் அவர் பேசுவது வழக்கம். அவரைச் சந்திக்கும் யாரும், குழந்தைப் பருவத்திலிருந்து தம்மை அறிந்து கொண்டிருப்பது போன்று உணருவார்கள் என்பது அவரின் இளம் பருவத்திலிருந்து தம்மை அறிந்து கொண்டிருப்பது போன்று உணருவார்கள் என்பது அவரின் பெருமையே. ஒரே நேரத்தில் குழந்தைகளுடன் குழந்தையாகி விடுவார் மற்றும் சமவயதினருக்கும் மூத்தவர்களுக்கும் தோழியாகி விடுவார். அவரைப் போன்ற தோழி அபூர்வம். அதுவும் அதிருஷ்ட சாலிகளாகிய சிலராலேயே பெற முடியும்.

அது 1973-74இல் எனது ஒரு மணிநேரப் பேச்சுக்கும் மும்பையின் உருது கவிஞர்களின் கவிப் பொழிவுக்கும் லண்டனின் (பிபிசி) ஏற்பாடு

செய்திருந்தது. ஜனாப் அலி சர்தார் ஜாஃப்ரி, அக்தாருல் இமான், ரஜீந்தர் சிங் பேடி, ஜி.ஏ. அன்சாரி, மஜ்ரூ சுல்தான்புரி, குர்துல்ஆன் ஹைதர், வாஜ்டா டபாஹீம் மற்றும் இஸ்மத் அக்கா இக்கவியரங்கில் கலந்து கொண்டனர். அக்காவை அழைத்து வர அவரது வீட்டுக்கு நானே சென்றேன். என் அடுக்குமாடிக் குடியிருப்பின் அழைப்பு மணியை அழுத்தியதும், என் கணவர் பதிலளித்தார். எட்டிப் பார்த்த அக்கா, குடியிருப்பை வெளியிலிருந்து உற்று நோக்கினார். "அக்கா, இவர் என் கணவர்" என்று நான் அறிமுகப்படுத்தியதும், "இக்குடியிருப்பு யாருடையது?" என்று வினவினார். "அவருடையது" என நான் கூறினேன். என் கணவர் மீது பார்வையைச் செலுத்திவிட்டு, "இது அடுக்கு மாடிக் குடியிருப்புப் பற்றியதெனில், மோசமில்லை" என்றார் விஷமத்துடன். இந்த வார்த்தைகள் குடியிருப்பினுள்ளே சென்றுசேர்ந்த கணமே, அறை சிரிப்பினால் அதிர்ந்தது. தன் வருகையை அவர் இப்படித்தான் அறிவித்தார். அவ்வேளையில் விவாதம், சுவையான வாதப் பிரதிவாதத்தால். பையிலிருந்து ஒரு புட்டியை எடுத்தார். அப்போது என் கணவர் குடிக்காதவராக இருந்தார். அன்றிரவு சூடான பகோடா தட்டுகள் எண்ணிக்கையின்றி காலியாகின. ஒரு தட்டு காலியானதும் என் கணவரிடம் " உங்களால் இங்கே எப்படி இருக்க முடிகிறது?" என்றார். " ஜீ. இங்கே இருக்கிறேன். நான் என்ன செய்யக் கூடுமென்று தயவுசெய்து கூறுங்கள்?" என்று பதிலளித்தார் என் கணவர். அப்போது ஒன்றுமறியாதவராக அக்கா வினவினார், "அப்படியானால் இப்பகோடாக்களைப் பொரித்தெடுப்பது யார்?" இப்போது சிரிப்பு உரத்து விடவே, பக்கோடா பொரித்துக் கொண்டிருந்த பாபி, மாவுக் கைகளுடன் வெளிவந்து, பக்கோடாவில் ஏதேனும் கோளாறா என்று கேட்க வந்துவிட்டார்.

"பத்மா, எழுத்தாளர்களைச் சந்திக்க வைப்பது உயிருள்ள தவளைகளைத் தராசில் நிறுப்பதுபோல. உன்னால் எப்படி முடிகிறது?" என்று என்னைக் கேட்டார் பேடி. சாஹிப், இஸ்மத் சுக்தாய் சந்தர்ப்பத்தை விட்டுவிடக் கூடிய நபரில்லை. "நீங்கள் ஒரு தவளை என்றெண்ணுகிறீர்களா?" என்றார். இதுதான் அக்கா என் வீட்டுக்கு வந்த முதல் தடவை ஆகும். இதன்பின்னர் நாங்கள் கிஷன்ஜியின் வீட்டிலும் சர்தார் பாயின் வீட்டிலும் பிற இடங்களிலும் சீராகச் சந்திக்கலானோம்.

அந்நாட்களில் நான் டாக்டர் பாரதியின் ஆலோசனைப்படி உரைநடை எழுதத் தொடங்கியிருந்தேன். புஷ்பா பாரதி சிறுகதைகள் எழுத உத்வேகமளித்தார். கதைகள் எழுதுமுன்னரே அவை பற்றி விவாதிக்கத் தொடங்குமளவுக்கு அக்கா என் தன்னம்பிக்கையை வளர்த்துவிட்டார். நானொரு ஸ்தாபிதமாகிவிட்ட எழுத்தாளர் போல என்னுடன் அவர் பேசுவதுண்டு. "மண்டோ, கிஷன் சந்தர், பேடி ஆகியோரை அவர்தாம் உச்சங்களில் கண்டிருந்த இச்சீமாட்டி, என்னைப் பரிகாசம் பண்ணவேண்டும்" என்று நான் பிற்பாடு எண்ணுவதுண்டு. எனினும் நான் சிறுகதைகள் எழுதத் தொடங்கினனேன். ஒரு நாள் என் குடியிருப்பில் அவரிருந்தபோது, ஒரு கதையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம். சிறிது நேரங்கழித்து கதாநாயகியின் மொழியில் "அக்கா! என்வீட்டின் பின்னுள்ள குன்றின் மீது அவனது குதிரை நிற்பதுண்டு. தொலைவிலிருந்து கூட அவன் கண்களிலிருந்த காதலின் கதகதப்பை என்னால் உணரமுடிந்தது. அவன் அக்கிராமத்தைச் சேர்ந்த லால்கான், நானோ ஏழை மௌல்வியின் மனைவியான நூர்" எனப் பேசத் தொடங்கிவிட்டேன். அவர் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். இதற்கிடையே என் மூன்று வயதுப் பெண் கோபத்துடன் அறையிலிருந்து வெளியேறினாள். இசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக என் கணவர் ஏற்கனவே கிளம்பியிருந்தார். அது ஜனவரி அவர் திரும்பும்போது காண்பிப்பதற்காக வாழ்த்து அட்டைகள் கொண்ட கட்டு ஒன்றினை வைத்திருந்தேன். அவர் திரும்பியதும் வாழ்த்தட்டைகளுடன் அவரிடம் சென்ற என் மகள், அம்மாவுக்கு ஆண்சிநேகிதர் ஒருத்தர் இருக்கிறார். அவரே அக்காவிடம் இதனைக் கூறினார். அவர் ஏராளமான வாழ்த்தட்டைகள் அனுப்பியிருப்பதைப் பாருங்கள்" என்றாள். அவரின் சிரிப்பைக் கேட்டதும் நான் சங்கீத அறைக்குப் போய் விட்டேன். என்னைப் பார்த்த என் மகள் வெறுப்புடன் வெளியேறினாள். "உன் ஆண் சிநேகிதருள் ஒருவர் இவ்வாழ்த்தட்டைகளை அனுப்பியுள்ளதாக பெண் கூறிக் கொண்டிருந்தாள்." என்று அவர் மடிமீது இருத்தியபடி, "குட்டிச் சூனியக்காரியே! அம்மாவுக்கு ஆண் சிநேகிதன் இருக்கக் கூடாதா?" என்று கேட்டார். தர்மசங்கடத்திற்குள்ளான அவள் ஓடிப்போனாள். அக்கா என் மகளைப் பெரிதும் நேசித்தார். டெல்லியில் தான் இருக்க நேரும்பொழுதெல்லாம் அவளுடன் கதைப்பதும் மணிக்கணக்கில் சீட்டாடுவதுமாகவும் இருந்தார்.

அக்கா பெரிதும் தன் வீட்டிலேயே இருந்தார் மடிப்புகளுக்கு ஊசி குத்தி, ஒரு சேலையை அவர் எப்போதும் தயாராய் வைத்திருப்பதுண்டு. வெளியாரைச் சந்திக்கும் பொருட்டு அதனை அணிந்து கொண்டார். அவரது கீர்த்தி மிகு வெற்றிலைச் செல்லம், இந்திய மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகைகள், செய்தித்தாள்கள், புத்தகங்கள், நிறைவு பெறாத அவரது கதைகளின் பக்கங்கள், பாக்கு, மற்றும் "கிமாம்" கொண்ட பாக்கெட்டுகள், சிகரெட், லைட்டர், வாசனைத்திரவியங்கள், கடிதங்கள், சீட்டுக்கட்டுகள்ஆகியன அவரது கட்டிலைச் சுற்றி சிதறிக கிடக்கும். ஹபீபுடன் கவனமாக சீட்டாடிக் கொண்டிருப்பார். ஹபிப் அவரது வயதான வேலையாள் - அவரது கட்டிலருகே ஒரு ஸ்டூலில் அமர்வதுண்டு. அக்கா வெற்றிலை ஒன்றினை மடித்து அலிகாரிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட கிமாமில் தோய்த்து, வாயில் போட்டுக் கொள்வார். ஹபியைப் செல்லமாய் திட்டிவிட்டு சீட்டாட்டத்தைத் தொடருவார். வாயில் உள்ள பீடாவைக் கவனமாய் குதப்பியபடி, ஹராம்ஜெட்! இத்தடவை நீ ஜெயித்தால் விளைவுகளை கவனத்தில் வைத்துக்கொள்" என்பார். ஹபீப் புன்னகைப்பதுடன் சரி. பின்னர் அவனை நேசத்துடன் நோக்கி " உனக்கு ஒரு பீடா வேண்டுமா?" என்பார். சமயங்களில் அவரே ஒரு பீடாவைத் தயாரித்து சிறிது கிமாமில் தோய்த்து எனக்குத் தருவதுண்டு. அக்கா, நானொரு சர்தார்ணி. குருஜி எரிச்சலடையப் போகிறார்." என்பேன். அவர் சிரித்து விடுவார். உன்னைக் கவனிப்பது தவிர்த்து அவருக்கு வேறு வேலை ஏதேனும் கிடையாதா? ஒரு முறை பீடாவில் கிமாம் சற்றுக் கூடுதலாகி விட்டது. புகையிலையால் என் விழிகள் பிதுங்கிவிட்டன. முகத்தைக் கழுவிக் கொண்டு குளியலறையிலிருந்து நான் வந்ததும் "பிராமணனின் மகளாகிய உன்னால் கிமாமை செரித்துக் கொள்ள முடியவில்லை. சர்தார்ணியாக இருந்திருந்தால் இதனை நீ சீரகம் போல் தின்றிருப்பாய் இப்போது கவனி என் செல்லமே. நீ கிமாம் உட்கொண்டிருப்பதால் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று நான் சர்தாரிடம் கூறவேண்டியுள்ளது."என்றார். அப்புறம் ஒரு கண்சிமிட்டலுடன் குறிப்பிட்டார். "அப்போது நீ என்னுடன் தங்கி விடலாம். ஆனால் சர்தாரும் வேண்டப்பட்ட ஒரு நபரே."

அவர் வீட்டில் ஒரு பூனை இருந்தது. ஒரு முனகலைக் கேட்டு, "இந்தச் சத்தம் போடுவது எது?"என்று வினவினேன். "சொல்வது சிரமம். தனக்குப் பொருத்தமாக இருக்கக் கூடியதை தேர்ந்தெடுக்க அது ஓர் ஏற்பாடு செய்திருக்கும். சாளரங்கள் உள்ளிட்ட எல்லா வழிகளையும் மூடியிருக்கிறேன். அதன் எண்ணற்ற குட்டிகளது பளுவைத் தாங்கப் போவது யார்?" என்றார். சில நாட்கள் கழித்து ஒரு தொலைப்பேசி அழைப்பு வந்தது. "அது யாருடைய பூனையென்று எனக்கெப்படித் தெரியும்? இந்த விவகாரங்களில் என்னை ஏன் இழுக்கிறீர்கள்? நான்கு ஆண் பூனைக் குட்டிகளை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது?" என்றார். அக்காவின் எச்சரிக்கை மிக்க கவனிப்பு இருந்தும், பூனைக் கருத்தரிக்குமாறு நேர்ந்து விட்டது. அக்கா அதனை அறியவந்ததுமே, தன் நண்பர்களில் ஒருவர் மூலம் பூனையை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார். இதன் பின்புலம் அறியாத நண்பர் மருத்துவமனையில் அக்காவின் தொலைபேசி எண்ணைத் தந்தார். ரூ. 700- கோரிய மருத்துவமனை, குட்டிகளை கவனித்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டது. மருத்துவமனை அலுவலர்கள் தன்னைச் சந்தேகிக்காதது குறித்து திருப்தியுற்றார்.

பெரும்பாலும் அவர்தான் சேலையை கட்டிலில் வைத்துவிட்டு, லுங்கியில் இருப்பார். ஒரு நாள் அழைப்பு மணிக்குப் பதில் தெரிவித்த ஹபீப், அக்காவிடம் "தயவுசெய்து சேலை கட்டிக் கொள்ளுங்கள், உங்களைப் பார்க்க யாரோ ஒருவர் வந்து கொண்டிருக்கிறார்." என்றான். அவசர கோலத்தில் சேலையைச் சுற்றிக் கொண்ட அக்கா, உயரமான இளைஞன் ஒருவன் வரக் கண்டார். சட்டென்று சேலையை உதறி யெறிந்து விட்டு " முட்டாள்! இது என் மருமகன்" என்று குறிப்பிட்டார். ஹபீப் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். "நான் கண்டு கொள்ளமுடியாதபடிக்கு துரிதமாய் வளர்ந்திருக்கிறார்."

அந்நாட்களில் சபீர் தத், எழுத்தாளர்கள் குறித்துச் சிறப்பிதழ்கள் கொண்டு வந்து கொண்டிருந்தார். ஜான் நிஸார் அக்தார், சாஹிர் லூதியான்வி, கிஷன் சந்தர் மற்றும் பேடி சாஹிப் ஆகியோர் தம் சிறப்பிதழ்கள் வெளியானதும் இறந்து விட்டனர் (அ) வெளிவரும் முன்பே இறந்து விட்டனர் என்பது தற்செயலானது என்று கூறமுடியும். உயிர்

பிழைத்திருந்த மற்ற பலருக்கும் அவர் சிறப்பிதழ்கள் கொண்டு வரவே செய்தார். அவர் அக்காவிடம், "அக்கா. உங்களைக் குறித்து சிறப்பிதழ் ஒன்று கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கனவே இன்னின்னபடி சிறப்பிதழ்கள் வெளியாகி உள்ளன" என்றார். "இந்தச் சிறப்பிதழில் என்ன வரப்போகிறது?" என்று அக்கா கேட்டதற்கு சபீர் விளக்க முற்பட்டார். சட்டென்று அக்கா கூறினார் "நான் வருந்துகிறேன். என்னை விட்டு விடுங்கள் நீங்கள் சிறப்பிதழ் வெளியிட்டுள்ள ஒவ்வொருவரும் இறந்து போயுள்ளனர். நான் அவ்வளவு சீக்கிரம் இறக்க விரும்பவில்லை." சபீர் பொறுத்துக் கொள்ள வேண்டிய வகையில் விளக்கினார் - "அவரைப் பற்றிப் பேசவேண்டாம். அவர் ஒரு வெட்கங்கெட்ட இந்து. அவர் சாகப்போவதில்லை. நான் பக்தி நிறைந்த முஸ்லிம் பெண். நான் சட்டென்று இறந்து விடுவேன். நான் செய்வதற்கு நிறைய வேலை இருக்கிறது. தயவு செய்து என்னை விட்டு விடவும்." அக்கா ஒவ்வொருவரையும் மனித உயிராகக் கருதினாரே ஒழிய இந்து - முஸ்லிம் என்று பார்க்கவில்லை என்பதை, அக்காவைப் பற்றி நன்கறிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

ஒரு நாள் அக்காவிடம் வந்த மௌல்வி ஒருவரிடம், ஏற்கனவே தந்திருந்த ஒரு புத்தகம் பற்றி இப்படிக் கூறினார். " மௌல்வி சாஹிப், என்னால் இன்னும் படிக்க முடியவில்லை." இன்னொரு கவியரங்கத்தின் போது அவர் மீண்டும் சந்தித்தார். அப்போது அக்கா குறிப்பிட்டது "மௌல்வி சாஹிப், நான் படித்து விட்டேன், இந்துவாக மாறிக் கொண்டிருப்பதாக உணருகிறேன்." அப்புத்தகம் (குரான் ஷெரீபின்) விளக்கம் கொண்டது கையெழுத்துப் படிகளைப் பெற்றுச் செல்ல அவராக வராத போது சபீர் தத் மூலம் கொடுத்தனுப்பினேன்" . ஆனால் அதன் பின்னரும் அவர்களுடன் இணக்கமான உறவைப் பேணினார்.

ஒருமுறை ஒருவர் அக்காவிடம் வேண்டிக் கொண்டார், தயவுசெய்து உறுதி கொடுத்து விடுங்கள். மரகதக் கண்கள் பளிச்சிட அக்கா பதிலளித்தார் - "எதற்கு? கண்களை நான் இங்கே விட்டுச் சென்றால், அங்கே போனபின் அல்லாவைப் பார்ப்பது எப்படி? நான் என் கண்களைத் தானமளிக்கப் போவதில்லை. அல்லா எரிச்சலடைவார்."

ஒரு மாலைப்பொழுதில் சர்தார்ஜி, அக்காவிடம் "பத்மா சரியில்லை. நாங்கள் மணவிலக்குப் பெறப் போகிறோம்" என்றார். அவருடன் பானங்கள் அருந்திய பின்னரும் அவரது விசுவாசம் என் பக்கமாயிருந்தது. அன்றிரவு அவரால் சரியாகத் தூங்க இயலவில்லை. காலையில் விசேசமாய் ஒரு பண்டம் தயாரித்துக் கொண்டிருந்தேன். அது அவருக்குப் பிடித்தமானதும் கூட. சமையலறைக்கு நேராக வந்த அவர், பூசணிக்காய்த் தோலை தூக்கி எறிந்து விட்டாயா?" என்றார். நான் " இல்லை" என்றதும், அதிலிருந்து ருசியான பண்டம் செய்யலாம் என்று சந்தோஷத்துடன் குறிப்பிட்டுவிட்டு, பூசணிக்காய் தோலையும் விதைகளையும் சேகரிப்பதையும் பறிப்பதுமாக இருந்தார். வெளியிலிருந்து கூப்பிட்ட சர்தார்ஜி, "பத்மா, என் கால்சாராய்கள் எங்கே?" என்றார். "இதோ வருகிறேன்" என்று கூறியதும் சமையலறையை விட்டு வெளியேறினேன். என்னுடன் வந்த அக்கா, "நீங்கள் மணவிலக்கு கோரினீர்கள்! உங்கள் கால்சராய்களைக் கூட தேடி முடியாத நீங்கள்? சபாஷ்! அப்படியொரு சந்தர்ப்பத்தில் நீங்கள் நிர்வாணமாய்த் திரிய நேரும்." என்றார். அவரைச் சமாதானம் செய்வதற்காக சர்தார்ஜி அவரைத் தழுவினார். அப்போதும் கூட அவர் குறிப்பிட்டார், "இம்மனிதரின் துணிச்சலைப் பார்! இவர் மணவிலக்கு கோரினார்!"

நான் மும்பையில் அகில இந்திய வானொலியில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். நான் போகும் வழியில் அக்காவின் வீடு. நான் போகும்போது (அ) திரும்பும்போது அடிக்கடி அங்கு செல்வதுண்டு. ஒரு நாள் அவரது குடியிருப்பிலிருந்து வானொலி நிலையத்திற்குச் சென்று கொண்டிருக்கையில், இரண்டு மூன்று ஜோடிக் கண்கள் இனம்புரியாத வகையில் என்னை உற்று நோக்கின. அக்குறுகுறுப்பான பார்வை குறித்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன். திரும்புகையில், குறுகுறுப்பின் காரணமாக அக்காவிடம் வினவினேன். "அதுவா, இன்றைக்கு அது வேடிக்கையாய் இருந்தது. உன்னைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்களை ஞாபகப்படுத்திக் கொள்! இப்பெண் இல்லை, ஆனால் நிச்சயமாக சீமாபோலவே தோன்றுகிறாள் என்று கூறிக்கொண்டிருந்தனர். 'இப்போது என்னிடம் கண்டறிந்துள்ளதால் உண்மையைக் கூற அனுமதியுங்கள் அவள் என்

நிஜமான மகளே, ஆனால் திருமணத்திற்கு முன் பிறந்தவள். ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். இப்போது அறியவந்துள்ள அவள், அவ்வப்போது என்னைப் பார்த்துச் செல்கிறாள் என்று அவர்களிடம் கூறினேன். இதனைக் கேட்ட பிறகு அவர்கள் தேநீர் அருந்தாமலேயே போய்விட்டனர். நாம் சிறிது தேநீர் பருகலாம்" என்றார்.

சிறிது நேரம் கழித்து தொடர்ந்தார். "நீ பெரிதும் சீமாவை ஒத்திருப்பதால் சிலவேளைகளில் நானும் குழம்பிப்போகிறேன். சீமா பிறந்தபோது நானும் சாஹித்தும் சேர்ந்து திரைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தோம். சீமாவுக்காக ஓர் ஆயாவை ஏற்பாடு செய்தோம். ஒவ்வொரு மாலையிலும் அழுக்குத் துணிகள் குவிந்தன. எனக்கு ஒரு யோசனை தோன்றியது. கூரையின் இரு புறங்களிலும் இரு கயிறுகளைக் கட்டி துணி ஒன்றைத் தொங்க விட்டேன். ஒரு துணியைக் குழந்தையின் அடியில் போட்டு, அது அழுக்கானதும் இன்னொரு துணியைப் போடுவேன். மாலையில் அந்தத் துணி மட்டுமே சுத்தம் செய்ய வேண்டியதாக இருந்தது." இந்தக் கதைகளை கேள்விப்பட்ட அக்கா கதை போல எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். என் மாமியார் வந்தார். மாமியார் போன்றதொரு நிகழ்வுகளை ஒருபோதும் எண்ணிப் பார்த்திராத நான் பயத்தால் உறைந்து விட்டேன். ஆனாலும் என்ன செய்வது அவரை வணங்கி, அறைக்குள் வரவழைத்தேன். சாஹித் ஏற்கனவே கிளம்பியிருந்ததால், படப்பிடிப்புக்கு நான் போக வேண்டிய அவசரம் குறித்து விட்டு வந்தார். அவர் என் கீர்த்தியைக் கேள்விப்பட்டிருந்தனர். உன்னால் காலைச் சாப்பாட்டைச் செய்ய முடியுமா?" என்பதாயிருந்தது. "முடியும் ஆம்லெட்கள் மட்டும். நீங்கள் வந்துவிட்ட பின் நானெதற்கு கவலைப்பட வேண்டும்? இந்த வேலையாட்கள் நம்மைக் கொள்ளையடித்து விடுகிறார்கள். அம்மா சாஹித்திற்கு கெபப் என்றால் பிரியம். கெபபைப் பொறுத்த மட்டில் தன்தாயை யாரும் விஞ்சிட முடியாது என்று அடிக்கடி கூறுவார் வேலையாட்களைக் கறிவாங்கிவருமாறு கூறி, அவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் கற்றுக் கொடுத்து விடுங்கள்." தன் ஆயுளில் முதல் முறையாக சவாலுக்கு உள்ளான அவர், தன் பாணியை மாற்றிக் கொண்டார். "உன் மாமனார் முன் முகத்தில் பர்தாபோட்டுக் கொள்வதில்லை என்று கேள்விப்பட்டேனே" என்றார். "எனக்கு அவமானம்! ஏன் போடவேண்டும்? எனக்கு தருமசங்கடமாயிருக்கிறது"

என்று பதிலளித்தேன். கிழவி இத்தகைய பதிலை எதிர்பார்க்கவே இல்லை. இருநூறு ரூபாயைத் தந்ததும், இதனை வைத்துக் கொள்ளுங்கள். கூறி தவிர சமையலறையில் வேறென்ன இல்லை என்று தெரியவில்லை" என்றேன். கிழவி இருநூறு ரூபாய்களைத் தன் பர்ஸில் கவனமாக வைத்துக் கொண்டு. இத்தகைய மருமகளிடம் எதனையும் எதிர்பார்ப்பது சரியல்ல என்று எண்ணிக் கொண்டவர்போல, அக்காவை ஒரு தினுசாகப் பார்த்தபடி சமையலறைக்கு விரைந்தார். விஷமமான புன்னகையுடன் அக்கா கூறினார். ஒவ்வொரு நாளும் படப்பிடிப்புக்குக் கிளம்பும் முன் பணத்தைத் தந்துவிடுவேன். வகை வகையான பதார்த்தங்கள் தயாராகின. நண்பர்களைக் கூட அழைத்தோம். எங்கள் தந்திரங்களைக் கண்டு அவர் எரிந்து விழுவதுண்டு. என்றாலும் அவர் இருந்த மட்டிலும் சொர்க்கமாயிருந்தது.

அக்கா, அவரது பெற்றோருக்கு எஞ்சியிருக்கும் குழந்தைகளில் பத்தாவது ஆவார். "நான் பிறந்தபோது என் அம்மாவுக்கு குழந்தைகளிடமான ஆர்வம் இல்லாது போயிற்று. அவள் நிஜமாகவே என்னை வெறுத்தாள். என் சேட்டைகளுக்காக அவள் என்னை அடித்தபோது நான் ஓடவேண்டியதாயிருந்தது. என்னைப் பிடித்து தருவதற்காக என் சகோதரர்களுக்கு அவள் காசு தருவாள். "உங்களுக்குக் காசு கிடைக்கும் வகையில் சரணடைகிறேன். அப்புறம் ஓடிவிடுவேன். ஆனால் உங்களுக்குக் கிடைப்பதில் எனக்குப் பாதி வந்துவிட வேண்டும்." என்று என் சகோதரர்களுடன் சேர்ந்து திட்டம் போட்டேன். "மற்றவர்கள் நிறையச் சாகும்போது நீ ஏன் ஒளிய மாட்டேன் என்கிறாய், திருடி நீ என்று திட்டுவாள், ஒவ்வொரு இரண்டாவது ஆண்டும் என்தாய் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பாள். இடையே இரண்டல்லது மூன்று குழந்தைகள் இறந்து விட்டன. கடைசியில் இந்தச் சோதனைக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் வெற்றிகண்டது ஒரு குரங்குதான். கருவுற்றிருந்த அம்மா, குழந்தை பெற்றெடுக்கும் சமயத்தை நெருங்கி இருந்தாள். முற்றத்தில் அமர்ந்து வயிற்றில் ஒரு தட்டைத் தாங்கிப் பிடித்தபடி, பயறு தின்று கொண்டிருந்தாள். பயிற்றின் மீதான ஆசையைக் கட்டுப்படுத்த முடியாத ஒரு குரங்கு, அவள் வயிற்றில் தாவிவிட்டது. கருக்குலைந்து போன அவளுக்கு அதன் பின்னர் பிள்ளை இல்லாது போயிற்று.

"என் தாய் என்னைத் தன் மடியில் வைத்துக்

கொண்டதே கிடையாது. எனக்குப் பால்தர ஒரு பசு இருந்தது, என் அக்காதான் என்னைத் தூக்கிக் கொண்டு திரிந்தாள். எனக்கு நான்கு வயதே ஆகியிருந்த போது உயர்ந்து, ஒல்லியாயிருந்த வத்தலும் தொத்தலுமான நான் ஒரு மாலையை பிய்த்துக் கொண்டிருந்தேன் என்று எண்ணுகிறேன். அவர் ஒரு போலீஸ்காரர், சகோதரியின் மெட்டியில் மணி ஒன்றுள்ளது. போலீஸ்காரருடன் சகோதரி கிளம்புகிறாள், என்று என் குடும்பத்தினர் என்னைச் சீண்டுவதுண்டு.

"சந்துகளில் திரிந்து கொண்டிருக்கும் அபலைப் பெண்ணொருத்தியைக் குறித்து அடிக்கடி கனவு வருவதுண்டு. அது நானே, என் சகோதரர்கள் சேர்ந்து விளையாடுவார்கள் மற்றும் சகோதரிகளும் சேர்ந்தமர்ந்து தம் எதிர்காலக் கணவன்மார் பற்றிக் கனவு காண்பார்கள், இரு தரப்புகளும் என்னை வெறுக்கவே, அரசியல் மொழியில் நான் "சுதந்திரமானவளாக" தனித்திருந்தேன். வேலைக்காரர்களிடையே ஒரு சிநேகிதி இருந்ததால், அவர்கள் இருந்த பகுதிக்கு அடிக்கடி போனேன். அவளுக்கு பன்னிரண்டே வயதாயிருந்தபோது திருமணமாகிவிட்டது. நான்கு நாட்களுக்குப்பின் அவள் புக்ககத்திலிருந்து திரும்பி வந்ததும், "திருமணமே செய்து கொள்ளாதீர்கள், கணவர்கள் படுமோசம்" என்றாள்.

"படிப்படியாக, வீட்டில் உட்கார்ந்திருந்ததை விட, கொய்யா மரங்களில் ஏறுவது பிடிக்கலாயிற்று. வேலைக்காரர்களிடம் வாதிட்டுக் கொண்டிருந்ததைவிடவும், குரங்குகளைக் கவனிப்பது வேடிக்கையாயிருந்தது, வரதட்சணை பற்றி மண்டையை உடைத்துக் கொள்வதற்குப் பதிலாக, கோழிகள் பின்னே ஓடுவது சந்தோஷமாயிருந்தது.

"என் உறவினர் வீட்டுப் பிள்ளைகள் எங்கள் வீட்டில் தங்கினர். ஆனால் யாரும் என்னுடன் சேர்ந்து விட துணிவு கொள்ளவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவராயிருந்த என் அப்பாவின் பெரிய மாளிகையில் பன்னிரண்டு ஆண்டு காலத்தை சடுகுடு ஆடியும் கால்பந்தாடியும் பட்டங்கள் விட்டும் கழித்தேன். என் சகோதரர்கள் வெள்ளை நிற மட்டக்குதிரைகளில் சவாரி செய்தபோது, நான் அழுவதுண்டு. ஒருமுறை நான் அழுவதைக் குதிரைக்காரனிடம் கூறினார். இப்படியாக குதிரைசவாரி செய்யத் தொடங்கினேன். இத்தகையவளை யாரே மணம்புரிந்து கொள்வார்?

என்று அம்மா விசனப்படுவதுண்டு.

"வீட்டுப் பிரச்னைகள்" அதிகரித்து வரும் உறவினர் எண்ணிக்கையால். என் அப்பா சலிப்புற்றுப் போனார். அவர் ஒரு பெண்ணுக்கு வீடொன்று கட்டிக் கொடுத்திருப்பது பற்றியும் அங்கே தெரியவந்தது. அந்நாட்களில் அவர் வீட்டுக்குத் தாமதமாக வந்துகொண்டிருந்தார். சூனியம், தாயத்து என எல்லாத் தந்திரங்களையும் அம்மா கையாண்டு பார்த்தும் பலனில்லை. அப்புறம் அவளுக்குப் புதிரான யோசனை ஒன்று தோன்றிற்று. ஒரு மாலைநேரத்தில் தன் காமக்கிழத்தியுடன் அவர் இருந்தபோது, இரண்டு - மூன்று டோங்கா வண்டிகளில் சிறுவர்களுடன் வந்து சேர்ந்தாள் அம்மா சொல்லி வைத்தபடி. வீட்டுக்குள்ளே போன சிறுவர்கள் கூச்சலிடத் தொடங்கினர்.

"தந்தையே, வீட்டுக்கு வாருங்கள். மாமாவே, வீட்டுக்கு வாருங்கள். தாத்தாவே, வீட்டுக்கு வாருங்கள்."

"எனக்குப் பன்னிரண்டு வயதாகும் வரையும் என்னால் குரானை மட்டுமே வாசிக்க முடிந்தது. பாருங்கள், இந்த வயதில் இவளால் குரான் ஷரிஃபை மட்டுமே வாசிக்க முடிகின்றது. யாரோ ஒருவரின் மருமகள் ஐந்தாவது வயதிலேயே அதனைப் படித்து விட்டாள். அத்துடன் அவளால் துணிகளைத் தைக்கவும் முடியும். இந்தப் பெண் விதவையாகி விட்டிருந்த என் பெரிய அக்காவின் மகள். இந்தச் செய்தி வந்து சேர்ந்த அன்றைக்கு பெரிய களேபரம் நடந்தது. என் சகோதரியைக் கூட்டிச் சென்றது போலீஸ்காரர் என்றெண்ணினேன். இப்போது அவள் திரும்பிவிடுவாள். அந்த அநாதைப் பெண் பற்றி நான் கனவு கண்டிருக்க வேண்டியதில்லை. ஆனால் ஆண்டவனின் சித்தம் அப்படி இருக்கவில்லை.

"எனக்குப் பன்னிரண்டு வயதானதும் இதனை உணர்ந்து கொண்ட அம்மா, பழைய ஆடை ஒன்று, நூல் மற்றும் ஊசி தந்து, தைக்கச் சொன்னாள். அம்மா இருந்தவரை முயன்று பார்த்தேன். அது மூச்சுத்திணறுவதாய் இருந்தது. சுற்றித் திரியும் கோழிகளின் பின் சென்றேன் (அ) மரத்தில் ஏறும் சகோதரர்களுடன் சென்றேன். அதன் காரணமாக என் விரல்களில் முட்கள் குத்தின. கடைசியில் அடுத்த குளிர்காலம் வரையிலும் தேடி எடுக்க முடியாதபடிக்கு ஆடைகளை ஓரிடத்தில் போட்டு விட்டேன்..."

ஒரு நாள் அக்கா பக்கோடா வறுப்பதை "எப்படி இருக்கிறது, பார். மிகவும் சுவையானது. இரண்டு-மூன்று நாளான தயிருடன் சேர்த்து பரிமாறுவதற்காகத் தயாரித்துக் கொண்டிருக்கிறேன். பக்கோடாவையே எடுத்துக் கொள்ளலாம் என்று இப்போது கருதுகிறேன். உனக்குப் பிடிக்கின்றதா?"என்றார்.

"அற்புதம்! இதில் என்ன சேர்ந்துள்ளன?"

"கையில் கிடைக்கும் எல்லாமும்"

"யாரேனும் ஒருவரிடமிருந்து நீங்கள் சமையல் கற்றுக் கொண்டிருக்க வேண்டும்?"

"என் அம்மா முடிந்தவரை முயன்றார், நான் மறுதலித்து விட்டேன். அவள்கூச்சலிட்டபோது, என் சகோதரன் ஷாநாஸைக் கற்றுக் கொள்ளுமாறு அவள் ஏன் கேட்பதில்லை என்று வினவினேன். அவன் மனைவி வரும்போது அவள் சமைத்துக் கொள்வாள்"என்றாள். "அவன் மனைவி இறந்து போனால் (அ) யாரேனும் ஒருவருடன் ஓடிப்போனால், என்னாவது?" என்றேன். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஷாநாஸ்பாய் அழத் தொடங்கினான். "என் மனைவி ஏன் ஓடிப்போகவேண்டும்" அவன் அழுவதை அப்பா பார்த்தார். எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுவிட்டுக் கூறினார். உணவு பெண்டிரால் சமைக்கப்படுகிறது. உனக்குத் திருமணமாகும்போது நீ என்ன செய்வாய்?" நான் கூறினேன். "மணமகன் ஏழையானால் அவர் கிச்சடி செய்து சாப்பிட்டுக் கொள்வார், வசதி கொண்டவரானால் சமையல்காரனை வைத்துக் கொள்வார்!

என்னைப் புரிந்து கொண்ட அப்பா, இந்தப் பெண்ணை நம்பிப் புண்ணியம் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார். இவளைத் திருத்த முடியாது. "என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறாய்?" என்றேன். ஒருமாதம் என் தாய்வழி மாமா கற்றுக் கொடுத்ததில், நான்காம் வகுப்பில் சேருமளவுக்கு கற்றுக் கொண்டேன். பிற்பாடு ஆறாம் வகுப்பிற்கு இரட்டைத் தகுதி பெறுமளவுக்கு நன்றாகப் படித்தேன். படிக்காத பெண்கள் "முட்டாள்கள்" "மக்குகள்" என்ற அவர்தம் கணவன்மார்களால் அழைக்கப்படுவார்கள் என்பதை

அப்போது அறிந்து கொண்டேன். இருந்தபோதிலும் அவர்கள் வீட்டுக்குள் அடைந்து கிடந்தபடியே சுற்றிவந்து கொண்டிருப்பார்கள். எது வந்தாலும் தொடர்ந்து படிக்கப்போவதாக உறுதி கொண்டேன். கணவராலே வேறு யாராலுமோ அதனைத் தடுக்கவும் இயலாது!

கவிதை பற்றி அக்கா மிகவும் அக்கறை கொண்டார் என்று என்னால் நிச்சயிக்க முடியாதிருந்தது. அவரைச் சீண்டுவதற்காக அவ்வப்போது ஒன்றிரண்டு வரிகளை நான் கூறுவதுண்டு.

"மீண்டும் மீண்டும் மடிகின்றோம் விசுவாசமற்றவருக்காக, திரும்பவும் அவரிடம் சரண்புகுகின்றோம் வாழ்க்கையினை வாழ வேண்டியிருப்பதால்"

அக்கா என்பக்கமாய் திரும்பி, "உனது வாழ்க்கையின் விசுவாசமற்ற காலகட்டத்தில் இப்போது நீ வாழ்ந்த கொண்டிருக்கிறாயா?" என்று வினவினார். இருவருமே சிரித்துவிட்டோம்.

"அக்கா, நீங்கள் எப்போதேனும் காதல்வயப் பட்டிருந்தீர்களா?" என்று கேட்டேன். "அய்யோ, அதுபற்றி கேட்காதே. நான் மணமுடிக்க விரும்பாதிருந்தேன், அதற்காக காதல்வயப்படுவதினின்றும் தடுக்க முடியாதே. எனக்கு 12 (அ) 13 வயதாயிருந்த போதே, எனக்கு அண்டை வீட்டிலிருந்த 26 (அ) 27 வயதுப் பையனை விரும்பினேன். காலையில் அவன் குதிரை ஒன்றில் சவாரி செய்வதுண்டு. நான் அடைபட்டுக் கிடக்கும் இடத்திலிருந்து அவனை உற்றுநோக்குவது வழக்கம். இச்சிறுபெண் தன்னிடம் பைத்தியக்காரத்தனமாக காதல் கொண்டிருந்ததை அவன் கனவு கண்டிருக்க மாட்டான். அதன்பிறகு சில தடவைகள் காதல் கொண்டேன், ஆனால் இம்முதல்காதல் குழந்தைமை மற்றும் இளமையின் நினைவை எப்போதும் அழகாக்கிவிட்டது. ஒரு நாள் சாஹித்தின் படத்தில் உதிரிவேடம் ஒன்றில் நடிப்பதற்கான நபர்களின் வரிசையில் கிழவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் ஓடோடிவந்து தழுவினான். இவன்தான் எனது முதல்காதலுக்குரியவன் என்றறிந்ததும், அக்கால கட்டத்தில் இவன் ஒருமுறையேனும் தழுவி இருந்தால், வாழ்க்கை வேறுவிதமாயிருக்கும் என்றெண்ணினேன்.

"முட்டாளே, என் குழந்தைப் பருவத்தை இப்போது அசிங்கமானதாக ஆக்கிவிட்டாய்" என்றேன்.

"அதன் பின்னர் வேறு யாரையும் விரும்பவில்லையா?" என்று கேட்டேன். அக்காவிடமிருந்து உடனே பதில் வந்தது. "ஏன் இல்லை? பெண்கள் சுற்றித்திரிந்து கொண்டிருந்த, அழகானதும் புத்திசாலியுமான பையன்கள் பலர் இருந்தனர். கோளாறு கொண்டவர்களும் வத்தல் - தொத்தலுமான பையன்களே பெண்கள் பின்னர் ஓடினர். ஒரு கிறித்தவப்பையனால் பல பெண்கள் தூக்கத்தை இழந்தனர். அவன் எனக்கு நல்ல சிநேகிதன். தேசியத் தலைவர் யாரேனும் வரும்போதெல்லாம் பல்கலைக்கழகத்தில் அவர்களின் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அரங்கத்திற்குள் அவர்கள் அமைதியாகவும் அமரிக்கையாகவும் இருப்பார்கள், அங்கிருந்து வெறியேறிவிட்டால் ஆபாச நகைச்சுவைகள் கவிதைவரிகளுடன் பெண்களின் பின்னே திரிவார்கள். பெண்கள் பெரிதும் சிரமத்துடன் அக்கட்டத்தை கடந்து போவார்கள். பையன்கள் எங்களுடன் சிநேகமான இருக்க விரும்புகிறார்களே ஒழிய, தீங்கிழைக்கப் போவதில்லை என்று கருத்துக் கூறினேன். ஆனால் ஒருவரும் அதனை ஒத்துக் கொள்ளவில்லை.

ஒருநாள் இத்தகைய சொற்பொழிவு முடிந்து நாங்கள் திரும்புகையில் சாலையின் அடுத்த பக்கத்தில் ஒருவன் கவிதைவரிகளைக் கூறினான். "இது ஜிகாரின் கவிதையா" என்று கேட்டேன். தன் காதுகளை நம்பமுடியாத அவன், அப்பெண்குரல் எங்கிருந்து வந்தது என்று சுற்றுமுற்றும் நோக்கினான். "அய்யோ இது (Drag)விருந்து வரும் வரிகள். இருளில் எதற்கு தேடிக் கொண்டிருக்கிறாய்?" என்று மீண்டும் கூறினேன். மிகவும் நடுக்கமுற்ற அவன் பெண்களிடம் "அவர்கள் சிநேகிதராக விரும்புவதைப் பாருங்கள்" என்றான். அவர்தம் பெற்றோர் அனுப்பியிருந்த மாம்பழங்களைப் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு நாங்கள் பெரிய சிநேகிதரானோம்.

ஒருநாள், மும்பையின் சிவப்பு விளக்குப் பகுதியான பிண்டி பஸாருடன் தொடர்புடைய கதை ஒன்றினை அக்கா கூறினார். "சீமாவுக்கு மலர் அலங்காரங்கள் என்றால் பிரியம். அப்பகுதியில் சிறிது பூக்களை வாங்கிவிட்டு, டாக்ஸிக்காக காத்திருந்தபோது தன் காரிலிருந்து இறங்கிய ஒரு நபர் "போகலாமா?" என்று வினவினான். சரி என்று கூறிய அவர், காரில் அமர்ந்தார்.

"ஓட்டலுக்குப் போவோமா?"என்று அவன் கேட்டதும், "ஏன்?, என் இடத்திற்குப் போகலாம், அது பணத்தைச் சிக்கனமாக்கும்" என்று கூறினார். அவன் சந்தோஷப்பட்டான். வீட்டுக்குப் போகும் வழியை அக்கா சுட்டிக் காட்டினார். அவர்கள் வீட்டை அடைந்தபோது அங்கே சீட்டாடிக் கொண்டிருந்தவர்கள் அலி சர்தார் ஜாஃப்ரி, மஜ்ரூ, சுல்தான்பூரி, சாஹிர் லூதியான்வி, சாஹித் மற்றும் வேறு இரண்டு-மூன்று நபர்கள். திண்டாடிப்போன அந்நபர், ஏதோ கோளாறு என்பதை உணர்ந்து கொண்டான். அவனை ஓர் இருக்கையில் அமருமாறு அக்கா கூறியதும், "இஸ்மத், உனக்கு சில தொலைபேசி அழைப்புகள் வந்தன" என்று சாஹித் குறிப்பிட்டார். அப்போது இஸ்மத்தை அடையாளங் கண்டு கொண்ட நபர், கிளம்புவதற்காக நடுக்கத்துடன் அனுமதி வேண்டினான். "என்னை இங்கே இறக்கிவிட நிறையச் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறாய். தேநீர் தராது உன்னை எப்படி நான் கிளம்ப அனுமதிப்பது? அத்துடன் கெபாபும் தயாராகிவிட்டது. சிறிது சாப்பிடு" என்றார். அக்கா. அந்நபர் பெரிதும் குழம்பிப் போனான். அவசர வேலை எதனையோ கூறிஅங்கிருந்து கிளம்பினான். மற்றவர்களிடம் இக்கதையை அக்கா கூறியதும், அவர்கள் அந்த ஆட்டத்தை கைவிடவேண்டியதாயிற்று. கடைசியில் அக்கா அவனுக்காகப் பரிந்து பேசினார் " அது அவன் தவறல்ல. அந்நாட்களில் நான் வேசியைப் போலவே தோற்றமளித்தேன். கரியமுடி எனக்குப் பொருந்தவில்லை என்பதுதான் உண்மை. அவற்றை வெண்மையாக்கிட நான் பெருமுயற்சி மேற்கொள்ள வேண்டியிருந்தது. பிற்பாடு என் தோற்றம் மாறிவிட்டது, நன்மை அளிக்கும் வகையில்."

அக்காவின் பேரன் ஆஸ்ஸிக்கு வயதான நாளன்று, "பாட்டி., எனக்கு 21 வயதாகிறது, என்றதும், 71 தான் ஆகிறது" என்று கூறியிருக்கிறார். "அப்போது நீதான் எனது முதல் பெண் சிநேகிதி" என்று ஆஸ்ஸி குறிப்பிட்டானாம். ஆஸிஸ் கிளம்பியபின் அக்கா என்னிடம் சொன்னார். " உன் மகளுக்கு இப்போது ஐந்து வயது. ஆஸிஸ் அவளது (Rakhi) சகோதரனாகிவிட இது சரியான நேரமல்லவா?"

அக்கா அனைத்து பண்டிகைகளையும் கொண்டாடுவதுண்டு. "என் குழந்தைப் பருவத்தில் தீபாவளி கொண்டாடியாக வேண்டும் என்று நாங்கள்

ஒருமுறை பிடிவாதம் காட்டினோம். அம்மா அகல்களை ஏற்றினார். அப்பா திரும்பி வந்ததும் வேடிக்கையாக "முஸல்மானின் வீட்டுக்குள் லட்சுமி எப்படி நுழைவாள்?" என்று குறிப்பிட்டார். கள்ளங்கபடமில்லாத அவரின் மனைவி, அவள் விளக்குகளைப் பார்த்துவிட்டு நுழைவாள். இது முஸல்மானின் வீடென்று அவள் எப்படி, பிரித்துப் பார்ப்பாள்?" என்று கூறினாள்.

தனது குழந்தைப் பருவத்தில் ஜன்மாஷ்டமியின்போது அக்கா அண்டைவீட்டார் ஒருவரின் வீட்டுக்குச் சென்றார். அலங்கரிக்கப்பட்டு தொட்டிலில் கிடத்தப்பட்டிருந்த கிருஷ்ணர் பொம்மை மீது அவருக்குக் கொள்ளை ஆசை. ஆரத்தி எடுக்கையில், கற்பூரத்திலிருந்தும் ஊதுபத்திகளிலிருந்தும் எழுந்த புகை மண்டியபோது, அவர் பொம்மையை எடுத்துக்கொண்டு, கிளம்பிவிட்டார். அவர் தொட்டிலில் குனிவதைச் சிலர் பார்த்து விடவே, பெரும் அமளி உண்டானது. கேள்விகள் கிளம்பின. அம்மாவிடம் சரியான அடி கிடைத்தது. ஆனால் அவர் உறுதியாக மறுதலித்தார். அப்போது அவர் பொம்மையினை கழிவுநீர்க் குழாயில் மறைத்து வைத்திருந்தார். பின்னர் அம்மா அறையைச் சுத்தம் செய்தபோது கழிவு நீர் அடைத்துக் கொண்டு நிற்கவே, சின்னகிருஷ்ணன் குழாய்க்குள் நடுங்கிக் கொண்டிருந்தது தெரிய வந்தது. அம்மா அதனைச் சுத்தம் செய்து அண்டை வீட்டாருக்குக் கொடுத்தனுப்பினாள். ஆனால் அக்காவோ அவர்களிடம் போராடி அதனை மீட்டுவந்து விட்டாள். அதிலிருந்து இன்றுவரையும் சின்னக்கண்ணன் அவர் வீட்டை அலங்கரித்துக் கொண்டு வருகின்றான்.

"என் குழந்தைகளில் நால்வரை இழந்து விட்டேன். இதனை ஏன் இழந்திருக்கக் கூடாது? அல்லாவுக்குக் கூட இவள் தேவைப்பட மாட்டாள்" என்று அவரின் அம்மா அழுவதுண்டு.

அக்கா அசாதாரணமான முறையிலே சிறுகதைகள் எழுதினார் அவள் கதைகளைக் கொண்ட, கிராக கோடு போடப்பட்ட தாள்கள் படுக்கையறையில் சோம்பேறித்தனமாகக் கிடக்கும் நீல முத்துக்களால் ஆன நெக்லஸ் போல் அவர் பேனாவிலிருந்து கடிதங்கள் பிரவகித்தன. எழுதத் தொடங்கியிருந்த போதும் ஒட்டுமொத்தக் கதையினையும் அவரால் கூறமுடியும் அதன் ஆதாரம், அவர் மேற்கொண்ட மாற்றம் (அ) அது

பின்னப்பட்டுள்ள விதத்தை எடுத்துரைப்பார். அவர் இறந்த பிறகு அக்கதைகள், கட்டிடம் ஒன்றில் முழுமையுறாத பகுதிகளாக அங்கு கிடந்தன. அக்கதைகளுக்கு இறுதி வடிவம் தந்திடும் நிலையில் யாரும் இல்லை. அவன் வசிக்கும் போது அவர் எடுத்துரைத்ததில் ஒவ்வொரு துளியையும் என்னால் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியும் (ஜோ பேர்) அவரது நிஜமான அத்தை.

ரஜீந்தர் சிங் பேடி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது அவரைப் பார்ப்பதற்காக அக்காவுடன் போனேன். அவர் வயிற்றுப் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவரது ஆரம்ப காலம் தொட்டு நண்பர்களாயிருந்த யாரும் அவரைப் பார்க்க வரவில்லை. ஒருநாள் அவர் கட்டிலிலிருந்து விழுந்து மோசமான நிலையில் இருந்தார். அக்காவைப் பார்த்ததும் "இப்போது சாவது மேலானதில்லையா" என்றழுதார். "உயிர்த்திருந்தது பெரிதாக ஏதேனும் செய்திருக்கிறீர்களா? நீங்கள் இறந்து விட்டால் பெரிதாக என்ன இருக்கப் போகிறது! நீங்கள் இருந்தபடியே உயிருடன் தங்கிவிடுவது மேலானது" என்றார் அக்கா. அவ்வளவு வேதனையிலும் பேடி சாஹிப் சிரிக்கத் தொடங்கினார்.

நாங்கள் டெல்லிக்குப் புறப்பட்டபோது அவர் மிகவும் சோகமாயிருந்தார். 1984 கலவரங்களின்போது சீமாவிடமிருந்து எங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. "நாள்பூராவும் இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்த அம்மா உங்களைத் திட்டினார்" என்றாள் அவள். "என்னைப் புண்படுத்துவதற்காகவே அவள் சர்தாரை டெல்லிக்குக் கூட்டிப் போயிருக்கிறாள்" "நாங்கள் இங்கே நலம்! கவலைப்பட வேண்டாம்" என்று அப்புறம் தெரிவித்தேன். பிற்பாடு அவர் மும்பையில் சர்தார்ஜியைச் சந்தித்ததும், தழுவிக்கொண்டு அழுதார் "அய்யோ, சர்தார்ஜி, நீங்கள் உயிரோடு இருப்பது ஆண்டவன் கருணையில்தான். எவ்வளவு குரூரமாய் உங்களைத் துண்டாடி இருப்பார்கள் என்று கவலைப்பட்டேன்"

டெல்லிக்கு நாங்கள் வந்து சேர்ந்ததுமே என் சிநேகிதி அஜீத் கௌருக்கு சாஹித்ய அக்காதெமி பரிசு கிடைத்தது. அதன் பொருட்டு என் வீட்டில் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்தேன். இஸ்மத் அக்கா, சிவானி மற்றும் பல பெண் எழுத்தாளர்கள் அதில்

கலந்து கொண்டனர். ஒரு சம்பிரதாயத்திற்காக சில ஆண் எழுத்தாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இஸ்மத் அக்காவும் குந்துல் ஹைதரும் மனஸ்தாபம் கொண்டிருந்தனர் என்பது எனக்குத் தெரியவே தெரியாது. ஒரு நண்பருடன் மூலையில் அமர்ந்திருந்த ஹைதரிடம் சென்ற அக்கா, "சூனியக்காரியே, என்னுடன் பேசப்போகிறாயா, இல்லையா?" என்று கூச்சலிட்டார். பிற்பாடு அவர்கள் திரும்பவும் சிநேகிதியர் ஆகிவிட்டனர். நண்பர்களுக்கிடையேயான பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள இத்தகைய முயற்சியை ஏன் செய்ய மாட்டார்கள்?

அக்கா ஒரு முறை கூறினார். "நான் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கையில், வரன்கள் வரத் தொடங்கின. அவர்களுள் ஒருவர் துணை ஆட்சித் தலைவர். தனது சூனியக்காரி போன்றவளான மகளை சட்டென்று மணம் செய்து தந்துவிடவேண்டும் என்று அம்மா உடனே தீர்மானித்து விட்டாள். போற்கொல்லரும் டெய்லர்களும் அமர்த்தப்பட்டனர். ஒருநாள் பள்ளியிலிருந்து திரும்பிய நான் வீட்டில் நடந்த அமர்க்களத்திற்குக் காரணத்தைக் கேட்டறிந்து கொண்டேன். நான் திருமணம் செய்யப் போவது இல்லை என்று உடனே அறிவித்தேன். எனக்குப் பைத்தியம்" என்றாள் அம்மா. திருமணம் செய்து கொள்ளாவிட்டால் வேறென்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டார் அப்பா. "நான் படிக்கப் போகிறேன்" என்றேன். "உன் மாமனார் - மாமியார் வீட்டில் படிப்பைத் தொடரலாம்" என்றார் அப்பா. அக்கா விடவில்லை. "பெண்கள் அங்கே செய்யக்கூடியதெல்லாம் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதே, அங்கே படிப்பதற்கு யார் அனுமதிக்கிறார்கள்?"

"ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டும் என்று இரவெல்லாம் யோசித்த பிற்பாடு, மும்பையிலுள்ள மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த என் மாமா மகனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அவனுடைய குறுக்கீடு மட்டுமே மறுதலிக்கப்பட மாட்டாது என்பதால், இச்சிக்கலிலிருந்து என்னைக் காப்பாற்றுமாறு அவனை வேண்டினேன். என் தாய் மாமாவின் மகனான அவன் என்னைத் திருமணம் செய்து கொள்ள இருப்பதாக என் தந்தைக்கு எழுதினால் போதும், இந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடும். நான் ஒருபோதும் மணம்

செய்துகொள்ளப் போவதில்லை என்று குரான் ஷாரிஃப், அல்லா மீது மற்றும் என் படிப்பின் மீது பிரதிக்ஞை செய்தேன். என் சகோதரன் பொறியில் சிக்கிவிட்டான். வீட்டை வெள்ளையடிப்பதற்கான ஏற்பாடுகளை என் அம்மா செய்திருந்த நான்கு-ஐந்து நாட்கள் கழித்து, என் தாய்-மாமா ஓடிவந்தார். "இவளை சௌகத் மணந்து கொள்ள விரும்புகிறான். இவளை நீ அந்நியன் ஒருவனுக்கு மணம் செய்து தர முடியாது" என்று தன் சகோதரியிடம் தெரிவித்தார். என் அம்மாவின் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அரைகுறையாக தைத்திருந்த துணிமணிகளை மற்றும் உருக்கிய பொன்னுடன் டெய்லரும் பொற்கொல்லரும் அனுப்பப்பட்டனர் மற்றும் திருமணம் தள்ளி வைக்கப்பட்டது".

"அக்கா, உங்கள் குழந்தைப் பருவத்தில் ஒருபொழுதும் புர்கா போட்டுக்கொண்டதில்லையா?" என்று கேட்டேன்.

"நான் புர்காவைக் கைவிட்டு நீண்ட காலமாகிறது. மிகவும் அவசியமாயிருந்தால், யாரேனும் ஒருவரிடமிருந்து இரவல் பெற்றுக் கொண்டேன். சிறிது காலத்திற்குப் பின் கதர் அணியத் தொடங்கிவிட்டேன். காந்திஜி லக்னோவுக்கு வந்தார். நாங்கள் சிலர் அவரிடம் ஆட்டோகிராப் வாங்கச் சென்றோம். நாங்கள் கதர் அணிந்தால் மட்டுமே கையொப்பம் இட்டுத் தருவதாகத் தெரிவித்தார். மாலையில் நாங்கள் ஒவ்வொருவரும் 200-ரூபாய்க்கு கதர்வேட்டிகள் வாங்கினோம். அடுத்த நாள் முரடானதும் சுருக்கங்கள் நிறைந்ததுமான கதர்வேட்டிகளைச் சேலைகளாக உடுத்திக்கொண்டு, காந்திஜியைச் சந்தித்தோம். சந்தோஷமடைந்த அவர், எங்கள் ஒவ்வொருவருக்கும் கையொப்பமிட்டுத் தந்தார். கதர் அணிந்ததற்காக கைது செய்யப்படுவதினின்றும் எப்படித் தடுக்கப்பட்டேன் என்னும் கதையைக் கூறுகிறேன். அந்நாட்களில் நான் ஒரு வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மாவைப் பார்ப்பதற்காக இரயிலில் ஜோத்பூர் சென்றேன். பகலில் மூன்றாம் வகுப்பிலிருந்தேன். இரவில் முதலாம் வகுப்பு டிக்கெட் வாங்கிவிட்டேன். பளிச்சிடும் வெள்ளைச்சேலை, கண்ணாடி, தோளில் தொங்கும் பை சகிதமாக நான் ஜோத்பூரில் வந்திறங்குவதாக அவர்களுக்குத் தந்தி வந்திருந்தது. அதிருஷ்டவசமாக என் மாமா அங்கே துணை ஆய்வாளராக இருந்தார். காங்கிரஸ் தலைவரின் இடத்தில் நானிருந்ததைக் கண்டதும் அவருக்குத்



தூக்கிவாரிப் போட்டது. "நீயா! இவள் என் மருமகள்" என்று கூறினார். அவர் வேறெதுவும் சொல்லவில்லை. நாங்கள் வீடுவந்து சேர்ந்ததும் ஏன் இந்த வேடிக்கை பண்ணிக் கொண்டிருந்தாய்," என்று திரும்ப திரும்ப கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். "எந்த வேடிக்கை? கதர்சேலைதானே உடுத்திருந்தேன்" என்று நான் பதிலடி கொடுத்தேன்."

"அச்சமயத்தில் தலைமை ஆசிரியைப் பணியிடம் காலியாயிருந்தது. ஜோத்பூரிலிருந்து முஸ்லிம்களுக்கு சட்டரீதியாகக் கிடைக்க வேண்டிய முழக்கம் முன் வைக்கப்பட்டபோது, எனக்கு அந்த வேலை கிடைத்தது. " கவனி! பள்ளிக்குப் போகையில் நீ புர்கா அணிந்து கொள்ள வேண்டும்" என்று தாய்-மாமா அறிவுறுத்தினார். ஆரம்பத்தில் அவர் இதனை இலேசாகவே கூறிக்கொண்டிருந்தார் என்று கருதினேன். பின்னர் நான் சட்டை அணிவதையும் கைவிட்டு, "புர்கா போட்டுக் கொள்ளவேண்டும் என நீங்கள் 'பிடிவாதம் காட்டினால், நான் வேலையை விட்டுவிடுவேன்' என்று கூறினேன். என் பிடிவாத குணத்தை அவர்கள் நன்கறிந்து இருந்தால், அதன்பிறகு யாரும் வற்புறுத்தவே இல்லை. மெட்ரிக் முடித்தபிறகு படிப்பைத் தொடர்வதற்கு அப்பா அனுமதிக்காததால், "மிஷனுக்குப்போய் கிறிஸ்தவத்திற்கு மாறிவிடுவேன்"என்று நான் மிரட்டுவதுண்டு. "நீ எப்படி அங்கேபோவாய் ? என்று அவர் வினவியதற்கு இரயில்பாதை வழியே போய்விடுவேன். எனக்கு வழி தெரியும். என்னை அவர்கள் உடனடியாக கிறிஸ்தவத்திற்கு மாற்றி விடுவார்கள். என்றேன்."

"நான் படிக்க விரும்பினேன் மற்றும் மணம் செய்துகொள்ளும் உத்தேசம் என்னிடம் இல்லை என்பதை என் அப்பா உணர்ந்து கொண்டதும், ஆக்ராவிலுள்ள சிறியதொரு வீட்டினை என் பெயருக்கு மாற்றித் தந்தார். அந்தக் காலத்தில் அது மூவாயிரத்திலிருந்து நான்காயிரம் ரூபாய்வரை மதிப்பிடப்பட்டது. பிற்பாடு நான் இங்கிலாந்து செல்வதற்கான செலவுக்கு உதவும் வகையில் அதனை விற்றுவிடலாம், அப்புறம் நல்லதொரு வேலை தேடிக்கொண்ட, இங்கிலாந்திலிருந்து திரும்பியவர் என்று பெயர் பெற்று விடலாம் என்றெண்ணி, அதனை என் சகோதரன் பொறுப்பில் விட்டுவைத்தேன். ஆக்ரா சென்ற நான் என் சகோதரனிடம் "வீட்டை விற்று விடு.

நான் இப்போது இங்கிலாந்து போக விரும்புகிறேன் என்றேன். "எந்த வீட்டை - அந்த லாயத்தையா? அதனை எப்போதோ விற்றுவிட்டு, பணத்தையும் செலவழித்துவிட்டேன். அதில் சிறிது உன் அண்ணிக்கு நகைகள் வாங்கப் பயன்பட்டது" என்றவன் பதிலளித்தான். அண்ணி அங்கிருந்தாள். இந்த விவகாரத்தில் என்னை இழுக்கவேண்டாம். உனக்குப் பணம் கிடைத்தது எங்கிருந்து என்று எனக்கெப்படித் தெரியும்?"என்றாள் அவள். ஆத்திரமுற்ற நான் "உனக்கெதிராக வழக்குத் தொடர முடியும்" என்றேன் என் சகோதரனிடம். "அப்போதுகூட உன்னால் பணத்தைப் பெறமுடியாது" என்றான் அமைதியாக "நீயே ஒரு வழக்குரைஞன். என் பணத்தை எப்படி வசூலிப்பது என்று கூறு" என்று அவனிடமே கேட்டேன். "உன்பொருட்டு நீதிமன்றத்தில் ஆஜராகிறேன். எனக்கான கட்டணத்தைத் தந்து விடு"என்று கூறியவன் சிறிது நேரங்கழித்து, இங்கிலாந்திற்குப் போவதில் குறியாக இருக்கிறாயா? அப்படியானால் நீந்திச் செல்லலாம்" என்றான். வழித்தடம், எங்கே நீந்துவது, எங்கே நிற்பது போன்றவற்றை விளக்கத் தொடங்கினான். அண்ணி இதுவரையும் கவனமாய் கேட்டுக் கொண்டிருந்தாள். "துணிமணிகள்" என்றாள் திடீரென அவற்றை நீர்புகா பாக்கெட் ஒன்றில் கட்டிவைத்துக் கொள்ளலாம்"என்றான். சிறிது நேரம் யோசித்துவிட்டுக் கேட்டாள். " பெரிய மீன்கள் இருக்குமே? அவை அவளை விழுங்கிவிடுமே? அப்படியானால் மீன்களைத் துரத்திவிட நீண்ட மூங்கில் கழி ஒன்றை எடுத்துப் போகவேண்டும்" என்றான். இப்படியாக எனது இங்கிலாந்துப் பயணம் முடிவின்றி ஒத்திவைக்கதாயிற்று.

"சாஹித் சாஹிபை அலிகார் பல்கலைக்கழகத்தில் சந்தித்தேன். அவர் எம்.ஏ. படித்துக்கொண்டிருந்தார் மற்றும் நான் பி.டி. படித்துக்கொண்டிருந்தேன். டெல்லியில் சில தடவை சந்தித்தோம். அதன் பின்பு பாம்பே டாக்கீஸில் 175 ரூபாய் சம்பளத்தில் கதை-வசனகர்த்தாவாகச் சேர்ந்தார். நான் பள்ளி ஆய்வாளராக மும்பையில் சேர்ந்து என் சகோதரனுடன் வசிக்கத் தொடங்கிய பின்னர், திரும்பவும் சந்தித்தோம். சாஹித் அடிக்கடி என் சகோதரனைப் பார்க்க வந்தார். அவர்கள் வெளியிடங்களுக்குப் போகையிலும், திரைப்படங்களுக்குப் போகையிலும் நான் உடன் சென்றேன். சாவ்பட்டியில் வெறுங்காலில் நடந்து

போவதுண்டு. எங்கள் எழுத்தாளர் நண்பர்களையும் சந்திப்பதுண்டு, ஒரு முறை எனது கதையின் பொருட்டு சாஹித் பாம்பே டாக்கீஸிலிருந்து என்னை அணுகினார். என் சகோதரனுக்கு இது தெரியவந்தது. நானே 350 ரூபாய் சம்பளம் வாங்கும்போது, நான்கு இலக்கத்தில் ஊதியம் பெறும் ஒருவருக்கு என்னை மணமுடித்துத் தருவேன் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தான். 175 ரூபாய் பெறுகின்ற ஒருவருடன் நான் செல்வதை அவன் நிறுத்திவிட முற்பட்டபோது, நான் ஒரு விடுதியில் வசிக்கத் தொடங்கினேன். அப்புறம் அதுவரையிலும் மணம் முடித்துக் கொள்ளாதிருந்த என் ஒன்றுவிட்ட சகோதரனுக்கு என்னை மணம் பேசிவிடலாம் என்று திட்டம் வகுத்தான். ஒருநாள் என்னிடம் வந்த அவன், "சாவ்பட்டிக்கு வருகின்றாயா?" என்றழைத்தான். அவனது திடீர் அழைப்பு திகைப்பைத் தந்தாலும் உடனே சம்மதித்தேன். அவன் சாவ்பட்டியில் நடுக்கத்துடன் இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்தான். வேர்த்து விறுவிறுக்க, சிறிது நேரம் கழித்து, "நீ சம்மதித்தால் நாம் மணம்முடித்து கொள்ளலாம் என்னும் ஆலோசனையை பாய் ஜான் தெரிவித்தான் என்றான். தௌபா-தௌபா, நீ எனக்கு நிறைய உதவியிருக்கிறாய், ஜர்எதிரி போல உனக்கு என்று என் மனதில் இருப்பவர் நானல்ல. அவள் எளிமையாக ஆனால் அழகாக இருக்க வேண்டும்" என்றேன். நல்ல சிநேகிதர்களாக நாங்கள் வீடு திரும்பினோம்.

"சாஹித் சாஹிபினை திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்திருந்தீர்களா?" என்று வினவினேன்.

"இல்லை, சாஹித்தின் உறுதியைக் குலைத்திட என்னால் ஆனதை முயன்று பார்த்தேன், என் நண்பராக இருந்தார். இத்திருமணம் ஒரு விபத்துதான். தன் வீட்டுக்கு அருகே ஒரு வாடகை வீட்டினை அப்பா ஏற்பாடு செய்தார். மோஹ்ஸின் ஒரு காஜியை அழைத்து வர எங்களுக்குத் திருமணம் ஆனது. நானொரு சிக்கலான பெண் என்று சாஹித்துக்குத் தெரிவிக்கவில்லை என்பதில்லை விஷயம். அவர் வருந்துவார். மீண்டும் அணிந்து கொள்வதில்லை என்று நான் தளைகளை நொறுக்கி எறிந்துள்ளேன். மாபார்ந்த, விசுவாசமிக்க மனைவியாக என்னால் ஆகமுடியாது. ஆனால் சாஹித் பிடிவாதமாயிருந்தார். இஸ்மத்தை மணந்து கொள்ள முடியுமா என்று நண்பர்கள் விட்ட சவாலை அவர் ஏற்றுக் கொண்டார். அது ஒரு மோசமான தமாஷ் என்று கருதி அவரைப் பார்த்து



நகைத்தனர். "யாரும் நம்பவில்லை. ஆகவே உன்னை மணமுடிப்பது தவிர்த்து வேறுவழியில்லை" என்று சாஹித் என்னிடம் கூறினார். திருமணத்திற்கு ஒருநாள் முன்னர்கூட "இன்னும் காலம் உள்ளது! நான் சொல்வதைக் கவனியுங்கள்! நல்ல நண்பர்களாயிருப்போம்! என்று அவரிடம் கடைசியாகக் கூறினேன்" நிர்பந்தமில்லை திருமணம் வெற்றி பெறாவிட்டால் ஒரு வழி உள்ளது. தலாக்" என்று திருமணத்திற்குப் பின்னரும் சொன்னேன். தான் தலாக் தந்தால் கூட, இஸ்மத் தன்னைவிட்டுப் போய்விட்டாள் என்று நண்பர்கள் கூறுவார்கள் என்பதற்காக சாஹித் பயந்தார்."

"உங்கள் திருமணத்திற்கு சகோதரன் வந்தாரா?" என்று தயக்கத்துடன் வினவினேன்.

"சாகும்வரையும் என் முகத்தைப் பார்ப்பதில்லை என்று உறுதி எடுத்துவிட்டான். ஆனால் என் அம்மாவுக்கு இது தெரியவந்ததும், கேடு கெட்ட தன் மகள் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று தன் கண்களாலேயே பார்த்து வரட்டும் என்று என் இளைய சகோதரனை அனுப்பியிருந்தார். ஆறடி மூன்று அங்குல உயரமுள்ள எனது சகோதரன் சாஹித்திற்கு வாழ்த்து தெரிவித்துவிட்டு, என்னை ஒரு ஓரமாக இட்டுச் சென்று, "நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? அவன் ஒரு எளிமையான இனிமையான பையன். உனக்குப் பைத்தியமா?" என்று திட்டினான். கள்ளங்கபடமற்றவளாக நான் கூறினேன். "நான் என்ன செய்வது? என் ஆலோசனைக்குஅவர் செவிசாய்க்கவில்லை. நீ ஏன் முயன்று பார்க்கக் கூடாது? சாஹித் எனக்கு விலையுயர்ந்த பேனாக்களைப் பரிசளிப்பதை விரும்பினார். விடாப்பிடியாக புத்தகங்கள் வாங்குபவராகவும் இருந்தார். இன்றைக்குக் கூட அவர் பரிசளித்த பேனாக்களைப் பயன்படுத்துகிறேன். ஓர் ஆண் பெண்ணொருத்திக்கு பேனாக்களைப் பரிசளிக்கலாம், அவளை நேசிக்கலாம், சமயங்களில் மரியாதை செலுத்தலாம், ஆனால் நண்பராக முடியாது.

அவரது படுக்கையின் பின்புறத்துள்ள அடுக்கில் அவர் குழந்தைப் பருவத்தில் திருடியிருந்த "சின்னக் கண்ணன்" அலங்கரித்தான். அத்துடன் குரு நானக் மற்றும் இயேசுவின் படங்களும், மதங்களுக்கு ஒற்றுமைக்கு அடையாளமென்று அவர் கருதிய

சின்னஞ்சிறு பொருட்களும் இருந்தன. ஹாசன் மற்றும் ஸ்ரீ சைனின் உயிர்த்தியாகம் என்பது கொடுங்கோன்மைக்கு எதிரான அவர்தம் எதிர்ப்பாகும்" என்று அவர் கூறியதுண்டு. அவர், எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு மனித உயிர். பாபர் அவரின் முதாதை. அவரின் மாமாக்களெல்லாம் பாரசீக மொழி பேசுவதுண்டு. அவர்களெல்லாம் கடந்தகாலத்தில் வாழ்ந்திருந்தனர் என்று அவர் கூறுவதுண்டு. கம்யூனிஸத்தில் அவர் ஒருபோதும் தவறு கண்டதில்லை. எழுத்தாளர்களிடத்தே பெருத்த நேசம் கொண்டிருந்தார். பாரதிஜி மற்றும் கமலேஸ்வர்ஜியிடம் தீவிர விவாதங்கள் நடத்திய போதிலும் அவர்களைப் பிரியமாக நடத்தினார். "மும்பையில் நிலநடுக்கம் ஏற்பட்டால் என்ன செய்வாய் அக்கா?" என்று அவர்கள் ஒருநாள் வேடிக்கையாக வினவினார்கள். "உங்களுக்கும் கமலேஸ்வருக்கும் தொலைபேசியில் தகவல் தெரிவிப்பேன். என் நண்பர்களைத் தாண்டி என்னால் பார்க்க இயலாது. கடவுளிடம் உதவிகேட்டு மன்றாடுவேன் என்று கருதுகிறீர்களா?" என்று அவர் பதிலளித்தார்.

ஒருமுறை எங்கள் அடுக்குமாடிக் குடியிருப்பில் குருகிரந்த் சாஹிப் வாசிப்பதற்கு ஏற்பாடு செய்தோம். அவர் தவறாக வந்து ஓதுதலைக் கவனித்துக் கேட்டார். "இந்தச் சடங்குகள் எதற்காக? உங்கள் வீட்டுச் சூழலைத் தூய்மைப்படுத்துவதில் இவை உதவப் போகின்றனவா?" என்று என் கணவரிடம் பேசினார். பாம்புகள் பற்றி அவர் கூறுவார். "இந்துஸ்தானம் என்னும் தேசத்திலே பாம்புகள் கூட வணங்கப்படும்."

சர்தார்ஜி அவரைப் பெரிதும் நேசித்தார். ஒருமுறை ராஜ்பேடியின் வீட்டில் பாரதிஜியுடனான விவாதத்தின்போது அவர் மடக்கப்பட்டுவிட்டார். என் கணவர் அவர் முன் மண்டியிட்டார். "நீங்கள் ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? நேராக அமர்ந்து பேசுங்கள்!" என்றார் அவர்.

என் கணவர் ஒரு சமயம் கூறினார். "அக்கா, உங்களுக்கு எதிராக ஆபாசம் தொடர்பாக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அறிந்தோம்." அவர் ஒரு மிடறு ஒயின் அருந்தியதும் தெரிவித்தார்: "மாண்ட்டோ பிரியமான மனிதர் மற்றும் நல்ல நண்பர். சாஹித்திற்கு அவர்மீது பொறாமை. வழக்கு லாகூரில் தாக்கல் செய்யப்பட்டது.

நாங்களெல்லாம் போயிருந்தோம். சூழல் ஒரு பிக்னிக் போன்றிருந்தது. வழக்குத் தடயமில்லாது அழிக்கப்பட்டு விட்டது. திரும்பிய நாங்கள் அனார்கலி மார்கெட்டில் ஷூக்கள் வாங்கினோம்.

நான் பாம்பே ஆஸ்பிடலில் கிடந்தபோது அவர் ஒருநாள் வந்தார். அவ்வளவு பதட்டமாக நான் அவரைப் பார்த்ததே கிடையாது. என்று நோயினைக் கண்டறிந்திருந்தனர் மருத்துவர்கள் மருத்துவமனையில் என்னைத் தேடிக் கண்டறிய அவர் மிகுந்த பிரயாசைப்பட்டிருக்கிறார். "உன்னைக் கண்டறிந்துவிட பாபா ஆஸ்பிடலின் ஒவ்வொரு அறையாகத் தேடினேன். இப்போது, சீமா இங்கே கொண்டுவந்து சேர்த்திருக்கிறாள்" என்றார். அவர் முகத்தில் வழக்கமாகத் தெரியும் சந்தோஷத்தின் கலகலப்பின் தடயமே இல்லாதிருந்தது.

அவரை நான் கடைசியில் சந்தித்தபோது, நான் உடல் பரிசோதனைக்காக மும்பையில் இருந்தேன். அவரது அறைக்குள் நான் நுழைந்தபோது, ஆரஞ்சுப் பழங்களை உரித்தபடி, சுளைகளை மடியில் போட்டுக் கொண்டிருந்தார்.

என்னைப் பார்த்ததும் அவர் எழுந்துவிடவே, சுளைகள் பூக்களென அவர்பாதங்கள்மேல் விழுந்தன. என்னைக் கட்டிக்கொண்டு அழுதபடி ஓ எனது பொம்மையே! இவ்வளவு காலம் எங்கே இருந்தாய்?" என்று கூறினார். தன் குழந்தைப் பருவத்துச் சம்பவங்கள் பலவற்றை நினைவு கூர்ந்தார். ஒருமுறை அவரை டெல்லிக்குக் கூட்டிச் செல்லவேண்டும் என்றெண்ணினேன். அப்புறம் வேண்டாம் என்று தீர்மானித்தேன். என்னால் அவரைக் கவனித்து கொள்ள முடியாது போகலாம். இரண்டு மாதங்களுக்கு பின் அவர் இறந்துவிட்ட செய்தி வந்தது. சீமாவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, "மூன்று-நான்கு நாட்களுக்கு முன்னர், மருந்து சாப்பிடுமாறு நான் வற்புறுத்தியபோது, என்னைக் கட்டாயப்படுத்தினால் டெல்லியிலுள்ள பத்மா வீட்டுக்குப் போய்விடுவேன்" என்று கூறினார் என்பதைத் தெரிவித்தாள். "எனக்குத் தெரிவித்திருந்தால் நான் மும்பைக்கு வந்திருப்பேன்" என்றேன். சந்தர்ப்பவசமாக அந்நாட்களில் என் கணவர் மும்பையில் இருந்தார். அவரது உயிலின்படி மின்தகன மையத்தில் சீமா இறுதிச் சடங்குகளை நிறைவேற்றினாள். இவ்வளவு மதிப்பு வாய்ந்த ஓர் எழுத்தாளர், பெரியதொரு

நண்பர், இவ்வளவு நல்ல மானுட உயிரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். டாக்டர் தரம்வீர் பாரதி, என் கணவர் சுரிந்தர் சிங், நவ்திவால், விஸ்வநாத் சச்தேவ், அவரது மகள் மற்றும் பேரன்-பேத்திகள் மட்டுமே. அக்காவைச் சூழ்ந்து இயங்குவது ஒரு பெருமை என்று கருதியவர்கள் சுகவீனமாயிருந்தனர், வெளியூர் போயிருந்தனர், படப்பிடிப்பொன்றில் (அ) வசனம் எழுதுவதில் மும்முரமாயிருந்தனர். உயிலில் குறிப்பிட்டுள்ளபடி, அஸ்தியை எடுத்துக்கொண்டு Gate Way of India-வுக்கு அருகாமையில் உள்ள ஆழ்கடலுக்குச் சென்று பேரன் பேத்திகளைக் கொண்டு சீமா கரைந்தார். ‘அது பெரிய வேடிக்கையாக இருக்கும்! இந்த உலகிற்கு நான் திரும்பி வருவேன்! என் நண்பர்களைச் சந்திப்பேன்! மீண்டும்! மீண்டும்! மற்றும் திரும்பவும் கொண்டாட்டமும் சிரிப்பும் கூச்சல்களுமாய் இருக்கும். கதை நாயகர்கள் ஒருவர்பின் ஒருவராக விடைபெறுவார்கள். ஆனால், நாடகம் நிகழ்ந்து கொண்டே இருக்கும்’ என்று அக்கா எப்போதும் கூறுவதுண்டு ✦

மதுரை

வாசல்

வெளியீடாக

வெளிவருகிறது

மிடாக் குறுக்கு பாதை

நகுப் மெஹ்பூஸ்

அராபிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில்

ரிவான் ஆல்விர்

தமிழில்

இரா. நடராசன்

நாவலின் முதல் அத்தியாயம்

பல விஷயங்கள் சேர்ந்து, அந்த மிடாக் குறுக்குப் பாதை, கெய்ரோவின் வரலாற்றில் மின்னும் நட்சத்திர வானின் பொற்கால அடையாளமாக கண்ணில் படுகிறது. எந்த கெய்ரோவை குறிப்பிடுகிறேன்? ஃபாட்டிமிட் கால கெய்ரோவா? மாம்லுக்கிகள் ஆண்டதா அல்லது சுல்தான்களின் கெய்ரோவா கடவுளுக்கும் தொல்லியலார்க்குமே வெளிச்சம்; என்றாலும் புராதன வரலாற்று சின்னங்களில் அதுவும் ஒன்று என்பதில் சந்தேகமே இல்லை. கருங்கல் தரையுடன் வரலாறு போற்றும் சானா டிக்குயா சாலைநோக்கி விரியும் அது வேறு எதுவாக இருக்கமுடியும்? குறுக்குபாதையின் காப்பிக்கடையான 'கிர்ஷா' அங்கேதான் உள்ளது. ஏதோ பழங்காலத்தை வைத்தியமுறையின் மருந்து வாடை துளைக்கும் மணமும், கிட்டத்தட்ட அழிந்து உதிரும் கோட்டோவியங்கள் பதித்த சுவருமாய் கிர்ஷா இன்றைக்கும் நாளைக்குமானதாக..............

மிடாக் குறுக்குபாதை தனது சுற்றுப்புறம் அனைத்திலிருந்தும் முற்றிலும் உடைத்துக்கொண்டு தனித்து கிடக்கிறது என்றாலும் தனக்கென்ற ஒற்றை பாணி ஒன்றை கொண்டு தனித்துவ வாழ்வை பெற்றுள்ளது. வாழ்வின் அனைத்து அம்சங்களோடும் அதன் வேர் இழைந்து ஓடினாலும் தற்போது இறந்தகாலமாகிப் போன யாவற்றின் தொடர்ச்சி அங்கே வியாபித்தபடி உள்ளது.

சூரியன் மறைந்த அந்த பொழுதில் ஒரு பழுப்பு நிறமடைந்த வெளிச்சக்கீற்று மிடாக் குறுக்குப் பாதையை மையமிட்டு சூழ்கிறது விரைவில் மூன்று பெருஞ்சுவர்களுக்குள் அடைபட்டதால் இருள் பிரமாண்ட வடிவம் எடுத்தது. சானாடிக்யுயா தெருவிலிருந்து அது ஒரு திடீர் பிரவேசம் செய்தது. குறுக்குப் பாதையின் ஒருபுறம் ஒரு கடை, ஒரு டீக்கடை மற்றும் ஒரு ரொட்டிக்கடை அத்தோடு மற்றொரு கடையும் ஒரு அலுவலகமும் இருந்தன. பாதை அந்த மூன்று மாடிகள் கொண்ட அடுத்தடுத்த இரண்டு பெரிய வீடுகள் இருந்த இடத்தில் அதன் வழிவழிப் பெருமைகளைப் போலவே திடுமென்று முடிந்துபோய்விடுகிறது.

பகல்பொழுதின் வாழ்வோசைகள்- இரைச்சல்கள் முடிந்து இப்போது மாலையின் மொழி கேட்கத் தொடங்கியது- இங்கும் அங்குமாய் சில வார்த்தைகள் கிசுகிசுக்கள்— "அனைவருக்கும் மாலை வணக்கம்." "உள்ளே வாருங்கள்— மாலை ஒன்றிணைவிற்கான நேரம் வந்துவிட்டது." "அங்கிள் காமீல்— கண் விழியுங்கள்— உங்கள் கடையை மூடும் நேரம் ஆகி விட்டது." "சங்கேர்— ஹூக்காவின் தண்ணீரை மாற்று!" "அந்த பாத்திரத்தை வெளியே எடுத்துபோடு டா!." "இந்த ஹூவிலே புகையிலையில் போதை இல்லை— இது என் நெஞ்சில் வலியை தருகிறது பார்....." "நாம் கடந்த ஐந்து வருடங்களாக இருட்டின் பயங்கர கொலைகளையும்— வான் தாக்குதல்களையும் சந்திக்கிறோமென்றால், அது நமது துர்புத்தியால்தான்"

அங்கிள் கமீலின் கடை - குறுக்குப்பாதையின் நுழைவாயிலில் உள்ள ஒரு இனிப்பு பண்டகசாலை மற்றும் இடப்புறமுள்ள ஒரு சிகை அலங்கார நிலையம் என அவை இரண்டும் மட்டும், சூரிய அஸ்தமனத்திற்கு பிறகும் கூட சிலமணிநேரம் திறந்திருப்பவை. அதிலும் அங்கிள் கமீல் தனது கடை வாசலில் ஒரு நாற்காலி இருக்கை உட்கார்ந்து உறங்குவதை ஒரு வழக்கமாக— ஏன் ஒரு தார்மீக உரிமையாகவே கொண்டிருந்தார்— கையில் ஈ ஓட்டும் ஒரு விசிறியுடன் - ஏதாவது இனிப்பு வாங்க வந்தவர்கள் உசுப்பிவிடும் வரையிலோ அல்லது முடிவெட்டுபவரான அப்பாஸ் கிண்டலுடன் எழுப்பும் வரையிலோ அங்கிள் கமீல் அங்கேயே அப்படியே கிடப்பார். அவர் கொழுத்த பெரிய ஒரு ஆளாக இருந்தார்- மரங்களின் பெருந்தண்டுபோன்ற கால்களுக்குமேல் அவரது பின்புறம் ஒரு மசூதி கோபுரத்தின் உருண்டை கும்பு போல

பெருத்திருந்தது. அதன் நடுப்பகுதி நாற்காலியிலும் ஏனைய பகுதி நாற்காலியிலிருந்து பிதுங்கிக்கொண்டு வெளியே துருத்தியபடியும் தொங்கிக் கொண்டிருந்தன. அண்டா அளவிற்கு ஒரு தொந்தியும் வெளியே துருத்தித் தொங்கும் மார்பகங்களும் அவருக்கு இருந்தன. கழுத்தே இல்லாத மனிதராகவே பலரும் அவரை நினைத்தனர். கனத்த தோள்களுக்கு நடுவில் வட்டமான முகம் தாடைகள் தொங்க அமைந்திருந்தது. மூச்சுக்காற்று முகத்தை உப்பிடவும் சுருங்கவும் வைத்துக்கொண்டிருந்தது..... சதை பிடித்த கன்னங்களை ஒரு கோடுதான் பிரிக்கிறது... மனிதருக்கு மூக்கோ கண்களோ இருப்பதாகவே தெரியவில்லை. இவை அனைத்திற்கும் மேலே அமைந்த தலை மிகவும் சிறியதாக முழுதும் சொட்டையாகி தோலின் சாம்பல் நிறத்தோடே அமைந்துள்ளது... ஏதோ அப்போதுதான் வேகமாக ஓட்டப் பந்தயத்தில் ஓடியவரைப்போல எப்போதுமே பெருமூச்சுகள் வாங்கி திணறிக்கொண்டே இருப்பார் அங்கிள் கமீல்...... ஒரு இனிப்பு பண்டத்தை முழுமையாக விற்பனைக்கென எடைபோட்டு முடிப்பதற்குள் வாங்கும் ஆசையை அடைவார்.... இதயத்தின் கட்டத்தை சுற்றிலும் சதை மேடுகள் மோசமாக அழுத்துவதால்..... அவர் திடீரென்று இறந்து விடுவார் என்றே எல்லோரும் அவரிடம் சொன்னார்கள்...... அவர் அவர்களது கூற்றை ஏற்றார். வாழ்க்கை ஒரு தொடரும் உறக்கமாக இருக்கும்போது மரணம் அவருக்கு எப்படி வலிக்கும்? சிகை அலங்கார நிலையம் சிறியதுதான் என்றாலும் அந்த மிடாக் சந்தில் அதற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கவே செய்தது. அது ஒரு பெரிய கண்ணாடியையும் ஒரு உயர கைவைத்த நாற்காலியையும் மற்றபடி முடிவெட்ட தேவையான உபகரணங்களையும் கொண்டிருந்தது. முடிவெட்டுபவர் ஒரு நடுவயது ஆள். சராசரி உயரம் சற்றே கருத்த ஆனால் ஓரளவு தடித்த தேகம். லேசாக வெளிவந்த விழிகள். தேகத்தின் பழுப்பு நிறத்திற்கு நேரெதிராக ஒரு மஞ்சள் நிறமுடி. எப்போதும் சூட்டு அணிந்திருப்பார். அதற்கும் மேலே ஏப்ரான் கோட் இல்லாமல் எங்கும் போகமாட்டார்..... பார்பர்களுக்கே உண்டான பாணி... முடிதிருத்துபவர்களுக்கே உண்டான நாகரீகம் அது.

இந்த இரண்டு பேரும் தங்கள் கடையிலேயே தங்குகிறார்கள். கிட்டத்தின் பெரிய குழுமம் ஒன்றின் அலுவலகம், வேலை சிப்பந்திகள் அனைவரும் வீட்டிற்குசென்றுவிட இழுத்து மூடப்படுகிறது. அதிலும் முதலாளி- அந்த குழுமத்தின் உரிமையாளர் - சலீம் அல்வான் - கடைசியாக வெளியேறுகிறார். குறுக்குப் பாதையின் நுழைவாயிலில் காத்திருக்கும் வாகனத்தில் ஏற தனது தளர்ந்து தொங்கும் மேலுடையும் கை வைக்காத கோட்டுமாக விருட்டென கடந்து செல்கிறார். எவ்வித உற்சாகமும் இன்றி இயந்திரத்தனமாக வண்டியில் ஏறுகிறார். அவரது துருத்திய பெரும் மீசை அவருக்கு முன்னால் ஏறுகிறது. வண்டிக்காரன் கால்களால் மணியை உதைத்து அடித்து குதிரையை கிளப்புகிறான். வண்டி சௌரியா வழியாக ஹில்மியா பகுதி நோக்கி விரைகிறது.

குறுக்குப் பாதையின் கோடியிலிருந்த இரண்டு வீடுகளும் குளிருக்கு அஞ்சி தங்களது கதவுகளை முற்றிலும் மூடிக்கொண்டு விட்டன..... இருந்தும் இடுக்குகளின் வழியே உள்ளிருந்து இரவு விளக்குகளின் ஒளிக்கீற்றுகள் வெளியே வழிகின்றன. மிடாக் சந்து இப்போது முழுதும் அமைதி அடைந்துவிடும்.. அங்கே கிர்ஷா காப்பிக்கடைத் தவிர ... மின்விளக்குகளிலிருந்து ஒளியூட்டப்பட்டு அதன் மின் கம்பிகளை இரவுப்பூச்சிகள் மொய்க்கத் தொடங்குகின்றன.

தனது வாடிக்கையாளர்களால் காப்பிக்கடை நிரம்பத் தொடங்குகிறது. அது கிட்டத்தட்ட சிதிலமடைந்துவிட்ட ஒரு சதுர வடிவ அறை. அதன் விரிசல் விழுந்த சுவர்களுக்கு மத்தியிலும் கோட்டோவியங்கள் மிளிர்கின்றன. பழமையை நம் கண்முன் நிறுத்துபவை. அதன் சுவர்களும் அங்கங்கே போடப்பட்டுள்ள அகண்ட சோபா இருக்கைகளும்தான். காப்பிக்கடை நுழைவாயிலில் ஒரு கடைசிப்பந்தி இரண்டாம் தர வானொலிப் பெட்டியை பாடவைக்க முயற்சிக்கிறான். உள்ளே புகைத்தபடியும் தேனீர் குடித்தபடியும் சில மனிதர்கள் சோபாக்களில் உட்கார்ந்துள்ளனர்.

நுழைவாயிலிலிருந்து சற்றே அருகில் போடப்பட்ட அந்த பழங்கால சோபா இருக்கையில் ஐம்பது வயது மதிக்கத்தக்க கைவைத்த வெளிக்கோட்டும் மேற்கத்தியநாட்டு உடையான கழுத்துடையும் அணிந்து அமர்ந்துள்ளார் ஒரு மனிதர். அவரது முகத்தில் விலை உயர்ந்த தங்க பிரேம் போடப்பட்ட மூக்குக்கண்ணாடி அலங்கரித்துள்ளது. மர காலணிகளை அகட்டி காலுக்கு அருகிலேயே வைத்திருக்கிறார். ஒரு சிலைபோல அசையாமலும், ஒரு பிணத்தைப்போல ஓசையின்றியும் உட்கார்ந்துள்ளார். விழிகள் இடப்புறமோ, வலப்புறமோ எப்புறமும் காணவில்லை..... தன் சொந்த உலகில் காணாமல் போனவரைப்போல

தன்னிலை இழந்து தள்ளாடும் ஒரு வயதான கிழவன் இப்போது க்ரிஷா கடைக்கு வருகிறான். கடந்து சென்ற வருடங்கள் அவனது ஒரு எலும்பைக் கூட பலத்துடன் விட்டு வைக்கவில்லை எனுமளவு முதிர்ச்சியால் சுருங்கிப்போய் விட்ட கிழவன். சிறுவன் ஒருவன் இடக்கையால் இழுத்து வந்து அவனை விடுகிறான். சிறுவனின் வலக்கையில் இரண்டு நரம்புகள் கொண்ட பிடிலும் ஒரு பழைய புத்தகமும்.....கிழவன் அங்குள்ள யாவருக்கும் வந்தனம் தெரிவித்து..... அறைநடுவில் இருந்த பழைய சோபாவில் சிறுவனின் உதவியோட தத்தளித்து ஏறி அமர்கிறான். அந்த சோபாவின் ஒரு அங்கம்போல பொருந்திப்போன கிழவன் புத்தகத்தையும் பிடிலையும் சிறுவனிடமிருந்து பெற்றுக்கொண்டு..... 'சலாம் ஆலே..........க்கும்' அங்கிருந்த யாவரையும்நோட்டம் விட்டான்..... தனது வருகை யாவரது கவனத்தையும் பெற்றுள்ளதா என அறியும் ஆவல்.... ஓரளவே உதவும் பார்வை..... கடையின் மிகவும் வயது குறைந்த வேலைக்காரன்..... சங்கெரை சற்று நேரம் அவன் தன்னை பொருட்படுத்தாததையும் சேர்த்து பார்த்துக் கொண்டே இருக்கிறான் ..... தனது பிடிலை கையிலெடுத்து வாசிக்க எத்தனிக்கிறான் .....

வெளியே விண் தாக்குதல்களுக்கான முதல் சுவடுகள் கேட்கின்றன...... கிழவன் புத்தகத்தை திறந்து பாட்டைத் தொடங்கும் முன் சங்கெரிடம் தனது அமைதியை உடைக்கிறான்: 'காப்பி.....சங்கெர்'

அனைத்து தொடர்புகளுக்கும்

புது எழுத்து

39, ஜே.கே.சி தெரு,
காவேரிப்பட்டணம், 635 112.
கிருஷ்ணகிரி மாவட்டம்.
மின்னஞ்சல் : puduezuthu@gmail.com
செல் : 98426 47101

போலந்து கவிதை

இதயத்திலிருந்து

தேத்யூஸ் ரோசேவிச்
ஆங்கிலம் வழி தமிழில் பினாகினி

நான் பார்த்தேன்
ஒரு விசேசமான சமையல்காரனை

வாயினுள் கையை விட்டு
கீழே இறக்கி
ஆட்டின் தொண்டை வழியே
துடிக்குமதன் இதயத்தைத் தொட்டு
முஷ்டியை இறுக மூடி
ஒரே குத்தில் கிழித்து .....

ஆம் ஐயா!

அவன்தான்
ஸ்பெசலிஸ்ட்

உட்பொதிந்த ஆசிரியன்

ஓரன் பாமுக்
துருக்கியிலிருந்து ஆங்கிலத்தில் மௌரீன் ஃப்ரீலி.
தமிழில் அசதா

முப்பதாண்டு காலமாக நான் எழுதி வருகிறேன். சில காலமாகவே இவ்வாறு நான் கூறிவருகிறேன். இந்த வார்த்தைகள் பொய்யென ஆகும்படிக்கு நெடுங்காலமாகவே இதைக் கூறிவருகிறேன். எழுத்தாளனாக இது எனக்கு முப்பத்தியோராவது வருடம். முப்பதாண்டு காலமாக நான் நாவல்கள் எழுதிவருகிறேன் எனச் சொல்லவே விரும்புகிறேன். சற்றே இது மிகையானாலும் கூட. கட்டுரை, விமர்சனம், இஸ்தான்புல் பற்றிய என் மனப்பதிவுகள்,அரசியல் என பலவகை எழுத்துக்களையும் நான் எழுதிவருகிறேன். ஆனால் எனது பிரதான தொழில், வாழ்வோடு என்னை இணைக்கும் விஷயம் நாவல்கள் எழுதுவதுதான். என்னைக் காட்டிலும் நீண்ட காலமாக எழுதிவரும் மிகச் சிறந்த எழுத்தாளர்கள் ஏராளம் பேர் உள்ளனர். என்னளவுக்குக் கவனம் பெறாமலே அவர்கள் அரை நூற்றாண்டுக்கும் மேலாக எழுதிவருகின்றனர். திரும்பத் திரும்ப நான் வாசிக்கும் மாபெரும் எழுத்தாளர்கள் லியோ டால்ஸ்டாய், பியோதர் தாஸ்தாயெவ்ஸ்கி, தாமஸ் மன் இவர்களது எழுத்து வாழ்க்கையும் ஐம்பது ஆண்டுகளைத் தாண்டியது. பிறகு ஏன் எனது முப்பதாண்டு கால எழுத்து வாழ்க்கை பற்றி இவ்வளவு பிரஸ்தாபம்?

மகிழ்வுடன் இருக்க தினசரி குறிப்பிட்ட அளவு இலக்கியத்தை நான் உட்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த வகையில் தினமும் தேக்கரண்டியளவு மருந்து உட்கொள்ளும் நோயாளிக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லை. சிறுவயதில், நீரிழிவு நோயாளிகள் தினமும் ஒரு ஊசி போட்டுக் கொள்ள வேண்டுமென்று அறிந்தபோது பெரும்பாலானவர்களைப் போல அந்நோயாளிகளுக்காக நானும் வருத்தப்பட்டேன். அவர்கள் பாதி மரணமுற்றுவிட்டவர்கள் எனக்கூட எண்ணியிருக்கிறேன். இலக்கியம் மீதான என் சார்ந்திருப்பும் என்னைப் பாதி மரணமுற்றவனாகவே வைத்திருக்கிறது. இளம் எழுத்தாளனாக இருந்தபோது மற்றவர்கள் என்னை இவ்வுலகிலிருந்து ஒதுங்கியவனாக அதனாலேயே பாதி மரணமுற்றவனாகப் பார்த்ததை உணர்ந்திருக்கிறேன். உண்மையில் பாதிப் பிசாசு என்பதே சரியானதாக இருக்கும். முழுவதுமாக நான் இறந்து போய் என் சடலத்துக்கு இலக்கியம் மூலமாக உயிரூட்ட முயல்வதாகக் கூட கற்பனை செய்திருக்கிறேன். என்னளவில் இலக்கியம் ஒரு மருந்து. தேக்கரண்டி, ஊசி மூலமாக மற்றவர்கள் எடுத்துக் கொள்வதுபோல் தினசரி ஒரு குறிப்பிட்ட அளவு இலக்கியம் மாறாத பழக்கம். உங்களுக்கும் வேண்டுமெனில் குறிப்பிட்ட சில நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும். முதலில் மருந்து நல்ல மருந்தாக இருக்க வேண்டும். அது எவ்வளவு உண்மையானது எவ்வளவு வீரியமுள்ளது என்பதே அதன் நல்ல குணம் என நான் குறிப்பிடுவது. நாவலொன்றில் அடர்ந்த ஆழமான பகுதியொன்றை வாசிப்பது, அதனுலகில் நுழைந்து அது உண்மையானதொரு உலகம் என நம்புவது - இதைவிடவும் என்னை மகிழ்ச்சிக்குள்ளாக்கும், வாழ்வோடு பிணைக்கும் விஷயம் வேறொன்று இல்லை. நான் எப்போதும் இறந்துபோன ஒருவரது எழுத்தை வாசிப்பதையே விரும்புகிறேன். காரணம் அப்போதுதான் அந்த எழுத்தின் மீதான என் போற்றுதலை பொறாமை எனும் சிறு கருமேகம் மூடாமலிருக்கும். வயது கூடக்கூட எனக்கு அதிகம் உறுதிப்படும் விஷயம், மிகச்சிறந்த புத்தகங்கள் யாவும் இறந்துபோன எழுத்தாளர்களுடையவையே. ஒருவேளை சிறந்த புத்தகங்களின் ஆசிரியர்கள் உயிரோடிருப்பின், அவர்களது இட ஆவிகளது இருப்பாகத் தோன்றுகிறது. இதனால்தான் பெரும் எழுத்தாளர்களைத் தெருவில் காண்கையில் தொலைவே இருந்து அவர்களைக் கண்டு வியப்பெய்தும்போது; நம் கண்களையே நாம் நம்பாமல் அவர்களை ஆவிகளெனக் கருதி அருகே செல்லாமல் நின்றுவிடுகிறோம். சில தைரிய மனம் படைத்தவர்கள் மட்டும் நெருங்கிச் சென்று ஆட்டோகிராஃப் கேட்கிறார்கள். இவர்கள் சீக்கிரமே இறந்து போவார்கள் என மனதில் நான் நினைப்பதுண்டு. பிறகு அவர்களது புத்தகங்கள் இப்போதிருப்பதை விடவும் உயரியதொரு இடத்தை நம் இதயங்களில் பெற்றுவிடும். ஆனால் எல்லா புத்தகங்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இது பொருந்தாது.

என்னுடைய எழுத்தே எனது தினசரி இலக்கிய மருந்தாகுமென்றால் அது முற்றிலும் வேறான விஷயம். என்னுடையதைப் போன்ற நோயால் அவதியுறுவோருக்கெல்லாம்

மிகச்சிறந்த நிவாரணம், மகிழ்ச்சிக்கான ஊற்றுக்கண் எதுவென்றால் தினமும் அரைப்பக்கம் எழுதுவதுதான். முப்பது வருடங்களாக எழுதுவதற்கென்று தினமும் சராசரியாக பத்துமணி நேரம் தனியே ஓர் அறையில் அமர்ந்திருக்கிறேன். வெளியீட்டுக்கு உகந்ததாக இருந்த எழுத்தின் அளவை கணக்கிட்டுப் பார்த்தீர்களேயானால் என்னுடைய சராசரி தினசரி எழுத்து அரைப்பக்கத்திற்கும் மிகாதது நான் எழுதுபவற்றில் பெரும்பாலானவை என்னுடைய சொந்த 'நல்ல எழுத்து' என்ற அளவுகோலுக்குள் வராதவையே. இவை இரண்டும் துயரத்தின் இருபெரும் ஊற்றுக் கண்கள்.

தயவு செய்து என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். என்னைப் போலப் பெரிதும் இலக்கியத்தைச் சார்ந்திருக்கும் ஓர் எழுத்தாளன் தான் இதுவரை எழுதிய புத்தகங்களின் புகழில் மயங்கியோ, தான் எழுதிய புத்தகங்களின் எண்ணிக்கை குறித்த தற்பெருமை கொண்டோ, அந்தப் புத்தகங்கள் செய்த சாதனையை நினைத்தோ இறுமாந்திருக்க மாட்டான். இந்த உலகைக் காப்பாற்றுவதாக பாவனை செய்யக்கூட இலக்கியம் அவனை அனுமதிப்பதில்லை. சொல்லப்போனால் அன்றைய தினத்தைக் காப்பாற்றிக் கொள்ள மட்டுமே சந்தர்ப்பமளிக்கிறது. எல்லா தினங்களுமே கடுமையான தினங்கள். கடுமையான தினங்கள் அவனால் எதையும் எழுத இயலாத தினங்கள். எழுதாத எல்லா தினங்களும் கடுமையான தினங்கள். அந்த தினத்தைக் கடந்து செல்லப் போதுமான தைரியத்தைப் பெறுவதுதான் இங்கு முக்கியம். வாசிக்கும் புத்தகம் அல்லது அதிலோரு பக்கம் நல்லவொன்றாக அமைந்துவிட்டால் அதிலிருந்து மகிழ்ச்சியைப் பெறுவது கூடியமட்டில் அந்த தினத்துக்காவது.

புத்தகமொன்றில் மூழ்கிப் போகாத பட்சத்தில், நல்லபடியாக என்னால் எழுதமுடியாத நாளைப் பற்றி நான் நினைப்பது இதுதான்; முதலில் என் முன்னே உலகம் மாறிவிடுகிறது; தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றாகிவிடுகிறது. அருவெறுப்பானதாகி விடுகிறது. எனக்கு இது நிகழ்வதை என்னை அறிந்தவர்களும் உணர்கிறார்கள். காரணம், என்னைச் சுற்றியுள்ள உலகைப் பிரதிபலிப்பவனாக நான் மாறிவிடுகிறேன். உதாரணமாக மாலையில் என் முகத்தில் தெரியும் நிராசையைக் கண்ட அன்றைய தினம் உருப்படியாக எதையும் நான் எழுதவில்லையென என் மகள் சொல்லிவிடுவாள். இதை அவளுக்குத் தெரியாமல் மறைத்துவிடவே விரும்புகிறேன். ஆனால் என்னால் முடிவதில்லை. இந்த இருண்ட கணங்களில் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான கோடு அழிந்து விடுகிறது. நான் யாரிடமும் பேச விரும்புவதில்லை. இந்த நிலையில் என்னைக் காண்பவர்களும் என்னோடு பேச விரும்புவதில்லை. இதே போன்ற ஆனால் சற்றே வலுக்குறைந்த ஒரு துக்கவுணர்வு தினமும் மதியப்பொழுதில், சரியாகச் சொன்னால் ஒரு மணியிலிருந்து மூன்று மணிக்குள் என்மீது கவிகிறது. ஆனால் வாசிப்பதன் மூலமும், எழுதுவதன் மூலமும் அதிலிருந்து மீள்வதற்கு நான் கற்றுக் கொண்டேன். உரிய நேரத்தில் செயல்பட்டால் நான் சவமாகிப் போவதிலிருந்தும்

என்னையே காப்பாற்றிக்கொள்ள முடியும்.

பிரயாணம், பணம் செலுத்தப்படாத எரிவாயு ரசீது, ராணுவ சேவை (ஒரு காலத்தில்), அரசியல் விவகாரங்கள் (சமீபகாலமாக) அல்லது வேறு ஏதேனும் தடை ஏற்பட்டு எனது காகித-மை சிகிச்சை நீண்ட காலத்துக்குத் தடைபட்டால் துயரம் என்னுள் சிமெண்ட்டைப்போல இறுகிவிடுகிறது. வெளியில் நடக்க என் உடல் சிரமப்படுகிறது. முட்டிகள் மடக்க முடியாதவைகளாகிவிடுகின்றன. தலை கல்லாகிவிடுகிறது. சுவாசம் கூட வேறொரு வாசனையைக் கொண்டு விடுகிறது. இந்தத் துயரம் மேலும் வளரவே செய்கிறது. காரணம், வாழ்க்கை மனிதனை இலக்கியத்திலிருந்து தள்ளி வைக்கும் தண்டனைகளால் நிறைந்தது. நெரிசல் மிகக் ஒரு அரசியல் கூட்டத்தில் நான் அமர்ந்திருக்கலாம், வகுப்புத் தோழர்களுடன் பள்ளியில் நடைக்கூடத்தில் நின்று பேசிக் கொண்டிருக்கலாம், விடுமுறை தினத்தில் உறவினர்களோடு சேர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம், என்னிலிருந்த பல உலகங்கள் தள்ளி தன் சிந்தனையை வைத்திரக்கும் நல் இதயம் படைத்த நண்பரொருவருடன் சகஜமாக உரையாட சிரமப்பட்டுக் கொண்டிருக்கலாம், தொலைக்காட்சித் திரையில் மூர்கியிருக்கலாம், முக்கியமானதொரு வியாபார பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கலாம், எதையாவது வாங்கிக் கொண்டிருக்கலாம், வழக்கறிஞரிடம் போவதற்கான வழியைத் தேடிக் கொண்டிருக்கலாம், ஒரு விசாவுக்கென என்னுடைய புகைப்படத்தை எடுத்துக் கொண்டிருக்கலாம் - சட்டென என் இமைகள் அழுத்துகின்றன,நடுப்பகலாய் இருந்தாலும் நான் உறங்கிப் போகிறேன். வீட்டிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறேன். என் அளவுக்குத் திரும்பி தனிமையில் பொழுதைக் கழிக்க இயலாது, என்னுடைய ஒரே ஆறுதல் நடுப்பகலில் போடும் இந்தக் குட்டித் தூக்கம்தான்.

ஆனால், உண்மையில் இந்த வேட்கை இலக்கியத்திற்கானது அல்ல, தனியே இருந்து கனவு காண உதவும் ஓர் அறைக்காகத்தான். அப்படி வாய்த்தால, மக்கள் நெரிசல் மிக்க இடங்கள், குடும்ப ஒன்று கூடல்கள், பள்ளி பழைய மாணவர்கள் சந்திப்பு, விழாக்கால உணவுகள், அந்த விழாக்களில் கலந்து கொள்ளும் மக்கள் என அற்புதமான கனவுகளை நான் காண்பேன் ஏராளம் வைக்கப்பட்டுள்ள அந்த விடுமுறை தின உணவுகளை நானே கண்டறிந்த விஷயங்களைச் சேர்த்து இன்னும் சுவை கூடியவையாக ஆக்குவேன். அந்த மக்களை இன்னும் சுவாரஸ்யமானவர்களாக ஆக்குவேன். கனவுகளில் எல்லாமும் எல்லோரும் சுவாரஸ்யமானவர்களாக, நம்மை ஆட்கொள்வனவாக, உண்மையானவையாக உள்ள அறிந்த உலகத்தின் விஷயங்களிலிருந்து அறியப்படாத புதிய உலகை உருவாக்குகிறேன். நாம் விஷயத்தின் முக்கிய கட்டத்தை நெருங்கி விட்டோம். நன்றாக எழுத, முதலில் கவனச் சிதைவின் மட்டில் சலிப்புற வேண்டும். கவனச் சிதைவின் மட்டில் சலிப்புற நிஜ வாழ்வுக்குள் நுழைய

வேண்டும். அங்கே ஓசைகளால் நான் பந்தாடப்படுகிறேன் ஒலிக்கும் பல்வேறு தொலைபேசிகளுக்கு நடுவே ஒரு அலுவலக அறையில் அமர்ந்திருப்பது, நண்பர்களும் அன்புக்குரியவர்களும் சூழ பிரகாசமானதொரு காலநிலை நிலவும் கடற்கரையில் இருப்பது, மழைநடுவே ஒரு சவ ஊர்வலத்தில் செல்வது - வேறு வார்த்தைகளில் சொன்னால், என்னைச் சுற்றி அந்தக் காட்சி நிகழத் துவங்கும் அந்தக் கணமே அந்த இடத்தில் நான் இருக்கும் நினைவு மறந்து ஓரத்தில் நின்று நிகழ்வனவற்றைப் பார்ப்பவனாகிவிடுகிறேன். பகல் கனவு காணத் துவங்குகிறேன். நம்பிக்கை வறண்ட மனநிலையாக இருந்தால் நான் எவ்வளவுசலிப்புற்றிருக்கிறேன் என எண்ணிப் பார்ப்பேன். எப்படியிருந்தாலும் எனக்குள்ளிருந்து ஒரு குரல் 'அறைக்குத் திரும்பிப் போய் மேசையில் உட்கார்' என விரட்டும். இந்தச் சூழ்நிலையில் மற்றவர்கள் என்ன செய்வார்களோ தெரியாது. ஆனால் இந்தச் சூழ்நிலைதான் என்னைப போன்றவர்களை எழுத்தாளர்களாக்குவது நான் யூகிப்பது, இந்தச் சூழ்நிலை கவிதையை நோக்கியல்ல உரைநடை மற்றும் புனைவை நோக்கிச் செலுத்துகிறது. இது நான் தினமும் உட்கொள்ள உறுதி மேற்கொள்ளும் மருந்தின் குணங்கள் மீது இன்னும் கொஞ்சம் ஒளியைப் பாய்ச்சுகிறது. மருந்தின் பகுதிப் பொருள்கள் சலிப்பு, நிஜவாழ்வு, கற்பனையில் காணும் வாழ்வு ஆகியனதான் என்பது நமக்குப் புலப்படுகிறது.

குறைந்தபட்சம், என்னைப்போன்ற நாவலாசிரியர்களுக்கு, எழுதுவதென்பது ஒரு ஆறுதல். ஒரு நிவாரணம் கூட எனத் தொடங்கும் எளிய தத்துவமொன்றை உங்கள் முன்வைக்க விரும்புகிறேன். எழுதப்போகும் விஷயத்தை நாங்களே தேர்ந்தெடுக்கிறோம். தினப்படி எங்களது பகல்கனவுத் தேவைகளையொட்டி நாங்களே எங்கள் நாவல்களை வடிவமைக்கிறோம். எண்ணங்கள், உணர்ச்சிப்பெருக்குகள், சீற்றங்கள், ஆசைகள் இவைகளால்தான் நாவல்கள் தூண்டப்பெறுகின்றன என்பதை நாம் அறிவோம். எங்கள் காதலியரை குஷிப்படுத்த, எதிரிகளை அவமானப்படுத்த, நாங்கள் போற்றும் ஒன்றைப் பற்றிப் பேச, அதைப்பற்றி ஒன்றுமே தெரிந்திராத நிலையில் அறிவார்த்தமாக அந்த விஷயத்தைப் பற்றிப் பேசி மகிழ்ச்சியடைய, தொலைந்துபோய் நினைவில் மட்டுமே எஞ்சிய காலங்களைக் குறித்து மகிழ, காதலுறவு கொள்வது போல கனவு காண அல்லது வாசிக்க அல்லது அரசியலில் ஈடபட, ஒருவரது தனிப்பட்ட கவலைகளைப் பேச, தெளிவானதும், புரியாததுமான இவையும் இவைபோன்ற வேறுபல புதிரான, சொல்லப்போனால் முட்டாள்த்தனமான ஆசைகள்தான் எங்களை வடிவமைக்கின்றன. அவை எங்கேயிருந்து வருகின்றன, எங்கள் பகல் கனவுகள் எதைக் குறிக்கின்றன என எங்களுக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால் நாங்கள் எழுத அமரும்போது எங்கிருந்தோ வரும் காற்றைப் போல எங்களுக்குள் உயிர் மூச்சை ஊட்டுபவை இந்தப் பகல்கனவுகள்தாம். எங்கே போகிறோம் என்பது தெரியாத மாலுமியைப்போல இந்த மர்மக் காற்றுக்கு நாங்களும் அடிபணிந்து விடுகிறோம்.

ஆனால் அதே நேரம் எங்கள் மனதின் இன்னொரு பகுதியில் நாங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை நினைவு கூர முடிவதைப் போல இப்போது எங்கே இருக்கிறோம் என்பதையும் வரைபடத்தில் மிகச் சரியாகச் சுட்டமுடியும். அந்தக் காற்றிடம் முழுமுற்றாக அடிபணிந்து விட்ட நேரங்களிலும் நான் மிகபபோற்றும் எழுத்தாளர்களை போல் பயணத்தின் திசை பற்றிய அறிவு என்னுள் நீங்காமல் இருக்கவே செய்கிறது. பயணம் புறப்படும் முன் நான் திட்டமிடுகிறேன், சொல்ல விரும்பும் கதையை பல பாகங்களாக பிரிக்கிறேன், என் கப்பல் எந்தெந்த துறைமுகங்களில் நிற்க வேண்டும், வழியில் என்னென்ன சரக்குகளை ஏற்ற வேண்டும், எவ்வெவற்றை இறக்க வேண்டும். என் பயணத்திற்காகும் நேரத்தைக் கணித்து பயண வழியை வரைபடத்தில் குறிக்கிறேன். ஆனால் அந்தக் காற்று எங்கிருந்தோ வீசி என் கப்பற்பாய்களை இழுத்து, என் கதையின் திசையை மாற்ற நினைத்தால் அதை நான் எதிர்க்க மாட்டேன். முழுமையான தனது பாய்களுடன் கப்பல் விழைவது முழுமையையும் கச்சிதத்தையும்தான். அனைத்தையும், எல்லாவற்றிலும் கலக்கக்கூடிய, எல்லாமும் ஒன்றோடொன்று தொடர்புடைய. எல்லாமும் வேறான எல்லாவற்றைப் பற்றியும் அறிந்திருக்கக் கூடிய அந்த விசேஷ இடத்தையும் காலத்தையும் நான் தேடுவதைப் போல சட்டென காற்று நின்று போகிறது. எல்லாமே அசைவற்றிருக்கும் ஓர் இடத்தில் நான் சலனமற்று நிற்கிறேன். பொறுமையாக இருந்தால் சலனமற்றும் கலங்கியும் கிடக்கும் இந்த நீரில் என் நாவலை முன்னெடுத்துச் செல்லும் விஷயங்கள் இருப்பதைக் கண்டறிவேன்.

நான் ஏங்குவது என்னுடைய snow நாவலில் நான் விவரிக்கும் ஆன்மீகத் தூண்டுதலைப் போன்ற ஒன்றுக்கு அது 'குப்ளாய்கான்' கவிதையில் கூல்ரிட்ஜ் குறிப்பிடும் அகத்தூண்டுதல் இல்லை என கூறமுடியாது. இந்த அகத்தூண்டுதல் (கூல்ரிட்ஜ்க்கும் snow நாயகன் காவுக்கும் கவிதைகள் வழி வருவதைப் போல ஒரு நாடகீயமான வழியில், ஒரு நாவலில் பொருந்தக் கூடிய காட்சிகள் மற்றும் சூழல்கள் மூலம் என்னை வந்தடைய வேண்டும். பொறுமையுடன் கவனமுடன் காத்திருக்கும்போது என் கனவு பலிக்கிறது. நாவல் எழுதுவதென்பது இந்த ஆசைகள், காற்றுகள், அகத்தூண்டல்கள், மனதின் இருள்பகுதிகள் மற்றும் அவற்றின் மூட்டமான அசைவற்ற கணங்கள் இவற்றிடம் மனம் திறந்து கொள்வதுதான்.

நாவலென்பது நமது கப்பற்பாய்களை இந்தக் காற்றுகளால் நிரப்புவது. அறியாத இடங்களிலிருந்து வீசும் அகத்தூண்டுதல்களால் தன்னைக் கட்டமைத்துக் கொண்டு நமக்கு பதிலிறுப்பது மாற்றம் வேண்டி நாம் கண்ட பகல் கனவுகளனைத்தையும் கைப்பற்றிக் கொள்வது. அனைத்தையும் அர்த்தமுள்ள ஓர் முழுமைக்குள் கொண்டு வருவது அல்லாமல் வேறெது? அனைத்திற்கும் மேலாக நாவலென்பது நாம் எப்போதும் உயிர்ப்புடனும், ஆயத்தமுடனும் வைத்திருக்க உதவும் ஒரு கனவு உலகத்தைத் தனக்குள்

கொண்டிருக்கும் ஒரு கூடையைப் போன்றது நாவலென்பது அதனுள் நுழைந்ததும் வலிமிகுந்த இவ்வுலகிலிருந்து நாம் மீள உதவுகிற சிறுசிறு பகல்கனவுகளால் பின்னப்பட்டது. தொடர்ந்து எழுத இந்தக் கனவுகள் மேலும் மேலும் துலக்கப்பெறுகின்றன. எழுத எழுத கூடைக்குள் இருக்கும் இரண்டாவது உலகம் விரிவடையத் தொடங்குகிறது. எல்லா விவரங்களும் கொண்டு முழுமையடைகிறது. எழுத்தின் வழியாகவே இந்த உலகை நாம் அறிந்தோம். எவ்வளவு சரியாக அதைப் புரிந்து கொள்கிறோமோ அந்த அளவுக்கு நமது தலைகளில் அதைச் சுமந்து செல்வது சுலபமாகிறது. நாவலின் பாதியிலிருந்தபடி நன்றாக எழுதிக் கொண்டிருக்கையில் அந்நாவலின் கனவுகளுக்குள் சுலபமாக என்னால் நுழைய முடியும். வாசிப்பதன் மூலம் மகிழ்ச்சியுடன் நாம் உள் நுழைய முடியும் புதிய உலகங்கள்தான் நாவல்கள். வாசிப்பதைவிடவும் எழுதுவது அவற்றுள் நுழைவதை இன்னும் மகிழ்ச்சியானதாக்குகிறது. தாம் விவரிக்க விரும்பும் கனவுகளை, வெகு இலகுவாக விவரிக்க விரும்பும் கனவுகளை தாங்கள் சுமந்து செல்ல ஏற்றவகையில் நாவலாசிரியர்கள் தங்கள் நாவல்களை வடிவமைக்கிறார்கள். நல்ல வாசகனுக்கு அவைகள் மகிழ்வளிப்பதைப் போல நல்ல எழுத்தாளனுக்கு ஒரு நாளின் எந்த நேரத்திலும் தன்னை அதனுள் தொலைத்து மகிழ்ச்சி காணக்கூடிய வலுவானதொரு புதிய உலகை அளிக்கின்றன. இத்தகு அற்புத உலகின் ஒரு சிறு பகுதியை என்னால் உருவாக்க முடிந்தால் கூட என் மேசையை நெருங்கி பேனாவையும் காகிதத்தையும் தொடும் அந்த கணத்தில் பெருமகிழ்ச்சியடைவேன். பழகிப்போன, சலிப்பூட்டும் இந்த உலகை சட்டென்று கைவிட்டு சுதந்திரமாக உலவ உதவும் பரந்தவெளியையுடைய அந்த உலகில் நுழைவேன். யதார்த்த உலகுக்குத் திரும்புவது அல்லது நாவலின் இறுதியை நெருங்குவது என்ற எண்ணமே வராது. இந்த உணர்வு நான் புதிய நாவலொன்றை எழுதுகிறேன் என அறியும்போது நல்ல வாசகனொருவனுக்கு உண்டாகும் மனநிலையுடன் தொடர்புடையது. "உங்கள் நாவல் நீளமானதாக இருக்கட்டும்" என்ற குரலை " நீளம் குறைவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்" எனக் கோரும் பதிப்பாளருடைய குரலைக்காட்டிலும் ஆயிரம் தடவைகள் அதிகமாகக் கேட்கிறேன் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தனி மனிதனொருவனின் சந்தோஷங்களிலிருந்து உருவாகும் ஒரு படைப்பு எவ்வாறு பல்லாயிரக்கணக்கான மற்றவர்களுக்கு ஆர்வமூட்டுவதாக உள்ளது? என்னுடைய My Name Is Red -ன் வாசகர்கள், எல்லாவற்றையும் விளங்கிக்கொள்ள முயல்வது ஒரு வகையான அறிவீனம் எனும் செக்கூரேயின் கருத்தை நினைவு கூர்வார்கள். இந்தக் காட்சியில் நான் மனமொத்துப் போவது என்னுடைய குட்டிக் கதாநாயகன் ஓரனுடன் அல்ல அவனை செல்லப் பரிகாசம் செய்யும் அவன் அம்மாவுடன்தான். இன்னுமொரு அறிவீனத்தைப் புரிய அதாவது, ஓரனைப் போல

நடந்துகொள்ள அனுமதிப்பீர்களேயானால் எழுத்தாளனுக்கு மருந்தாகப் பயன்படும் கனவுகள் வாசகனுக்கும் அவ்வாறே பயன்படக் காரணம் என்னவென்று விளக்க முற்படுவேன். ஒலிக்கும் தொலைபேசி, வாழ்வின் இடர்ப்பாடுகள், தேவைகள், துன்பங்களிலிருந்து தொலைவேயிருந்து நல்லபடியாக நான் எழுதிக் கொண்டிருந்தால் தன்னிச்சையாக மிதக்கும் என் சொர்க்கத்தை இயக்கும் விதிகள் எனது குழந்தைப் பருவத்து விளையாட்டுக்களை எனக்கு நினைவூட்டுகின்றன. எல்லாமே எளிமையாகிவிடுகின்றன. வீடுகள், கார்கள், கப்பல்கள், கட்டடங்களையும் என்னால் ஊடுருவிப் பார்க்க முடிகிறது. காரணம் எல்லாமே கண்ணாடியால் செய்யப்பட்டுள்ளதைப் போலுள்ளன. காரணம் அவை தங்கள் ரகசியங்களை எனக்கு சொல்லத் தொடங்கியுள்ளன. என்னுடைய வேலை விதிகளைச் சொல்லிவிட்டு கேட்டுக் கொண்டிருப்பதுதான். ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் நடப்பவற்றை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருப்பது, என்னுடைய கதை மாந்தர்களுடன் கார்களிலும் பஸ்களிலும் ஏறி இஸ்தான்புல்லைச் சுற்றிவருவது, என்னைக கண்ணீர் சிந்த வைத்த இடங்களை புதிய விழிகளோடு பார்ப்பது, இவ்வாறு செய்கையில் அவற்றை மாற்றுவது என் வேலை சந்தோஷமாக இருப்பது, காரணம் விளையாட்டில் ஈடுபட்டிருக்கையில் (குழந்தைகள் போல்) நான் எதையேனும் கற்றுக் கொள்கிறேன்.

கற்பனைத்திறன் மிக்க நாவலாசிரியனின் முக்கிய குணம் ஒரு குழந்தையைப் போல இவ்வுலகை மறந்துவிட முடிவதுதான். பொறுப்பற்றுத் திரிந்து அதில் சந்தோஷமடைவது, அறிந்த உலகின் விதிகளிடமும் சட்டங்களிடமும் விளையாடுவது. அதே நேரம் தன்னிச்சையான தனது கற்பனை ஓட்டங்கள் பிற்பாடு தனது வாசகர்களை நாவலுள் கட்டற்றுத் திரியவிடும் ஆழ்ந்த பொறுப்புணர்வையும் தொட்டுவர வேண்டும். நாள் முழுவதும் அவன் விளையாடிக் கழிக்கலாம். ஆனால் வேறு யாரைவிடவும் மிகுந்த பொறுப்புள்ளவன் என்ற எண்ணம் அவனுள் ஆழப் பதிந்திருக்கிறது. காரணம் குழந்தைகளைப் போல விஷயத்தின் மையத்தை நேரடியாக அவனால் பார்க்க முடிகிறது. ஒரு காலத்தில் சுதந்திரமாக விளையாடிய விளையாட்டுக்கு விதிகளை வகுக்கும் தைரியம் வந்த பிறகு தனது வாசகர்களும் அந்த விதிகளுக்குள், அந்த மொழிக்குள், அந்த வாக்கியங்களுக்குள் அதனாலேயே அந்தக் கதைக்குள்ளும் ஈர்க்கப்பட்டுவிடுவார்கள் என உணர்கிறான். நன்றாக எழுதுவதென்பது வாசகனிடம் "அதே விஷயத்தை நானே சொல்லப்போகிறேன், ஆனால் அந்த அளவுக்கு குழந்தைத் தனமாக இருக்க மாட்டேன்" எனச் சொல்வதுதான்.

நான் ஆராயும், உருவாக்கும், விரிவுபடுத்தும் இந்த உலகம் போகிறபோக்கில் விதிகளை வகுப்பது, எங்கிருந்தோ காற்று வந்து என் கப்பற்பாய்களை நிரப்பக் காத்திருப்பது, என் வரைபடத்தை ஆழ்ந்து நோக்கியபடி இருப்பது - இவையெல்லாம் எனக்கு மட்டுமே சொந்தமான குழந்தைத்தனமான அறியாமையிலிருந்து பிறந்தவை

இது எல்லா எழுத்தாளர்களுக்குமே நடக்கிறது. எழுத்து தடைபட்டு நிற்கும்போது திடீரென எழுதத் தூண்டும் ஒரு உந்துதல் தோன்றும் அல்லது முன்பு எழுதுகையில் இதே உந்துதல் தோன்றி அதை எழுத முடியாமல் போன நாவலின் பகுதிக்கு நான் திரும்புவேன். எல்லா எழுத்தாளர்களுக்கும் இந்த வாதை பொதுவானது. மற்றவர்களுடையதைக் காட்டிலும் என் துன்பம் குறைவானது என எண்ணுகிறேன். விட்ட அந்த இடத்திலிருந்து மீண்டும் தொடங்க முடியாமல் போகையில் நாவலில் இருக்கும் இன்னொரு இடைவெளியை நோக்கிப் போகிறேன். காரணம் என் வரைபடத்தை மிகக் கவனமாக நான் பார்த்திருக்கிறேன். என்னால் நாவலின் இன்னொரு பகுதியை எழுதத் தொடங்க முடியும். இது அவ்வளவு பெரிய விஷயமில்லை. கடந்த மழைக்காலம் பல்வேறு அரசியல் விவகாரங்களில் திக்கித் திணறிக் கொண்டிருக்கையில் இதே பிரச்சினை ஏற்பட்டது. அப்போது நாவல் எழுதும் விஷயத்தின் மீது ஒளியைப் பாய்ச்சும் ஏதோவொன்றைக் கண்டுபிடித்ததாக உணர்ந்தேன்.

என் மீதான வழக்கு, நான் மாட்டிக் கொண்ட அரசியல் சிக்கல்கள் நான் விரும்பியதை விடவும் கூடுதல் அரசியல் உணர்வுள்ள, அதிகக் கரிசனமுள்ள, பொறுப்புள்ள நபராக என்னை மாற்றியதை உணர்ந்தேன். வருத்தமேற்படுத்திய நிகழ்வுகள், அதைவிடவும் வருத்தமுற்ற மனம் - இதை ஒரு புன்னகையோடு சொல்லலாம். அது இன்றி எந்த நாவலும் சாத்தியமாகாது. குழந்தைத்தனமான அறியாமைக்குள் என்னால் நுழைய இயலாமைக்கு இதுதான் காரணம்.... "இது புரிந்துகொள்ளக்கூடியதுதான், எனக்கு இதுபற்றி வியப்பு ஏதும் இல்லை" சம்பவங்கள் மெதுவே தொடங்கியபோது நான் எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன். என் பொறுப்பற்றதனம், குழந்தைத்தனமான விளையாட்டுப் புத்தி, குழந்தைத்தனமான நகைச்சுவை இவையெல்லாம் ஒருநாள் திரும்பி வரும், அப்போது அமர்ந்து மூன்று வருடங்களாக எழுதிவரும் இந்த நாவலை நான் முடிக்க முடியும். இருந்தும் தினசரி காலை, பத்துலட்சம் இஸ்தான்புல்வாசிகளை விடவும் முன்னதாக எழுந்துவிடுவேன். நள்ளிரவின் மௌனத்துள் முடிக்கப்படாமல் அமர்ந்திருக்கும் நாவலுக்குள் நுழைய முயற்சிப்பேன். நான் என்னையே வருத்திக் கொண்டேன். காரணம் அன்புக்குரிய என் இரண்டாவது உலகத்துக்குள் நான் நுழைய முயன்றேன். மிகவும் வருத்திக் கொண்டபிறகு நான் எழுத விரும்பிய நாவலின் பகுதிகளை என் மூளைக்குள்ளிருந்து பிடுங்குவேன். பிறகு அவை தாமாகவே தம்மை எழுதத் துவங்குவதைக் காண்பேன். இவை நான் எழுதும் நாவலின் காட்சிகள் அல்ல, முற்றிலும் வேறான ஒரு நாவலின் காட்சிகள். வேலைப்பளுவும் வறண்ட மனநிலையுமான அந்தக்காலைப் பொழுதுகளில் என் முன்னே நான் காண்பது மூன்று வருடங்களாக நான் எழுதிக் கொண்டிருக்கும் நாவல் அல்ல. வேறொரு நாவலின் தொடர்ந்து வளர்ந்தபடியே இருக்கும் காட்சிகள், வாக்கியங்கள், கதாபாத்திரங்கள் மற்றும் விநோத விவரங்கள்தான். பிறகு ஒரு

குறிப்பேட்டில் இந்த வேறொரு நாவலின் பகுதிகளை ஒன்று சேர்த்தும், இதற்கு முன் எனக்குத் தோன்றாத எண்ணங்களைக் குறித்தும் வைக்கிறேன். இந்த வேறொரு நாவல் இறந்துபோன சமகால ஓவியர் ஒருவரின் ஓவியங்களைப் பற்றியதாக இருக்கும். அந்த ஓவியரை நான் மனக்கண்முன் கொண்டு வந்தபோதும் அவரது ஓவியங்களைப் பற்றி மட்டுமே என் சிந்தனை சென்று கொண்டிருக்கிறது. பல நாட்களுக்குப் பின், அந்தக் கடினமான நாட்களில் ஒரு குழந்தையின் விளையாட்டுத்தனத்தை ஏன் என்னுள் கொண்டிருக்க முடியவில்லை. இனியும் என்னால் குழந்தைத் தனத்துக்கு திரும்ப முடியாது, ஆனால் ஒரு ஓவியனாகி தொடர்ந்து ஓவியங்களை வரைந்தபடியே இருக்க கனவு கண்ட அந்த நாட்களுக்குத்தான் (இஸ்தான்புல்லின் நான் விவரித்தபடி) என் குழந்தைப் பருவத்துக்குத்தான் நான் திரும்பமுடியும்.

பிற்பாடு என் மீதான வழக்கு விலக்கிக் கொள்ளப்பட்டது. நான் மூன்று வருட காலத்தைச் செலவிட்டிருந்த Museum of Innocence நாவலுக்குத் திரும்பினேன். குழந்தைப் பருவத்துக்குத் திரும்ப இயலாமல் என் குழந்தைப் பருவத்து உணர்ச்சிகளுக்குத் திரும்பிய அந்நாட்களில் எனக்குள் தோன்றிய அந்த நாவலை எழுத இப்போது திட்டமிட்டுள்ளேன். இந்த அனுபவம் நாவல் எழுதுவதென்ற மர்மமான கலை பற்றிய முக்கிய விஷயங்களை எனக்குக் கற்றுத் தந்தது.

மிகப்பெரும் விமர்சகரும் இலக்கியக் கொள்கையாளருமான வுல்ஃப்காஸ் ஐஸரது 'உள்பொதிந்த வாசகன்' என்ற கொள்கையை எடுத்துக்கொண்டு - எனக்கேற்ற வகையில் சற்றே அதை மாற்றிக்கொண்டு - இதை நான் விளக்குவேன். ஐஸர் அற்புதமானதொரு வாசக மைய இலக்கியக் கொள்கையை உருவாக்கினார். ஐஸரது கொள்கைப்படி நாவலின் அர்த்தம் பிரதியிலோ, அதன் சூழல் பொருத்தப்பாட்டிலோ இல்லை இவை இரண்டுக்கும் இடையே எங்கோ ஓரிடத்தில் இருக்கிறது. ஒரு நாவலின் அர்த்தம் அது வாசிக்கப்படுகையில்தான் வெளிப்படுகிறது. உள்பொதிந்த வாசகன் எனக் குறிப்பிடும்போது அந்த வாசகனுக்கு சிறப்பானதொரு பணியை அவர் அளிக்கிறார்.

ஏற்கனவே எழுதிக் கொண்டிருந்த நாவலைத் தொடராமல் இன்னொரு நாவலின் காட்சிகள், வாக்கியங்கள், விவரங்களைக் கனவு கண்டுகொண்டிருந்தபோது இந்தக் கொள்கை எனக்குள் ஓடியது. அது எனக்குச் சொன்னது என்னவென்றால் எழுதப்படாத ஆனால் கற்பனை செய்யப்பட்ட, திட்டமிடப்பட்ட நாவலுக்கும் (வேறு வார்த்தைகளில் சொன்னால் முடிக்கப்படாத எனது நாவலுக்கும்) ஒரு உட்பொதிந்த ஆசிரியன் இருக்கிறான். அந்த நாவலின் உட்பொதிந்த ஆசிரியனாக மாறும்போதுதான் அந்த நாவலை என்னால் முடிக்க முடியும். அரசியல் விவகாரங்களில் நான் மூழ்கியிருக்கும்போது அல்லது - என்வாழ்வில் அடிக்கடி இவ்வாறு நிகழ்ந்துவிடுகிறது - என் எண்ணங்கள், பணம் செலுத்தப்படாத

எரிவாயு ரசீதுகள், ஒலிக்கும் தொலைபேசிகள், குடும்ப ஒன்று கூடல்கள் இவற்றால் சிதறிவிடுகின்றன. என் கனவுகளில் பொதிந்திருக்கும் நாவலின் ஆசிரியனாக என்னால் ஆக முடிவதில்லை. கடினமானதும் நீண்டதுமான அரசியல் ஈடுபாட்டு நாட்களில் நான் எழுத ஏங்கிக் கொண்டிருக்கும் அற்புதமான அந்தப் புத்தகத்தின் உட்பொதிந்த ஆசிரியனாக என்னால் மாற முடிவதில்லை. பிறகு அந்த நாட்கள் கடந்தன. நான் ஏங்கியிருந்தவாறே என் நாவலுக்குள் நுழைந்தேன். நாவலை முடிக்கிற தருணத்தை நெருங்கிவிட்டோம் என நினைக்கும்போது மகிழ்ச்சியாக உணர்கிறேன். (இந்த நாவல் ஒரு காதல் கதை. 1975க்கும் தற்போதைக்கும் இடையில், இஸ்தான்புல்லின் பணக்கார சமூகத்தில் அல்லது நாளேடுகளில் குறிப்பிடுவது போல 'இஸ்தான்புல் சமூகத்தில்' நடப்பது) இவற்றையெல்லாம் கடந்து வந்தபின், ஏன், கடந்த முப்பது ஆண்டுக்காலமாக என் எல்லா சக்தியையும் நான் எழுத ஏங்கும் புத்தகங்களுக்கு உட்பொதிந்த ஆசிரியனாக இருக்க செலவழித்திருக்கிறேன் எனப் புரிந்து கொண்டுள்ளேன். இது முக்கியமானது. ஏனென்றால் நான் பெரிய, தடிமனான, பகட்டான நாவல்களையே எழுத விரும்புகிறேன். அதோடு நான் மிக மெதுவாக எழுதுகிறேன். ஒரு புத்தகம் எழுதுவது பற்றிக் கற்பனை செய்வது கடினமல்ல. நான் அதிகமும் அவ்வாறு செய்கிறேன். என்னையே வேறு ஒரு நபராக நினைத்து கற்பனையில் அநேக நேரத்தை செலவிடுகிறேன். ஆனால் கடினமான விஷயம் உங்கள் கனவுப் புத்தகத்தின் உட்பொதிந்த ஆசிரியராக இருப்பதுதான்.

புகார்கள் எதுவும் வேண்டாம். ஏழு நாவல்களை வெளியிட்டுள்ள நிலையில், அது சற்றே வேலை வாங்குவது என்றாலும் கூட, நான் திடமாகச் சொல்வேன். என் கனவுகளிலுள்ள புத்தகங்களின் ஆசிரியனாகக் கூடிய திறமை எனக்கு இருக்கிறது. புத்தகங்களை எழுதிவிட்டு அவற்றைக் கடந்து வந்தது போலவே அந்தப் புத்தகங்களை எழுதக்கூடிய எழுத்தாளர்களின் ஆவிகளையும் கடந்து வந்துவிட்டேன். இந்த ஏழு உட்பொதிந்த ஆசிரியர்களும் என்னைப் பிரதிபலிப்பவர்கள் கடந்த முப்பது ஆண்டுகளில் இஸ்தான்புல்லினூடாக, என்னுடையதைப் போன்றதொரு ஜன்னல் வழியாக, வாழ்வையும் உலகையும் அறிந்தவர்கள். இந்த உலகில் உட்புறம் வெளிப்புறமாகவும், வெளிப்புறம் உட்புறமாகவும் இருக்கிறது என்பதை அறிந்தவர்கள். அதன்மட்டில் உறுதியாய் இருப்பவர்கள். அதனாலேயே விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் குழந்தையின் உள்ளார்ந்த அக்கறையுடனும், பொறுப்புணர்வுடனும் அதை விவரிக்கிறார்கள்.

இன்னுமொரு முப்பதாண்டு காலத்துக்கு என்னால் நாவல்களை எழுத முடியும் என்பதுதான் தற்போது என்னுடைய மிகப்பெரிய நம்பிக்கை. இதை சாக்காக வைத்து என்னைப் பல புதிய நபர்களுக்குள் பொருத்திக் கொள்வேன்.

ஆழ்கடல் நீச்சலும் சிதிலமடைந்த நினைவுகளும்

அ. முத்துக்கிருஷ்ணன்

வழக்கத்திலிருந்து சற்று மாறான அல்ல - நேர்மாறான கதை இது. சாகசம் புரியும் ஜேம்ஸ் பாண்டுகள் இதில் நகைச்சுவை கதாபாத்திரங்களாக மாறிப் போனார்கள். 50 ஆண்டுகளாக தொடர்ந்து தோல்வி, அடுக்கடுக்கான தோல்வி, மலை மலையாய் தோல்வி. சி.ஐ.ஏ வின் தலைமை அதிகாரிகள், ஊழியர்கள் என தோல்வியை தழுவியதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை கணக்கெடுத்தால் மிகப்பெரிய குடியிருப்பு பகுதியில் அவர்களை குடிவைக்கலாம்.

அமெரிக்காவில் வாழும் க்யூப அகதிகள் ஆயிரத்து ஐநூறு பேர் கொண்ட படை 1961ல் தெற்கு க்யூபாவுக்குள் நுழைந்தது. க்ரேஸ்போன் லின்ச், பேபெ சான் ரோமன், எர்னியோ ஒலிவா ஆகியோரின் தலைமையில் இந்தப் படை இயங்கியது. இந்தப் படைக்கான பயிற்சி, ஆயுதங்கள் என மொத்த நடவடிக்கையும் சி.ஐ.ஏ வால் உபயமாக வழங்கப்பட்டது. தகவல் அறிந்தவுடன் காஸ்ட்ரோ, சே குவேரா, அர்னல்டோ, ஒச்சோ சான்சான்சேச் ஆகியோரின் தலைமையிலான பெரும் படை ஏப்ரல் 15-19 க்குள் ஊடுருவியவர்களை அழித்தொழித்தது. 115 பேர் கொல்லப்பட்டனர், 1189 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். க்யூப படையிலும் இந்த

போர் ஆயிரம் வீரர்களை இழந்தது. ஜனாதிபதி கென்னடி தன் பதவி காலத்தில் இப்படி ஒரு அவமானத்தை சந்தித்ததே இல்லை. மௌனத்தில் உறைந்து பல நாட்கள் பத்திரிக்கையாளர்களை சந்திக்கவில்லை. அடுத்த சில தினங்களில் சிஐஏ வின் இயக்குனர் ஆலன் டலஸ் மற்றும் துணை இயக்குனர் சார்லஸ் கேபன் அமெரிக்க ஆளும் வர்க்கம் நிபந்தனையின் பேரில் ராஜினாமா செய்தனர். இந்த நடவடிக்கையைத் தான் Bay of Pigs Invasion என்பார்கள்.

சாகும் வரை கென்னடியின் ஆழ்மனதில் வடுவாய் தங்கிப்போன நிகழ்வு இது. இது போல் கடந்த ஐம்பது ஆண்டுகளில் சிஐஏ தொடர்ந்து தனது உலகளாவிய தோல்விகளை க்யூப மண்ணில் சந்தித்து வருகிறது. அமெரிக்காவின் நீண்ட நாளைய கனவு க்யூபாவில் உள்ள சோசலிச அரசை அப்புறப்படுத்துவது மற்றும் ஃபிடல் காஸ்ட்ரோவை கொல்வது.

இந்த நாவலின் ஒவ்வொரு பக்கமும் நகைச்சுவை நிறைந்தது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் 638 சந்தர்ப்பங்களில் உயிர் தப்பியுள்ளார் ஃபிடல். இதனை கணக்கு வைத்து விவரிக்கிறார் ஃபிடலின் பாதுகாப்பு அதிகாரி ஃபபியன் எஸ்கலன்தே. சமீபத்தில் பிரிட்டிஷ் தொலைக்காட்சி தயாரித்துள்ள ஆவணப்படம் இதை தெளிவாக விளக்குகிறது. அந்த படத்தின் பெயர் 'காஸ்ட்ரோவை கொல்வதற்கு 638 வழிகள்'.

காஸ்ட்ரோ விரும்பி புகைக்கும் சுருட்டு உலகப்புகழ் பெற்றது. சே மற்றும் காஸ்ட்ரோவின் அநேக புகைப்படங்களில் இந்த சிகாரை நீங்கள் காணலாம். இந்த சிகாரை புகைக்கும் பொழுது அது வெடித்து காஸ்ட்ரோவின் முகம் சிதறுவதாக திட்டம் தீட்டப்பட்டது. 1960 களில் சிஐஏ இப்படியான சிகாரை தயாரித்து விட்டதாக தகவல்கள் கசிந்தது. ஆனால் அந்த சிகார் எதுவும் காஸ்ட்ரோவை சென்றடையவில்லை. 1985 ல் காஸ்ட்ரோ புகைப்பதை நிறுத்திவிட்டதும், அமெரிக்காவின் இந்த திட்டமும் மூடு விழா கண்டது.

தினமும் 4-5 மணி நேரம் நீச்சலடித்து தனது அலுவலக அலுப்பை தீர்க்கும் பழக்கம் உள்ளவர் காஸ்ட்ரோ. அவருடன் ஐந்து - ஆறு மெய்க்காப்பாளர்கள் நீச்சல் அடிக்கும் காட்சி அவரைப் பற்றி வெளியான அனைத்து ஆவணப்படங்களிலும் இடம்பெறும். அதிலும் ஆழ்கடல் நீச்சல் (Scuba Diving) என்றால் அவருக்கு மிகவும் விருப்பம். சிஐஏ வின் திட்டம் வெடிமருந்துகளை வைக்க கூடிய அளவு பெரிய சிப்பியை கண்டெடுப்பது. காஸ்ட்ரோ அடிக்கடி நீச்சல் அடிக்கும் பகுதியில் அதை வைப்பது. அதில் கண்கவரும் வண்ணங்களைத் தீட்டுவது. காஸ்ட்ரோ ஆழ்கடல் நீச்சலில் ஈடுபடும் பொழுது இந்த சிப்பி அவரது கவனத்தை பெற்று, காஸ்ட்ரோ அதை நெருங்கி திறக்க முயற்சிக்கும் பொழுது வெடித்து காஸ்ட்ரோ கடலடியில் மரணத்தை தழுவுவார். இந்த

திட்டம்தோல்வியடைந்ததை ஒப்புக் கொண்டது கிளிண்டன் அரசாங்கம். இருப்பினும் காஸ்ட்ரோ உபயோகிக்கும் நீச்சல் உடையில் அபாயகரமான கிருமிகளை வைப்பது. அதை அணிந்தவுடன் அவருக்கு தோல் நோய்கள் வந்து அவர் இறப்பது. 'புதிய யோசனைகள் - புதிய தோல்விகள்' என்று தான் சிஐஏ அலுவலக வாசல் பலகையில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு முறை காஸ்ட்ரோவின் காதலியின் மூலம் அவரைக் கொல்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. அந்த பெண்மணியிடம் சிஐஏ விஷ மாத்திரைகளை கொடுத்தது. அந்த மாத்திரைகளை அவர் தனது முகப்பூச்சு களிம்புக்குள் மறைத்து வைத்திருந்தார். காஸ்ட்ரோ தூங்கும் பொழுது அவரது முகத்தில் இதை பூச வேண்டும் என்பது உத்தரவு. எப்படியோ இந்த பெண்ணின் நிழல் உறவுகள், திட்டங்கள் அறிந்த ஃபிடல், அவளிடம் தன் கை துப்பாக்கியை கொடுத்து "என்னை சுட்டுக் கொன்று விடு" என்றார். "என்னால் இது முடியாது" என அவர் துப்பாக்கியை காஸ்ட்ரோவிடம் கொடுத்து விட்டு சென்று விட்டார். அந்தப் பெண்தான் சிஐஏ வின் திட்டங்களை சுமந்து காஸ்ட்ரோவை நெருங்கிய முதல் மற்றும் கடைசி நபர். அந்த பெண்ணிடம் காஸட்ரோ குடிக்கும் காபியில் கலப்பதற்கான குச்சில்கொல்லி வில்லைகள் இருந்தன.

2000 த்தில் பனாமாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார் ஃபிடல். இங்கு அவர் உரையாற்ற இருந்த மேடையின் கீழ் தளத்தில் 90 கிலோ வெடிமருந்து இருந்ததை கடைசி நேரத்தில் க்யூப படை கண்டெடுத்தது. இது தொடர்பாக பல கைக்கூலிகள் கைது செய்து அடைக்கப்பட்டனர். இதில் லூயிஸ் போசாபோவும் கைது செய்யப்பட்டார். இவர் க்யூப வம்சாவளியை சேர்ந்தவர். அமெரிக்காவில் வசிக்கிறார். க்யூபா மற்றும் வெனிசுலா அரசாங்கம் இவரை பல வழக்குகள் தொடர்பாக தேடி வருகிறது. 1976 ல் இவர்தான் க்யூப விமானத்தை சுட்டு வீழ்த்தினார். இது போல் உலகம் முழுவதிலும் லட்சக்கணக்கான வழக்குகளில் தேடப்படும் கிரிமினல்கள் அமெரிக்காவின் ஃப்ளாரிடாவில் எல்லா சௌகர்யங்களுடன் வசித்து வருகிறார்கள்.

'பேனா வடிவிலான விஷ ஊசி' என இது போல் அமெரிக்க மூளைகள் புதிய வடிவங்களை, நுட்பங்களை சிந்தித்தவண்ணம் கடந்த ஐம்பது ஆண்டுகளை கழித்துள்ளது. நந்தவனத்தில் ஓர் ஆண்டி............

அபாயகரமான சூழ்நிலைகள், அச்சுறுத்தல்களால் ஃபிடலின் வாழ்க்கை சதா உருமாறிக்கொண்டேயிருந்தது. ஆட்சி பொறுப்பேற்று பல வருடங்கள் அலுவலக வேலைகளை முடித்துவிட்டு காலார நடப்பது, ஃபிடலின் வாடிக்கையாக இருந்தது. காலார நடப்பது, மக்களுடன் உரையாடுவது, நலம் விசாரிப்பது என உலகம் வியக்கும் அதிபராக தன் நாட்டு ஜனங்களின் ஆதர்சம் பெற்றவராக திகழ்ந்தார். அவருடைய மனவிருப்பத்திற்கு பாதுகாப்பு

அதிகாரிகள் தடை விதித்தனர். ஃபிடலை போல உருவம் உள்ள பலரை உதவியாகப் பயன்படுத்தினார்கள். ஃபிடலுக்கு ஹவானா நகரத்தில் 20 வசிப்பிடங்கள் இருந்தன. அவர் எங்கு வசிக்கிறார் என்பது சிதம்பர ரகசியம்.

நம் சூழலுடன் பொறுத்தி பார்த்தால் வேடிக்கையாக உள்ளது. உப்பு பெறாத அமைச்சருக்கு கூட பெண்டாட்டிகள், வைப்பாட்டிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து வீடுகள். எல்லா வீடுகளுக்கும் என சகல பாதுகாப்பு, பூனைப்படைகள் வேறு. சோதனை வேதனை எல்லாம் மனதில் தைக்கிறது.

கடந்த சில வாரங்களாக குடலில் ஏற்பட்ட ரத்தக் கசிவால் அறுவைசிகிச்சைக்கு பிறகு ஓய்வு எடுத்து வருகிறார் ஃபிடல். தற்காலிகமாக துணை ஜனாதிபதி ராவுல் காஸ்ட்ரோவிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்துள்ளார். ராவுல், ஃபிடல், சே இந்த மூவரும் தான் ஃபாடிஸ்டா அரசை வீழ்த்தி அங்கு சோசலிச கட்டுமானத்தை க்யூப மண்ணில் ஏற்படுத்தியவர்கள்.

க்யூப புரட்சிகர யுத்தம் துவங்கி களத்தின் முன்னணியில் இருந்து வருபவர் ராவுல். ஆனால் அவரது பணிகளை பின்னுக்கு தள்ளி அவரை ஃபிடலின் தம்பி என வாரிசு அரசியல் அளவுக்கு அமெரிக்க ஊடகங்கள் சித்தரித்து வருகிறது.

மறுபுறம் க்யூப கடல் எல்லைக்குள் ஏராளமான எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணெய் வளங்களை அபகரிக்க அமெரிக்க நிறுவனங்கள் எச்சில் ஒழுக காத்து நிற்கிறது. ஆனால் அமெரிக்க அரசாங்கத்தின் வர்த்தக தடைகள் அவர்களது கைகளை கட்டியுள்ளது. ஒரு வேளை ராவுல் ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் வர்த்தக தடைகளை தளர்த்தி - எங்களுக்கு ஃபிடல் ஆகாதவர், ராவுல் வந்தது உலக மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் செய்தி, இனி பொருளாதார தடைகள் இல்லை எனக் கூறி அமெரிக்க நிறுவனங்கள் க்யூப கடலில் நீந்தலாம். அந்த கதையை நாம் நேரடி ஒளிபரப்பாக பார்க்கலாம்.

மருத்துவமனையில் இருக்கும் ஃபிடலுக்கு பரிசு பொருட்கள், வாழ்த்துச் செய்திகள் குவிந்த வண்ணம் உள்ளது. காஸ்ட்ரோவை கொல்ல இதில் கூட பல மறைகருவிகள் இருக்கலாம். பாதுகாப்பு அதிகாரிகளின் பெரும்படை பொருட்களை சோதனையிட்டு வருகிறது. உலகம் முழுவதிலும் மக்களின் வாழ்த்துக்கள், பிராத்தனைகள் ஃபிடலை சென்றடைந்து கொண்டேயிருக்கிறது. குடிமைச் சமூக பொது புத்தியின் ஆதர்ச நாயகர் ஃபிடல் மீண்டும் நம்மிடையே உரையாற்ற வந்து கொண்டிருக்கிறார்.

ஆதாரம்
638 ways to kill Fidel Castro - Duncan Campbell - (Guardian Newspaper.)

ஹீப்ரு கவிதை

ஒரு கதை



டான் பாகிஸ்

ஒரு காலத்தில் நானொரு கதை படித்தேன்
ஒரு நாளே வயசான வெட்டுக்கிளி பற்றி
புல்மேல் தாவித்துள்ளிய மாலையில்
வெளவால் தின்றது அதனை

அதன் பின்னர் ஞானவானான கிழட்டு ஆந்தை
ஒரு சிறு இரங்கலுரை நிகழ்த்தியது
...வெளவால்கள் வாழத்தான் வேண்டியிருக்கிறது
இன்னும் ஏராளமான
வெட்டுக்கிளிகள் வாழ்ந்து கொண்டுதானிருக்கின்றன

நல்லது இதற்குப்பின்
கதை முடிவுக்கு வந்துவிட்டது : ஒரு காலிபக்கம்

நாற்பதாண்டுகளாகியும்
அந்த வெற்றுப்பக்கம் நெருங்கும்போதெல்லாம்
நடுங்குகிறேன் புத்தகத்தை மூடும் வலுவற்று

ஆங்கிலம் வழி தமிழில் **சேனானி**

புது எழுத்
தனிச்சுற்றுக்கு மட்டு



நகுப் மெஹ்பூஸ்

ஓரான் பாமுக்



மார்த்தா த்ராபா

கிரண் தேசாய்